

கல்கி
KALKI 29.8.1971
40 காசு

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

ஃபாஸ்ஃபோமின்®



ஃபாஸ்ஃபோமின், விடமின் பி காம்ப்ளெக்ஸ் மற்றும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகள் அடங்கிய விடமின் டானிக். அது உங்கள் குடும்பத்தினருக்கு வலிமை, புத்துணர்வு மற்றும் ஆரோக்கியம் அளிக்கிறது. ஃபாஸ்ஃபோமின் சாப்பிடத் தொடங்கினால், களைப்பும் சோர்வும் பறந்துவிடும். ஃபாஸ்ஃபோமின் சக்தியை அதிகரிக்கிறது. பசியைத் தூண்டுகிறது. வலிமைப் பெருக்குகிறது. நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட்டுகிறது. குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ உதவுகிறது.



ஃபாஸ்ஃபோமின்...
பழரஸ மணம் கமழும்
பச்சை நிற விடமின்
டானிக்.



SQUIBB® SARABHAI CHEMICALS.

® இந்தச் சின்னம் ஈ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் என்ற ஸ்தாபனத்தின் ரிஜிஸ்டர் செய்யப் பெற்ற ட்ரேட் மார்க் ஆகும். கே.பி.பி.எல். அதை உபயோகிக்கும் லைஸன்ஸ் பெற்றவர்கள்.

Shilpi-HPMA-31A/71 Tam.

கல்கி பொருளடக்கம்

விரோதிகிருது ஆவணி 13 - ஆகஸ்ட் 29, 1971



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்:	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 45-00	ரூ. 22-50

தமிழ்த் திருநாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
--- பாரதியார்

மலர் 31 ★ இதழ் 5

விலைக் கட்டுப்பாடு — வீணான யோசனை

புதுதில்லியிலிருந்து ஆகஸ்ட் 17-ந் தேதி வெளியாகியுள்ள செய்தி பின்வருமாறு கூறுகிறது:

> நடக்கின்ற நிதி வருடத்தில் புது வரிகள் விதிக்கப்படாத பண்டங்கள் உட்பட, பல பொருள்களின் விலை எக்காரணமுமின்றி உயர்ந்து வருவது குறித்து யூனியன் நிதி அமைச்சரகம் கவலை தெரிவித்துள்ளது. எனவே உசிதமான இனங்களில் எல்லாம் விலைகள் - விநியோகம் இவற்றுக்குக் கன்ட்ரோல் முறைகளை விஸ்தரிக்க அரசாங்கம் தயங்காது. அத்தியாவசியப் பண்டங்களின் விஷயத்தில் இது விசேஷமாகப் பொருந்தும்.

விலைகளுக்கும், விநியோகத்துக்கும் கட்டாயக் கட்டுப்பாடு விதிப்பது நடைமுறையில் எவ்வளவு வியர்த்தமாகிறது என்பது குறித்து எவ்வளவோ எழுதலாம். ஆனால் அவ்வாறு எழுத அவசியமில்லை. ஏனெனில், வேறு பல காரணங்களுக்காக செக்ரடேரியட் அதிகாரிகளும் மந்திரிமார்களும் வியாபாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதால் அவர்களே இவ்விஷயமாக முழு விளக்கமும் பெற முடியும்.

புதிதாக வரி உயர்வுக்கு இலக்காகாத பண்டங்களின் விலையும் உயருவதைப் பற்றித் தில்லி சர்க்கார் வியப்புத் தெரிவித்திருக்கிறதல்லவா? அதை மட்டும் கவனிக்கலாம். 'சில பண்டங்களின் மீது தான் புதிதாக வரி போடப்பட்டது; அல்லது பழைய வரிவிகிதம் உயர்த்தப்பட்டது. அப்படியிருக்க ஏன் எல்லாப் பண்டங்களின் விலையும் உயர்ந்துள்ளது?' என்று கேட்கிறார்கள். பண்டங்களைப் பல கூறுகப் பிரிக்கலாம். ஆனால் அவற்றை வாங்கி உபயோகிக்கும் மனிதனைக் கூறு போட முடியாது. மனிதன் பல பண்டங்களை வாங்குவது பல இனங்களில் தனது திருப்தியைப் பூர்த்தி செய்து கொள்வதற்கேயாம். ஓர் இனத்தில் திருப்தி தருகிற பண்டத்தின் விலை உயர்ந்து விட்டது என்றால் அதை வாங்காமல் வேறோர் இனத்தில் திருப்தி தருகிற ஒரு பொருளை வாங்குகிறான். உதாரணமாக, புடவை வாங்குவதற்காக ஓர் அம்மாள் கடைத் தெருவுக்குப் போகிறாள். அவள் கருத்துப்படி புடவையின் விலை அளவுக்கு மீறி உயர்ந்து விட்டது என்று தோன்றுகிறது. எனவே புடவை வாங்காமல், தன் பிள்ளைக்குச் சைக்கிள் வாங்குகிறாள். இப்படிப் பலர் சைக்கிள் வாங்கப் போனால், சைக்கிளின் தேவை அதிகமாகிறது. உடனே சைக்கிளின் விலையும் உயர்ந்து விடுகிறது. கார் டயரின் விலை உயர்ந்து விட்டது எனில், கார் சொந்தக்காரர் புது டயர் வாங்காமல் பழைய டயரையே புதுப்பிக்கிறார். இப்படிப் பலர் புதுப்பிக்க முற்படுகையில் புதுப்பிப்பதற்கான கட்டணமும் தானே உயர்ந்து விடுகிறது. அல்லது டயர் விலை உயர்ந்து விட்டபடியால் காரை உபயோகிப்பதை ஓரளவு குறைத்துக் கொண்டு, அந்த அளவுக்கு 'டாக்ஸி' வைத்துக் கொள்கிறார்களெனில், அப்போது டாக்ஸியின் தேவை அதிகமாகி, டாக்ஸிக் கட்டணம் உயருகிறது.

இயற்கை நியதிகளைச் சர்க்கார் உத்தரவின் மூலம் ரத்துச் செய்யவோ, தள்ளி வைக்கவோ முடியாது. பார்லிமென்ட் சட்டம் இயற்றி இயற்கை நியதிகளை மாற்ற முடியாது. மனிதனின் மனப் போக்குகளும், ஆசைகளும் இயற்கை விதிகளுக்கு அடங்கியவையே.

ஒரே இனத்தைச் சேர்ந்த பல பண்டங்களில் ஒன்றின் விலை உயர்ந்தால், அதே இனத்தைச் சேர்ந்த மற்றப் பண்டங்களின் விலையும் உயரக் கூடும் என்பதை அனைவரும் அறிவார்கள். அந்தப் பண்டத்தை வாங்கிய மனிதன் அதற்குப் பதிலாக அதே இனத்தைச் சேர்ந்த இன்னொரு பண்டத்தை வாங்குவான். 'நெய் விலை உயர்ந்தால், அதற்குப் பதிலாக எண்ணெய் வாங்குவான், எனவே எண்ணெய் விலை உயரக் கூடும்' என்பதை எல்லாரும் அறிவார்கள். ஆனால் இப்படித்தான் நடக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. 'திருப்தி' என்பதுதான் மனிதன் பல பண்டங்களை உபயோகிப்பதிலிருந்தும் பெற விரும்புவது. ஒரு வஸ்துவின் விலை உயர்ந்து, அதை

வாங்குவதை நிறுத்துகிற மனிதன், அதே இனத்தைச் சேர்ந்த இன்னொரு வஸ்துவால் தான் இந்தத் 'திருப்தி'யைப் பெற முடியும் என்பதில்லை. முற்றிலும் தொடர்பே இல்லாத எத்தனையோ பண்டங்களை உபயோகிப்பதால் திருப்தி அடைகிற மனிதன், ஒரு வஸ்துவை வாங்க முடியாதபோது, அதற்குச் சம்பந்தமே யில்லாத இன்னொரு வஸ்துவை வாங்க விழை கிறான். மனித மனத்தின் திருப்தி என்பது வரையறுத்துப் பார்க்க முடியாத ஒன்று. எனவேதான் வரி விதித்தால் சில பண்டங் களின் விலையே நேரடியாக உயர்ந்தாலும், அவற்றுக்குப் பதிலாக மக்கள் வேறு வேறு பண்டங்களை வாங்க முற்படுவதால் பொது வாக எல்லாப் பொருட்களின் விலைவாசியும் பாதிக்கப் படுகிறது. ஆனபடியால் ஏறக் குறைய ஒரே தேவையைப் பூர்த்தி செய்யும் பண்டங்களின் விலைமட்டுமே ஒன்றுக்கொன்று தொடர்புள்ளது என்று நினைப்பது சரியல்ல. மனிதனைக் கூறு போட முடியாது என்பது போல் எல்லாப் பண்டங்களையும் கொண்ட வியாபாரத் தொழிலையும் கூறு போட முடி யாமலே இருக்கிறது. அதை அரசாங்கத்தின் முடிவுகளால் கட்டுப்படுத்த இயலாது.

இப்படிப்பட்ட நிலையில் எந்தெந்தப் பண் டங்களுக்குக் 'கன்ட்ரோல்' விதித்துச் சர்க் காரால் விலை உயர்வைத் தடுக்க முடியும்? கன்ட்ரோல் விதித்தால் சூது வாது அதிக மாகும். சூது வாதைத் தடுக்க மேலும் கன்ட் ரோல் ஓங்கும். பண்டங்கள் நிறைய உற்பத்தி யானாலும் பதுக்கப்படும். தட்டுப்பாடுகள் செயற்கையாகச் சிருஷ்டிக்கப்படும். கள்ளச் சந்தைகளும் மோசடிகளும் பெருகும். இந்த விளைவுகளை அரசாங்கம் விரும்பாவிட்டாலும் கூட, அரசாங்கக் கட்டுப்பாடு ஏற்பட்டால் இவையனைத்தும் நிச்சயமாக ஏற்பட்டே தீரும்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

அர்ச்சனையும் மொழியும்

கோவில் சொத்துக்கள் முறைப்படி நிரு வகிக்கப்படுகின்றனவா என்று மேற்பார்வை செய்வதற்கு மட்டுமே அரசாங்க இலாகா வான ஹிந்து மத அறக்கட்டளை போர்டு அதிகாரம் பெற்றிருக்கிறது. அது கோயிலில் நடக்கும் சடங்குகளின் விஷயத்தில் பிர வேசிக்க இடம் தந்துவிட்டால் அபாயமாகும். இதை முன்பே எடுத்துக்காட்டி யிருந்தேன்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி இத் தகைய தலையீடு செல்லத் தக்கதல்ல என்று ஸ்ரீ எம். ஏ. ஸ்ரீநிவாசன் "ஹிந்து"வில் (ஆக. 18) எழுதியுள்ள நீண்ட கட்டுரையில் விளக்கி யிருக்கிறார். சிரூர் மட வழக்கில் ஸுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பை மேற் கோள் காட்டி அவர் எழுதியிருக்கிறார்.

இறுதியாக அவர் கூறுவது:

அரசியல் சாஸனத்தின் 25ம் பிரிவும் 26ம் பிரிவும் "மத விஷயங்களிலும்", "மத அநுஷ்டானங்களிலும்" சர்க்காரின் தலையீடற்ற சுதந்திர உரிமையை மக்க ளுக்கு வழங்கியுள்ளன. ஆலய அர்ச்சனை என்பது தொன்றுதொட்டு "மத அநுஷ் டான"ங்களின் ஓர் அங்கமாக வந்துள்ளது. ஒவ்வோர் ஆலயத்திலும் அர்ச்சனை கிரந் தங்கள் சம்பிரதாயப்படி வந்துள்ளன. பல காலமாக சேவார்த்திகள் இந்த அர்ச் சனை கிரந்தப்படியே வழிபாடு செலுத்தி வருகின்றனர். எனவே இது 'மத அநுஷ் டானம்' என்பதிலேயே அடக்கம். இதில் புதுமையைப் புகுத்துவது அரசியல் சாஸ னப்படி சமய சுதந்திரத்துக்கு முரணாகும்.

பிரார்த்தனை மொழி குறித்து காந்தி யடிகளின் கருத்தை நினைவுகூர்வது பொருத்தமாகும். ஒருவர் தாய்மொழியி லேயே பிரார்த்தனை புரிவது சாலச் சிறந்த தல்லவா என்ற கேள்விக்கு, "யங் இந்தி யா"வில் (ஜூன் 10, 1926) காந்திஜீ பின் வருமாறு விடை கூறுகிறார்:

வருந்துகிறோம்



வில்வாத்ரி ஐயர் அவர்களின் விரல்கள் கொட் டிய தாள வித்தையை இனி இசையுலகு அநுபவிக்க முடியாது. புகழ் கொண்ட கட வாத்திய வித்வா னான ஸ்ரீ வில்வாத்ரி ஐயர் நீண்ட காலம் நோய் வாய்ப்பட்டிருந்து, சிரமதசையில் அவதியுற்று, பிற் பாடு கடைசிக் காலத்தில் ரசிகர்களின் அன்பான போஷணையில் சிகிச்சை பெற்றார். ஆயினும் கால கதிக்கு யாரே தப்ப முடியும்?

பெரிய வித்வான்கள் பலருக்கும் பக்கவாத்தியமாக நாடெங்கும் இசை மேடைகளில் இடம் பெற்று ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றவர். சுமார் முப்பதாண்டுகள் வானொலி நிலையத்தில் பணியாற்றி யவர். பல சிஷ்யர்களை உருவாக்கி முன்னுக்குக் கொண்டு வந்தவர். தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் விருது பெற்றவர்.

பழம் பெரும் வித்வானான ஸ்ரீ வில்வாத்ரி ஐயரின் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அநுதாபங்கள்.

'நம்மைப் படைத்தவனுடன் ஒன்றிவிட வேண்டும், அவனுடைய அநுக்கிரகத்தைப் பெற வேண்டும் என்று இதயத்தில் எழும் வேட்கையே பிரார்த்தனை என எண்ணுகிறேன். இந்த நிலையில் மனோபாவம்தான் முக்கியமே தவிர, வார்த்தையல்ல. ஆயினும் புராதன காலத்திலிருந்து வழிவழியாக வந்துள்ள வாக்குக்கு ஒரு தனி சக்தி இருக்கத்தான் செய்கிறது. இப்படிப்பட்ட வாக்குகளைத் தாய்மொழியிலே பெயர்த்தால் அந்தச் 'சக்தி அடியோடு போய்விடும். உதாரணமாக, காயத்ரி மந்திரத்தை குஜராத்தியில் மொழிபெயர்த்து ஜபித்தால் அதற்கு மூலமான மந்திரத்தின் சக்தி இராது. 'ராமா' என்கிற வார்த்தையைச் சொன்ன மாத்திரத்திலேயே கோடாநுகோடி இந்தியர்களுக்கு ஓர் உணர்ச்சி பிறக்கிறது. 'God' என்று சொன்னால் — அந்த வார்த்தையின் அர்த்தம் அவர்களுக்குத் தெரிந்தாலும் கூட — இத்தகைய உணர்வு ஏற்படாது. நீண்ட கால வழக்கில் வந்திருப்பதாலும், அதோடு இணைந்து வந்துள்ள புனிதத் தன்மையை நினைப்பதாலும் வார்த்தைகளுக்கு ஒரு சக்தி உண்டாகிறது. எனவே இப்போது வழக்கில் பரவியுள்ள பல மந்திரங்கள், சுலோகங்கள் ஆகியவற்றின் விஷயத்தில் பழைய சம்ஸ்கிருத வாசகங்களையே பின்பற்ற வேண்டும் என்று சொல்வதற்கு நிறைய ஆதாரம் உள்ளது.'

சிரத்தை, நம்பிக்கை இவற்றையே அடிப்படையாகக் கொண்ட ஒரு விஷயத்தில் மொழிப் பிரச்னையைப் புகுத்துவது சரியுமல்ல, முறையும் அல்ல.

பாகிஸ்தான் பிரச்னை

பாகிஸ்தானில் நடக்கும் உள்நாட்டுப் போர் நிரந்தரமாக நீடித்துக் கொண்டிருக்க முடியாது. எதிர்த் தரப்பினர் எண்ணிக்கையில் தங்களுக்குச் சமமாக — அல்லது அதிகமாகவே கூட — இருக்கும் போது அவர்களைப் பூண்டோடு அழித்து வெற்றி காணலாம்







என்று அறிவுள்ள எந்த அரசாங்கமும் நினைப்பதற்கில்லை. எனவே கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னை தீருவதற்கான பேச்சு வார்த்தைகளை விரைவுபடுத்துவதே விவேகமாகும். குட்டையை மேலும் குழப்புகிற காரியத்தில் இந்தியா இறங்கினால், பிரச்னை தீர அது உதவாது. பெரிய வல்லரசுகள் என்ன செய்கின்றன" என்று இந்தியா பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

வளரும் யதேச்சாதிகாரம்

ஆள்கிற கட்சியினருக்கும் தொழில்துறையினருக்கும் உள்ள ஊழல் மயமான தொடர்புகளைக் குறைப்பதே இப்போது செய்ய வேண்டிய காரியம். இதற்கு நேர்மாறாக, ''கம்பெனி விவகார இலாகா'' என்பதாக ஒன்று தில்லியில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. அதனுடைய பயமுறுத்தலுக்குப் பத்திரிகைத் துறை இலக்காகி உள்ளது. பெரிய பத்திரிகைகளைச் சித்திரக்குள்ளர்களாக்க விரும்புகிறது கம்பெனி விவகார இலாகா. பெரிய பத்திரிகைகளை நடத்துவது மிகக் கடினமான காரியம். நல்ல முதலீட்டுடனும், சுமுகமான யஜமானர் – தொழிலாளர் உறவுடனும் இப்படிப்பட்ட பத்திரிகைகள் நடக்காவிடில் பத்திரிகைத் துறை பலமிழந்து போகும். சட்டம் போட்டுப் பெரிய பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தி விட்டால், அதன்பின்– மத்திய மாநில அரசாங்கங்கள் இன்றைவிட அதிக யதேச்சாதிகாரம் பெறும். தற்போது பொருளாதாரத்தில் நிலைத்துவிட்ட யதேச்சாதிகாரமானது சிந்தனைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் இவற்றின் மீதும் பரவிவிடும். இந்த ஆட்சியை வாய்மூடிச் சகித்து வருவோரும், ஆட்சியாளருக்கு நன்கொடை அளிப்பவர்களும் ஜனநாயக விரோதிகளாவர்; தேச சுபிட்சத்தின் விரோதிகளாவர்; மனித உரிமைகளின் விரோதிகளாவர்.

கொள்முதல் ''கொள்கை''

உணவுப் பொருட்களின் விளைச்சல் பெருகியிருக்கும்போது, சர்க்கார் தானியக் கொள்முதல் செய்வதை நிறுத்திவிட வேண்டும். தானியக் கொள்முதல் என்பது சந்தர்ப்பச் சூழ்நிலையைப் பொறுத்த விஷயமேயன்றி, நிரந்தரக் கொள்கை அல்ல. உற்பத்தி பெருகியுள்ளபோது தானியங்களின் விநியோகம், அவற்றைப் பாழாகாதவாறு கிடங்குகளில் சேமித்து வைப்பது ஆகிய காரியங்களை வர்த்தகத் துறைக்கே விட்டுவிட வேண்டும். ஒரு மைய ஸ்தானத்திலிருந்து இந்த விவகாரத்தை இயக்கும் சர்க்கார் தனது தலையீட்டை நிறுத்திக் கொண்டு, உணவுப் பண்ட விநியோகம் சுதந்திரமாக நடக்க அனுமதித்தாலே பாதிப் பிரச்னை தீர்ந்துவிடும். மீதமுள்ள பாதியையும் அந்தந்தப் பகுதிகளிலுள்ள மொத்த – சில்லறை வியாபாரிகள் தங்களது தொழிலறிவாலும் அநுபவத்தாலும் தீர்த்துவிடுவர். சர்க்கார் கொள்முதலைக் கைவிட்டுச் சுதந்திர வர்த்தகத்துக்கு வழி செய்வதால் தேசப் பொருளாதாரமே செழிக்கும்.

வறட்டுக் கொள்கைப் பிடியிலிருந்து பகுத்தறிவை விடுவிப்பதும், சுயநலக் கட்சிக்காரர்களிடமிருந்து நிர்வாகத்தை விடுவிப்பதும் இன்று நம் நாட்டில் சுபிட்சம் ஏற்படுவதற்கும் ஜனநாயகத்தில் மக்களுக்கு நம்பிக்கையை வளர்ப்பதற்கும் அத்தியாவசியமாகும். இந்தியாவில் சட்டசபை ஜனநாயகம் வெற்றி பெறக் கூடாது என்று எண்ணினாலே என் யோசனையைப் புறக்கணிக்கலாம்.

அபிராமி அந்தாதி போட்டிப் பரிசு

நாளது விஜயதசமியன்று ஆங்காங்கு அபிராமி அந்தாதி போட்டிப் பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்பது 'காமகோட்டம் அபிராமி அந்தாதிக் குழு'வினரின் விருப்பம்.

அபிராமி அந்தாதியிலுள்ள நூறு பாடல்கள், மூகபஞ்சசதியில் உள்ள ஆர்யா சதகம் நூறு சுலோகங்கள், காமாட்சி தாசரின் மேற்படி ஆர்யா சதக தமிழாக்கம் நூறு பாடல்கள், – ஆகியவற்றில் போட்டி நடைபெற வேண்டும்.

இதில் கலந்து கொள்ள விரும்பும் மாணவ மாணவிகள் தங்களது ஆசிரியர்கள் அல்லது பள்ளி நிர்வாகிகள் மூலம் ஆகஸ்டு 31ந் தேதிக்குள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். மேற்கண்ட முந்நூறு பாடல்களும் அடங்கிய நூல் இலவசமாக அனுப்பப்படும்.

முந்நூறு பாடல்களையும் பிழையின்றி மனப்பாடம் செய்து தேர்ச்சி பெற்றதாக, ஆங்காங்கு இப்போட்டிக்கு ஏற்பாடு செய்யும் ஆசிரியர்கள் அல்லது கல்வி நிலைய நிர்வாகிகளால் சிபாரிசு செய்யப்படும் மாணவ, மாணவிகளுக்கு அம்பிகையின் உருவம் பதிக்கப் பெற்ற பொற்காசு ஒன்று ரட்சையாக அளிக்கப்படும். இருநூறு பாடல்களை மனப்பாடம் செய்தவர்களுக்கு அம்பிகையின் உருவம் பதிக்கப்பெற்ற வெள்ளிக் காசு ஒன்றும், நூறு பாடல்கள் மட்டும் மனப் பாடம் செய்தவர்களுக்கு அம்பிகையின் உருவம் பதிக்கப்பெற்ற டாலர் ஒன்றும் ரட்சையாக அளிக்கப்படும்.

இயன்றவர்கள் தபால் வில்லைகள் அனுப்பலாம். அனுப்ப வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஊக்கமுள்ள ஆசிரியர்கள் இப்பணியில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விண்ணப்பித்துக் கொள்ள வேண்டிய முகவரி : **பொறுப்பாளர், காமகோட்டம் அபிராமி அந்தாதிக் குழு, 51, பட்டமங்கலத் தெரு, மாயூரம், தஞ்சை ஜில்லா.**

பகவான் ரமணர்

[பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள் இளம் பருவத்திலேயே வீட்டைத் துறந்து வெளியேறித் திருவண்ணாமலையில் வந்து புகுந்த புண்ணிய தினம் ஆன்மிக சரித்திரத்தில் ஒரு பொன்னாளாகும். இந்த செப்டம்பர் முதல் தேதியன்று ஸ்ரீ ரமணர் திருஅருணை புகுந்து முக்கால் நூற்றாண்டு முடிகிறது. அவரது திரு உருவத்தை இவ்விதழ் அட்டையில் வெளியிட்டு அஞ்சலி செலுத்துகிறோம். சமீபத்தில் தில்லி ரமண கேந்திரத்தில் பேராசிரியர் ஸ்ரீ கே. ஸ்வாமிநாதன் அவர்கள் நிகழ்த்திய அரிய உரையின் சாரத்தை இங்கு நேயர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். - ஆசிரியர்]

ஸ்ரீ ரமணர் சூரியனைப் போல அனைவருக்கும் பொதுவான ஞானப் பிழம்பாவார். அவரிடமிருந்து ஜொலித்த சத்தியம் சூரியனைப் போலவே மிகப் பழம்பொருளாகும். ஆனாலும் ஒவ்வொரு நாளும் நூதனமாக உள்ள சூரியோதயம் போல் அவரிடமிருந்து பெருகிய சத்திய ஒளி என்றும் இளமையுடன் இலங்கியது.

இந்திய முனிவர்கள் பெற்ற திவ்விய அநுபூதியின் சாரம் யாதெனில்—மோக்ஷம் என்பது காலத்தாலும், இடத்தாலும் எங்கோ தொலைவில் பெறப்படுவது அல்ல என்பதே. மோக்ஷம் என்பதே நமது சகஜநிலை — இயல்பான நிலை.

இருளில் ஆழ்ந்து உறங்கும்போது 'நான்' என்ற உணர்வே இன்றி இருப்பதை வரவேற்று மகிழ்கிறோம் அல்லவா? அவ்வாறே ஒளியில் விழித்திருக்கும் போதும் நானற்று ஆத்மாவோடு ஒன்றிக் கிடக்கும் நிலையை அடைந்து விட்டால் அதுவே மோக்ஷம். இரண்டாவதாக இன்னொன்றை உணராத நிலை, பூரணத்துவ நிலை, நானற்ற சுதந்திர நிலை, இதுவே நம் உண்மை இயல்பு. இதுவே மோக்ஷம். நமக்குள்ளே சூரியப் பிரகாசத்துடன் இந்த மோக்ஷ நிலை எப்போதும் விளங்குகிறது. அதற்கு உதய அஸ்தமனங்கள் இல்லவே இல்லை. இந்த ஆத்ம ஜோதியின் சின்னம் அல்லது பிரதிபிம்பமே வெளியுலகில் நாம் காணும் சூரிய ஜோதி. ''எல்லா ஜீவ ராசிகளுடைய இதயத்திலும் வீற்றிருக்கும் ஆத்மாவே நான். ஜீவராசிகளின் ஆதியும், அந்தமும், நடுவும் நானே'' என்று இதையே கீதாசாரியன் கூறினார். இதையே உலகுக்கு சாசுவதமாகப் புத்துயிரூட்டும் பீஜமந்திரமாகக் கருதினார் ஸ்ரீ ரமணர்.

தன்னைத் தானே உணருவதில் புராதன பாரதம் கண்ட வழியே இன்றும் நேரடியான, நடைமுறை சாத்தியமான, அறிவுக்குப் பொருந்திய, நவீன மார்க்கமாக விளங்குகிறது. அவரவரும் புலன்கள் என்னும் சாளரங்களைத் தூய்மைப்படுத்திச் சித்தத்தைச் சுத்தம் செய்து கொண்டு தனக்குத் தானே மனித ஆன்மாவின் தெய்விகத்தைக் கண்டு கொள்வதுதான் இந்த மார்க்கம்.

புராதனமான வேதாந்தமும், பௌத்த குருமார்களும் ஆத்மாநுபவத்துக்குக் கூறிய வழிமுறைகளை அப்படியே நம் கண்ணுக்கு முன்னால் வாழ்ந்து காட்டி உறுதிப்படுத்தி விருப்பவர் ஸ்ரீ ரமண மகரிஷி. அவரது சாந்தியிலேயே ஒரு சக்தி உண்டு. கலப்பற்றதும் முடிவற்றதுமான அவரது ஆனந்த நிலை சாதகர்களையும், பண்டிதர்களையும் மட்டுமின்றிக் குழந்தைகளையும் பாமரர்களையும் விலங்குகளையும் பட்சிகளையும்கூட மந்திரத்தில் கட்டியது போல் ஆகர்ஷித்தது. இன்றும் திருவண்ணாமலை ரமணாச்ரமத்தில் அந்த சாந்தியை ஒரு ஸ்தூலப் பொருள் போல உணர முடிகிறது: புகைப்படத்திலும் பிரகாசத்துடன், அமைதியுடன், ஆழ்ந்து துளைத்துச் செல்லும் அன்னையன்பு கொண்ட அந்தக் கண்கள் காண்போர் இதயத்துக்கு ஆறுதல் அளித்து, வாழ்வு அளித்து, தூய்மை கூட்டுகின்றன. இன, மத வேறுபாடின்றிச் சாதகர் அனைவரது ஐயங்களையும் தீர்ப்பது அவரது அருள்வாக்கு.

'' நான் யார் ?'' என்று விசாரித்துத் தெரிந்து கொள்வதே மோக்ஷம் என்பது அவரது உபதேசம். இதுவே சாதகர்களின் பலவித சந்தேகங்களுக்கும் அவர் விடுத்த பிரம்மாஸ்திரமான ஒரே விடை. 'நான் யார்' என்பதற்கு வாய்மொழியில் விடைகூற வொண்ணாது. அதற்கு விடையைப் பற்றற்றுக் கருமம் புரிந்து, மேலும் மேலும் ஆழ்ந்த தியானம் புரிவதாலேயே காண முடியும். 'நான் யார்' விசாரணையில் இறங்கினாலே கர்மத்தில் பற்றுக் குறைந்து, தியானம் ஆழமுள்ளதாகத் தொடங்கும். இது சம்பிரதாய சமயவாதி, நவீன மனப்பான்மையாளர் ஆகிய இருபாலாருக்கும் உகந்த மார்க்கம்.

சூரிய வெளிச்சத்தைப் பரப்பத் தனி ஸ்தாபனங்கள் தேவையில்லை. ஒவ்வொரு விருட்சமுமே ஒரு சூரிய கேந்திரம்தான். இவ்வாறே 'ரமண கேந்திரம்' ஒன்று தில்லியில் விரைவிலேயே சிறப்புடன் அமைய இருந்தாலும், சாதகர் ஒவ்வொருவரும் ரமண கேந்திரமாக வேண்டும். சூரிய கேந்திரமான விருட்சத்தின் ஒவ்வோர் இலையும் தன் பிறந்த வீடாகிய மண்ணுக்கு விசுவாசமாக உள்ள போதே, விண்ணுக்கும் விசுவாசமாக உள்ளது. இலைக்கும் மரத்துக்கும் உள்ள ஞானம் தனிமனிதனுக்கும், சமூகத்துக்கும் இல்லையா என்ன ? மண்ணிலே வேரூன்றி உலகியல் கருமங்களை அவன் செவ்வனே செய்து கொண்டே ஆன்ம வெளியின் ஒளியிலும் முழுகி யிருக்கவேண்டும்.

மரம் மண்ணில் வேர் ஊன்றியுள்ள பாங்குக்கு மகாத்மா காந்தி உதாரண புருஷரானார்; மரம் அகண்ட வெளியின் வெளிச்சத்தைத் தனதாக்கிக் கொள்வதற்கு ரமண மகரிஷி உதாரணமானார். உலகியல் கருமம் என்பது ஆன்மாநுபூதிக்கு அடக்கமே என ரமணரும் காந்தியும் உணர்ந்திருந்தனர். காந்திஜி தர்மப் பாதையில் நம் நாட்டவர் செல்ல வேண்டும் என விரும்பித் தாமே அந்த மலைப் பாதையில் விரைவுடன் முன் நடந்தார். அந்தக் கருமப் பாதையில் காலத்தை வென்ற ரமண ஞானம் ஒளியைப் பொழிந்து, பயணத்தை எளிதாக்குகிறது.

மகுடபதி



அமரர் கல்கி

இருபத்தோராம் அத்தியாயம்

"தம்பி! நீதானா?"

"அய்யாசாமி முதலியார் பங்களா வாசலில், நள்ளிரவில் மகுடபதியின் முன்னால் தோன்றிய உருவம் உண்மையில் பெரியண்ணனுடைய ஆவி உருவம் அல்லவென்றும், பெரியண்ணனேதான் என்றும் வாசகர்கள் ஊகித்திருப்பார்கள்.

பெரியண்ணன் கத்திக் குத்துக்கு ஆளாகிக் கீழே விழுந்தபோதுதான் கடைசியாக மகுடபதி அவனைப் பார்த்தானானாலும், நள்ளிரவில் எதிர்பாராதபடி திடீரென்று அவன் உருவம் தோன்றியபடியாலும், மகுடபதி அவ்விதம் வெட வெடத்து நிற்கும்படியாயிற்று. ஆனால் அறிவாளியாதலால் விரைவிலேயே அவனுடைய பயம் நீங்கி, மனம் தெளிந்தது.

"தம்பி! நீதானா?" என்று பெரியண்ணனுடைய குரல் கூறியதும், மகுடபதியின் ஐயம் அறவே நீங்கியது.

"ஆமாம், பாட்டா! நான்தான். பிழைத்திருக்கிறாயா?" என்று சொல்லிக்கொண்டே பெரியண்ணனை ஆர்வத்துடன் கட்டிக் கொண்டான் மகுடபதி.

"பிழைத்திருக்கிறேன், தம்பி! இந்தக் கிழவனுக்கு உயிர் ரொம்பக் கெட்டி" என்றான் பெரியண்ணன்.

* * *

பெரியண்ணனுக்கு உயிர் உண்மையாகவே ரொம்பக் கெட்டி என்பதில் சந்தேகமில்லை. அவனால் சில முக்கியமான காரியங்கள் ஆக வேண்டியிருந்ததை முன்னிட்டே கடவுள் அவனுடைய உயிருக்கு அவ்வளவு வலுவைக் கொடுத்திருந்தார் போலும். அதோடு பற்பல அபாயங்களிலிருந்தும் அவனைக் கடவுள் தப்புவித்தார். கார்க்கோடக் கவுண்டர் மகுடபதியின் மேல் ஓங்கிய கத்திக்குக் குறுக்கே பெரியண்ணன் விழுந்தபோது கவுண்டரின் கை கொஞ்சம் தடுமாறிவிட்டது. அதனால் கத்தி ஆழமாகப் பதியவில்லை.

பெரியண்ணனுக்கு உயிர் இருக்கிறது என்பதைக்கார்க்கோடக்கவுண்டர்கண்டு சங்கடஹரி ராவ் யோசனையின் பேரில் அவனை அப்புறப்படுத்தத் தீர்மானித்த போது, 'இரகசியம், இரகசியம்' என்று அவன் மார்பைத் தொட்டுக் காண்பித்தது அவருடைய ஞாபகத்திலிருந்து அகலவில்லை. முடியுமானால் அவனை எப்படியாவது உயிர் பிழைக்கச் செய்து இரகசியத்தை அறிய வேண்டும் என்று விரும்பினார். அவன் சொல்ல விரும்பிய இரகசியம் தன்னை முக்கியமாகப் பாதிப்பது என்று அவருடைய உள்ளத்துக்குள் ஏதோ ஒன்று சொல்லிற்று. ஆகையால்தான் கிழவனைக் கள்ளிப்பட்டிக்கு ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்ப்பதற்கு அவர் ஏற்பாடு செய்ததுடன், அவர் மாதச் சம்பளம் கொடுத்து வைத்திருந்த பஞ்சாலை டாக்டரைக் கொண்டு அவனுக்குச் சிகிச்சை செய்யவும் ஏற்பாடு செய்தார்.

பெரியண்ணனுக்குச் சுய பிரக்ஞை வந்தவுடன் சுற்றுமுற்றும் பார்த்தான். தான் இருப்பது பழகிய இடம் என்று தோன்றியது. கொஞ்சம் கொஞ்சமாக யோசிக்கும் சக்தி அவனுக்கு வந்தபோது, தான் இருப்பது கள்ளிப்பட்டியில் கவுண்டரின் பருத்தி மில் பங்களா என்பதை அறிந்து கொண்டான். அந்தப் பங்களாவில் பின்புறத்து அறையில் அவன் கிடந்தான்.

அவனுடைய மார்பிலே இலேசாக வலி இருந்தது. அவன் பக்கத்தில் கோயமுத்தூர் அனுமந்தராயன் தெருவில் பார்த்த இரண்டு தடியர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சிறிது சிறிதாக அன்றிரவு அந்த வீட்டில் நடந்த பயங்கரச் சம்பவங்கள் எல்லாம் நினைவு வந்தன. செந்திருவும், மகுடபதியும்

என்ன ஆனார்களோ என்ற திகில் அவன் மனத்தில் தோன்றியது. அந்தத் தடியர்களைக் கேட்பதற்காகப் பேச முயன்றான்; பேச முடியவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் டாக்டர் ஒருவர் வந்தார். பெரியண்ணன் கண் விழித்திருப்பதைப் பார்த்துவிட்டுப் பக்கத்தில் நின்றவர்களை நோக்கி, ''கத்திக் குத்து அதிக ஆழமாகப் பதியவில்லை. சீக்கிரத்தில் குணமாகி விடும். இரண்டு மூன்று நாளைக்கு இவனிடம் பேச்சுக் கொடுக்க வேண்டாம்'' என்று சொல்லிப் போய் விட்டார்.

பெரியண்ணனுக்குச் சிறிது சிறிதாக அறிவு நன்றாய்த் தெளிந்து வந்தது. யோசிக்கும் சக்தியும் அதிகமாயிற்று. தன்னுடைய தேக நிலைமை, தான் இருக்குமிடம் இவைகளைப் பற்றியும், செந்திரு, மருடபதி ஆகியோரைக் குறித்துத் தெரிந்து கொள்ளும் வழியைப் பற்றியும் யோசனை செய்தான்.

அங்கிருந்து தான் தப்பிச் செல்வது எளிதான காரியமல்ல. அதற்கு வேண்டிய சக்தியும் உடம்பில் இல்லை. கொஞ்ச நாள் எப்படியும் அங்கே இருக்கத்தான் வேண்டும். ஆனால் தன்னைக் கொன்று போடாமல் கார்க்கோடக் கவுண்டர் இந்த மட்டும் தன்னை இங்கே கொண்டு வந்து வைத்து, டாக்டரைப் பார்க்கச் சொல்லி யிருப்பது அதிசயமான காரியந்தான். இதற்கு ஏதோ அந்தரங்கமான காரணம் இருக்க வேண்டும். ஆம்! இப்போது அவனுக்கு ஞாபகம் வந்தது. தனக்குப் பிரக்ஞை போகும் தறுவாயில், கவுண்டரைப் பார்த்து, 'இரகசியம், இரகசியம்' என்று சொன்னது. அதை அறிவதற்காகத்தான் தனக்கு இவ்வளவு





பராமரிப்பு நடக்கிறதோ, என்னமோ? ஆனால் அதைச் சொல்லலாமா? இப்போது சொல்லக் கூடாது. அதற்கு முன்னால் செந்திருவும் மருடபதியும் என்ன ஆனார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அவசியம் நேர்ந்தால் பிற்பாடு சொல்ல வேண்டும். இப்போது சொன்னால் நம்புவது கடினம் என்பதோடு, ஏதாவது விபரீதத்திலும் முடியலாம்.

எல்லாவற்றுக்கும் தனக்கு உடம்பு முதலில் சரியாகக் குணமாக வேண்டும். அதுவரையில் தான் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியதுதான். அறிவு தெளிந்ததாகவே காட்டிக் கொள்ளக் கூடாது. அதற்குள் மருடபதியையும் செந்திருவையும் பற்றித் தெரிந்துகொள்ளப் பார்க்க வேண்டும். ஐயோ! அவர்களுடைய கதி என்னவாயிற்றோ?—சுவாமி! பழனியாண்டவனே! அந்தக் குழந்தைகளை நீதான் ஓர் அபாயமும் நேராமல் காப்பாற்ற வேண்டும். நான் தான் இப்படிக் கையாலாகாமல் கிடக்கிறேனே?

விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம் பெரியண்ணனுடைய உள்ளம் இப்படிப்பட்ட சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தது.

சில சமயம் பக்கத்து ஆபீஸ் அறையில் கார்க்கோடக் கவுண்டரும் தங்கசாமிக் கவுண்டரும் பேசும் குரல் கேட்டது. அப்போதெல்லாம் பெரியண்ணன் ஆவலுடன் காது கொடுத்துக் கேட்பான். மருடபதி செந்திரு என்ற பெயர்கள் அடிக்கடி அவன் காதில் விழும். அவர்கள் இருவரும் உயிரோடிருக்கிறார்கள் என்று ஒருவாறு தெரிந்து கொண்டான். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் முதலிய பூரா விவரங்களையும் தெரிந்துகொள்ள அவன் விரும்பினான். ஆகவே, ஒவ்வொரு சமயம் கார்க்கோடக் கவுண்டர் அவனுடைய அறைக்கு வந்து அவனைப் பார்த்த போது, உடம்பு தனக்குக் குணமாகி விட்டதாகவோ, அறிவு தெளிந்து விட்டதாகவோ காட்டிக் கொள்ளவில்லை. கார்க்கோடக் கவுண்டரைப்



பார்த்தறியாதவனைப் போல் பேந்தப் பேந்த விழித்தான்.

''பெரியண்ணு! இதோ பார்! நான் யார் தெரிகிறதா?'' என்று கவுண்டர் கேட்டபோது, ''யாரு? ஓகோ! நஞ்சைப்பட்டி சிங்கமா?'' என்று இப்படி ஏதோ வேண்டுமென்றே உளறினன். கவுண்டரும், ''மூளை அடியோடு குழம்பிப் போயிருக்கிறது. இன்னும் கொஞ்ச நாள் பார்க்கலாம்'' என்று முணு முணுத்துக் கொண்டே போய்விட்டார்.

நாலாம் நாள் பெரியண்ணனுக்குப் போட்டிருந்த காவலில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. முதல் மூன்று நாளும் கோயமுத்தூரில் அவன் பார்த்த தடியர்கள் மாறி மாறிக் காவல் புரிந்தார்கள். பிறகு அவர்கள் போய்ப் பதிலுக்கு மருதக் கவுண்டன் வந்து சேர்ந்தான். ''இவனை எங்கே பார்த்தோம்?'' என்று பெரியண்ணன் யோசனை செய்து, கடைசியில் அடையாளம் கண்டுபிடித்தான். ''அய்யாசாமி முதலியார் பங்களாவின் காவல்காரன் அல்லவா? இவனிடந்தானே செந்திருவின் கடிதத்தைக் கொடுத்தோம்?'' என்பது நினைவு வந்தது. 'இவன் எப்படி இங்கே காவலுக்கு வந்து சேர்ந்தான்?' என்பது ஆச்சரியமாகவும் இருந்தது. ஆனாலும், அவனைத் தனக்குத் தெரிந்ததாகப் பெரியண்ணன் காட்டிக்கொள்ளவில்லை. ''என்ன, பாட்டா! என்னைத் தெரியவில்லையா? உன்னாலே தானே எனக்குப் பங்களா வேலை போச்சு? நீ ஒரு பீத்தல் கடுதாசைக் கொண்டு வந்து கொடுத்தாலும் கொடுத்தே; எனக்குச் சனியன் பிடிச்சுது!'' என்று மருதக் கவுண்டன் சொன்னபோதுகூடப் பெரியண்ணன் சும்மா திரு திருவென்று விழித்தானே தவிர வேறு வார்த்தை பேசவில்லை.

இப்படியெல்லாம் பாசாங்கு செய்து கொண்டு அவன் எதற்காகக் காத்திருந்தானே, அந்த நோக்கம் கடைசியாக நேற்று நிறைவேறியது. அடுத்த அறையில் கார்க்கோடக் கவுண்டர் கோடை இடி இடித்தது போல் சிரிப்பதைக் கேட்டு அவன் திடுக்கிட்டு எழுந்தான். அச்சமயம் மருதக் கவுண்டன் நல்ல வேளையாக அறையில் இல்லை. கதவு ஓரமாக நகர்ந்து வந்து ஒட்டுக் கேட்டான். கார்க்கோடக் கவுண்டர் சிரிப்பை நிறுத்தி விட்டு, ''ரொம்பத் தரமாய்ப் போச்சு! பழம் நழுவிப் பாலில் விழுந்தது! பைத்தியம் பிடித்து விட்டதா பைத்தியம்? வேஷமா போடுகிறள்? சபாஷ் அப்பா, சபாஷ்!'' என்று கத்திவிட்டு மறுபடியும் சிரித்தார்.

''எதற்காக இப்படிச் சந்தோஷப் படுகிறீர்கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லை'' என்றது தங்கசாமிக் கவுண்டரின் ஈனக் குரல்.

''உனக்கு ஒன்றும் புரியாது. நீ பச்சைக் குழந்தை; வாயில் விரலை வைத்தால் கடிக்கக் கூடத் தெரியாது.''

''என்னதான் விஷயம் சொல்லுங்களேன்!''

''அட பைத்தியமே! — அந்த வேலையற்ற ஐயாசாமி முதலியாரும், சங்கநாதம் பிள்ளையும் நம்ம விஷயத்தில் தலையிடுகிறார்களே, அவர்களை எப்படிச் சரிக்கட்டுவது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். கடவுளே நம் கட்சியில் இருந்து இந்தப் பெண்ணுக்கு இப்படிப்பட்ட புத்தியை உண்டாக்கினர். அவர்களை நாமே தேவகிரி எஸ்டேட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்ப் பெண்ணுக்குச் சித்தப் பிரமை என்று நிரூபித்து விடலாம். அப்புறம் அவர்கள் ஏன் தலையிடப் போகிறார்கள்?''

இவ்வாறு இரண்டு கவுண்டர்களும் நெடுநேரம் பேசிக் கொண்டதிலிருந்து பெரியண்ணன் தெரிந்துகொள்ள விரும்பிய முக்கிய விஷயங்கள் அவனுக்குத் தெரிய வந்தன.

செந்திருவைக் கூனூருக்குப் பக்கத்தில் தேவகிரியில் வைத்திருக்கிறார்கள்.— அவள் கவுண்டருடன் கலியாணத்தைத் தடுப்பதற்காகப் பைத்தியம் கொண்டவள் போல நடிக்கிறாள்.— அவள் விஷயத்தில் தான் அன்று கடிதம் கொண்டு போன பெண்ணின் தகப்பனார் சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார் — மருடபதி இவர்களுடைய வலையிலிருந்து தப்பித்துக் கொண்டு போய் விட்டான் — செந்திருவைச் சீக்கிரத்தில் தேவகிரியிலிருந்து வேறு பந்தோபஸ்தான இடத்தில் கொண்டு போய் வைத்துவிடும் உத்தேசம் கவுண்டர்களுக்கு இருக்கிறது — ஆகிய இந்த விவரங்களையெல்லாம் பெரியண்ணன் திரும்பத் திரும்ப ஆயிரம் தரம் சிந்தனை செய்தான். செந்திருவைக் கார்க்கோடக் கவுண்டரிடமிருந்து காப்பாற்ற வேண்டுமானால் அவன் இனிமேல் அங்கே படுத்திருக்கக் கூடாது. உடனே தப்பித்து வெளிக் கிளம்ப வேண்டியதுதான். அதற்கு என்ன வழி என்று யோசிக்கலானான்.

மறுநாள் சாயங்காலம் அந்த வழி அவனுக்குத் தென்பட்டது. அந்த வழியை அவனுக்கு ஏற்படுத்திக் கொடுத்து உதவியது கள்ளிப்பட்டிக் கவுண்டரின் கள்ளுக் கடைதான்! அன்று காலையில் கவுண்டர்கள் காரில் கிளம்பிப் போய் விட்டார்கள். மருதக் கவுண்டன் மட்

டும்தான் ஆபீஸ் பங்களாவுக்குக் காவலாக இருந்தான். சாயங்காலம் அவன் கள்ளுக் கடைக்குப் போய் நன்றாகப் போட்டு விட்டுக் கையில் ஒரு புட்டியிலும் கள் வாங்கிக் கொண்டு வந்தான். தள்ளாடிக் கொண்டே பெரியண்ணன் அருகில் வந்து நின்று; ''ஏன் பாட்டா! நீ கள்ளுக் குடிக்கக் கூடாதென்று ஊர் ஊராய்ப் பிரசாரம் செய்தாயாமே, அது நெசமா? இந்தா! இதோ உனக்கு ஒரு புட்டி வாங்கியாந்திருக்கிறேன். சாப்பிடாமற் போனாயோ விடமாட்டேன். வாயிலே விட்டு விடுவேன்!'' என்றான். பெரியண்ணனுக்கு ரௌத்திராகாரமான கோபம் வந்தது. எழுந்திருந்து அந்தக் கள்ளுப் புட்டியைப் பிடுங்கி மருதக் கவுண்டன் தலையிலே போட்டு உடைக்க வேண்டுமென்று தோன்றிற்று. இன்னும் ஒரு தடவை மருதக் கவுண்டன் கள்ளுப் புட்டியை அவன் வாய்க்கருகில் கொண்டு வந்திருந்தால் அவ்விதமே செய்திருப்பான். ஆனால் மருதக் கவுண்டன் அவ்வளவுக்கு வைத்துக் கொள்ளவில்லை. ''வேணுமா, வேண்டாமா, சொல்லிப்பிடு! வேண்டாமே! இவ்வளவுதானே? வேண்டாதபோனால் போ! அப்புறம் 'கவத்துக் கீரையை வழிச்சுப் போடடி சொரணை கெட்ட வெள்ளாட்டி' என்னாதே! மாட்டாயே? சரி; ரொம்பச் சரி!'' என்று சொல்லிக் கொண்டே புட்டியைத் தன் வாயிலேயே கவிழ்த்துக் கொண்டு அவ்வளவையும் குடித்துத் தீர்த்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அவன் தலை சுற்றியது. ஏதோ உளறிக் கொண்டே இரண்டு ஆட்டம் ஆடிவிட்டுக் கீழே விழுந்து பிணம் போலானான்.

இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காதென்று பெரியண்ணன் மெதுவாக அங்கிருந்து கிளம்பி வெளியில் வந்தான். அவன் அந்தக் கட்டிடத்தில் இருப்பதே ஒருவருக்கும் தெரியாது. ஆகையால் அவன் போவதையும் யாரும் தடை செய்யவில்லை. இராஜாங்கமாகக் கட்டிடத்தை விட்டு வெளியே வந்து கோயமுத்தூர்ச் சாலையை அடைந்து அங்கு ஒரு போக்கு வண்டியில் ஏறிக் கொண்டான். வண்டியில் போகும் போதே, என்ன செய்ய வேண்டும் என்பதை ஒருவாறு தீர்மானித்துக் கொண்டான். முதலில் கோயமுத்தூரில் அந்தப் பெண்ணின் தகப்பனார் வீட்டுக்குப் போய் அவரிடம் எல்லா விஷயங்களையும் சொல்ல வேண்டும். அவருடைய உதவியைக் கொண்டு செந்திருவைக் கவுண்டர்களிடமிருந்து விடுதலை செய்ய வேண்டும். பிறகு மருடபதியைத் தேட வேண்டும்.

இவ்வித சிந்தனையுடன் பெரியண்ணன் கோயமுத்தூரை அடைந்தபோது இரவு வெகு நேரமாகி விட்டது. ஆனாலும் இரவுக்கிரவே காரியத்தை முடிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால் அவன் தட்டுத் தடுமாறி வழி கண்டுபிடித்துக் கொண்டு அய்யாசாமி முதலியாரின் பங்களாவை அடைந்தான். வாசல் கேட்டுத் திறந்திருக்கவே உள்ளேயும் நுழைந்தான். அப்போதுதான் கொடி வீட்டில் பேச்சுக் குரல் கேட்டது. மருடபதியின் குரல் மாதிரியும் இருந்தது. மரத்தின் மறைவில் நின்று சற்றுநேரம் கேட்டான். நிலைமை ஒருவாறு புரிந்தது. பங்கஜம் உள்ளே பணம் எடுக்கப் போனபோது சட்டென்று கேட்டுக்கு வெளியே வந்து நின்று, மருடபதிக்காகக் காத்திருந்தான்.

மேற்கூறிய விவரங்களையெல்லாம் கோயமுத்தூர் ரயில்வே ஸ்டேஷனில் உட்கார்ந்து கொண்டு மருடபதி கேட்டான். தன்னுடைய கதையையும் பெரியண்ணனுக்குச் சொன்னான். கோயமுத்தூரில் தங்குவதற்குப் பத்திரமான இடம் ரயில்வே ஸ்டேஷன்தான் என்று தீர்மானித்து அவர்கள் நேரே ஒரு வண்டி பிடித்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள்.


மறுநாள் காலையில் புறப்படும் ரயிலில் கூனூருக்குப் போய் எப்படியாவது செந்திருவைக் கண்டுபிடித்து விடுதலை செய்வது என்று அவர்கள் பேசி முடிவு செய்தார்கள்.

''தம்பி! கூனூர் நம் இருவருக்கும் புதிதாயிற்றே. அங்கே நமக்குத் தெரிந்தவர்கள் யாருமில்லையே? எங்கே தங்குவோம்? எப்படிக் கவுண்டர் பங்களாவைக் கண்டுபிடிப்போம்? யார் நமக்கு உதவி செய்வார்கள்?'' என்று பெரியண்ணன் விசாரத்துடன் கேட்டான்.

''பாட்டா! நீ கவலைப்படாதே. கூனூரில் சுவாமியார் ஒருவர் இருக்கிறார். சச்சிதானந்த மடம் என்று ஒரு மடம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். அவரை எனக்கு நன்றாய்த் தெரியும். பல தடவை அவரை நான் மத உபந்தியாசத்துக்காக அழைத்து வந்திருக்கிறேன். அவரைப் போய்ப் பிடிப்போம். அநியாயம், அக்கிரமம் என்றால் அவருக்கு ஆகாது. இந்த விஷயத்தில் நமக்குக் கட்டாயம் உதவி செய்வார்'' என்றான் மருடபதி.

அதே சமயத்தில், மேற்படி சுவாமியார் மண்டையில் கல் விழுந்த காயத்துக்குக் கட்டுப் போட்டுக்கொண்டு வலியினால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார் என்பது அவனுக்கு எப்படித் தெரியும்?

(தொடரும்)



ஆனந்த சூரியன்
அஸ்தமிப்பதில்லை
உங்கள் இல்லத்தில்
இருந்து
விட்டாலே
கெய்ஷா
Toshiba REMCO
டேபிள்
டிரான்சிஸ்டர்
Sista's RR-7 Tam

விநாயகர்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகளின் அருளுரை

விநாயக மூர்த்தியிலுள்ள ஒவ்வொரு சின்னச் சமாசாரத்தைக் கவனித்தாலும் அதில் நிறைய தத்துவங்கள் இருக்கின்றன.

பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பது எதற்காக? விக்நேச்வரர், தம் அப்பாவான ஈச்வரனைப் பார்த்து, ''உன் சிரசையே எனக்குப் பலி கொடு'' என்று கேட்டு விட்டாராம். எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணினால்தான் மகாகணபதிக்குப் பிரீதி ஏற்படுகிறது. அவ்வளவு பெரிய தியாகம் பண்ணுவதற்குத் தயார் என்ற அறிகுறியாகத்தான், ஈச்வரனைப் போலவே மூன்று கண்கள் உடைய தேங்காயைச் சிருஷ்டித்து அந்தக் காயை



அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும்படியாக ஈச்வரன் அநுக்ரஹித்திருக்கிறான்.

கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான ஸ்வாமி வேறு யாரும் இல்லை. சிரசு யானையின் தலை. பெரிய வயிறு. பெரிய உடம்பு. அவருக்கு 'ஸ்தூல காயர்' என்று ஒரு பெயர். மலைபோல் இருக்கிறார். அவர் குழந்தை! குழந்தைக்கு எது அழகு? குழந்தை என்றால் அந்தப் பருவத்தில் நிறையச் சாப்பிட வேண்டும். உடம்பு கொஞ்சம்கூட இளைக்கக் கூடாது. ஒரு ஸந்நியாஸி நிறையச் சாப்பிட்டுக் கொண்டு பெரிய சரீரியாக இருந்தால் அது அவருக்கு அழகல்ல. வயசாகி விட்டால் ராத்திரி உபவாசம் இருப்பார்கள். குழந்தை அப்படி இருப்பது அழகா? குழந்தை என்றால் தொந்தியும் தொப்பையுமாகக் கொழு கொழுவென்று இருந்தால்தான் அழகு. நிறையச் சாப்பிடுவதுதான் அழகு. குழந்தைகள் நல்ல புஷ்டியாக இருக்க வேண்டும் என்பதை இந்தக் குழந்தைச் சாமியே காட்டிக் கொண்டிருக்கிறார்.

இவரோ யானை மாதிரி இருக்கிறார். அதற்கு நேர்விரோதமான சின்னஞ் சிறு ஆகிருதி உடையது மூஞ்சூறு. இதை அவர் தம் வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். மற்ற ஸ்வாமிகளுக்காவது ஒரு மாடு, ஒரு குதிரை, ஒரு பட்சி என்று வாகனம் இருக்கிறது. இவரோ தாம் எத்தனைக்கு எத்தனை பெரிய ஸ்வாமியாக இருக்கிறாரோ, அத்தனைக்கு அத்தனை சின்ன வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். ஸ்வாமி எதை வாகனமாக வைத்துக் கொண்டாலும் வாகனத்தினால் ஸ்வாமிக்குக் கௌரவம் இல்லை. ஸ்வாமியால்தான் வாகனத்துக்குக் கௌரவம். வாகனத்துக்குக் கௌரவம் கொடுக்க, அதனுடைய சக்திக்கு ஏற்றபடி நெட்டிப் பிள்ளையார் மாதிரியாகக் கனம் இல்லாமல் இருக்கிறார். அதற்குச் சிரமம் இல்லாமல், ஆனால் அதற்கு மரியாதை, கௌரவம் எல்லாம் உண்டாகும்படியாகத் தம் உடம்பை வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வோர் அங்கத்தில் அதிகக் கௌரவம் இருக்கும். சவுரி மான் என்று உண்டு. அதன் கௌரவம் வாலில்தான் இருக்கிறது. மயில் என்றால் அதற்குத் தோகை விசேஷம். தோகையை மயில் ஜாக்கிரதையாக ரட்சிக்கும். யானை எதை ரட்சிக்கும்? தன் தந்தத்தைத் தீட்டி வெள்ளை வெளேர் என்று வைத்திருக்கும். இந்தப் பிள்ளையார் என்கிற யானை என்ன பண்ணுகிறது என்றால் அந்தக் கொம்பில் ஒன்றையே ஒடித்துக் கொண்டு மகாபாரதத்தை எழுதிற்று. தன் அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக் காட்டிலும், தர்மத்தைச் சொல்கிற ஒன்றுதான் பெரிது என்பதை அங்கே இந்த யானை காட்டியது. நியாயத்துக்காக, தர்மத்துக்காக, வித்தைக்காக எதையும் தியாகம் பண்ண வேண்டும் என்பதை, தானே தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது. ஸ்வாமிக்கு ஆயுதம் என்று தனியாக ஒன்றும் வேண்டியதில்லை, எதையும் ஆயுதமாக அவர் நினைத்தால் உபயோகித்துக் கொள்வார் என்பதற்கும் இது உதாரணம்.

விநாயகர் பிரணவ ஸ்வரூபி. துதிக்கையோடு இருக்கிற அவரது சிரசு, கையிலே இருக்

கும்படியான மோதகம் இவற்றை யெல்லாம் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவம் மாதிரியாக இருக்கும். அந்தப் பிரணவத்தைப் புருவத்தின் மத்தியில் தியானம் பண்ணிக் கொண்டு ஔவையார் பண்ணின கிரந்தம்தான் 'விநாயகர் அகவல்'. யோக சாஸ்திரம், தியானம் பண்ணுகிற முறை எல்லாம் அதில் இருக்கின்றன.

நமக்குப் பார்க்கப் பார்க்க அலுக்காத வஸ்துக்கள் சந்திரன், சமுத்திரம், யானை ஆகியன. இவற்றையெல்லாம் பார்க்கப் பார்க்க ஆனந்தம் பொங்கும். அதனால் தான் குழந்தைச் சுவாமி தன்னைப் பார்க்கிற ஜனங்களுக்கு எல்லாம், பார்க்கப் பார்க்க ஆனந்தம் எப்போதும் பொங்கிக் கொண்டிருக்கும்படியாக யானை உருவத்தோடு இருக்கின்றார். அது ஆனந்த தத்துவம்; ஆராத ஆசையின் தத்துவம்.

அவர் பார்வதி பரமேசுவரர்களுக்குப் பிள்ளை. இந்த உலகத்துக்கே மூலத்திலிருந்து ஆவிர்ப்பவித்ததனால் அவரை நாம் விநாயகர் என்பதைவிடப் ''பிள்ளையார்'' என்றே அழைக்கிறோம்.

எந்த சுவாமியை உபாசிப்பதானாலும் முதலில் விநாயகருடைய அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டால்தான் அந்தக் காரியம் விக்கினம் இல்லாமல் நடைபெறும். நம் தேசத்தில் ஒவ்வொரு தெருக்கோடியிலும் விநாயகர் இருக்கிறார். அவரையே பிரதான மூர்த்தியாக வைத்து உபாசிக்கிற மதத்துக்கு காணபத்தியம் என்று பெயர்.

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்புக்கரணம் போடுகிறோமே, அதை நமக்கு எல்லாம் காட்டியவர் மஹாவிஷ்ணுதான் என்று ஒரு கதை இருக்கிறது. ஒரு சமயம் மகாவிஷ்ணுவினுடைய சக்கரத்தைப் பிடுங்கிக் கொண்டு அவரது மருமானன பிள்ளையார் தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம். பிள்ளையாரிடமிருந்து பிடுங்குவது என்றால் அது முடியாது. அவர் மிகவும் பலம் உடையவர். அதட்டி மிரட்டி வாங்கவும் முடியாது. ஆனால் அவரைச் சிரிக்க வைத்துச் சந்தோஷத்தில் அவர் வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்தால் எடுத்துக் கொண்டு விடலாம் என்று மஹாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்குகைகளாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு ஆடினாராம். விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. விஷ்ணு எடுத்துக் கொண்டு விட்டார்.

''தோர்பி: கர்ணம்'' என்பதே தோப்புக்கரணம் என்று மாறியது. ''தோர்பி:'' என்றால் ''கைகளினால்'' என்று அர்த்தம். 'கர்ணம்' என்றால் காது. ''தோர்பி: கர்ணம்'' என்றால் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது.

விக்கினேசுவரருடைய அனுக்கிரகத்தினால் லோகத்தில் எல்லாக் காரியங்களும் விக்கினம் இல்லாமல் நடைபெறுகின்றன. நாமும் அவருடைய அனுக்கிரகத்துக்குப் பாத்திரமாகும்படியாக நடந்து கொள்வோமாக !

தங்கமான பணிக்கு வெள்ளி விழா

வேதாரண்யம் என்றாலே சர்தார் வேதரத்னம் அவர்கள் நினைவுதான் வருகிறது. அந்த அளவுக்கு அவர்களுடன் ஊரும் ஊருடன் அவர்கள் பெயரும் ஒன்றிக் கலந்து விட்டன.

நம் தேச பிதா காந்திஜியின் உண்மையான சீடர்களுள் சர்தார் வேதரத்தினமும் ஒருவர். காந்திஜி அவர்களின் புனித வேண்டுகோளைப் பத்திரிகைகள் மூலம் தெரிந்து தமது இளம் வயதிலேயே மனத்தைக் கட்டுப்படுத்தி, உறுதிப்படுத்தி, தேச விடுதலை இயக்கத்துக்குத் தயாரானார்கள். காந்திஜி அவர்கள் வடக்கே தண்டி யாத்திரை செய்தபோது நமது



மூதுபெரும் தலைவர் ராஜாஜி அவர்களின் தலைமையின் கீழ் தெற்கே வேதாரண்யத்தில் இவர்கள் உப்புச் சத்தியாக்கிரக அறப்போர் செய்தார்கள். தேச விடுதலைக்காகப் பலமுறை சிறை சென்றவர்கள். இவர்கள் செய்த அரும் பெரும் தியாகத்தின் சேவைகளைப் பாராட்டியே இவர்களுக்கு ''சர்தார்'' என்ற பட்டம் கிடைக்கப்பெற்றது.

ராஜாஜி அவர்களின் பெரு மதிப்புக்குரியவரான இவர், நான்கு முறை மக்களின் பெரும் ஆதரவுடன், நன்மதிப்புடன், சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றியவர்கள்.

காந்திஜியின் நிர்மாணத் திட்டங்களுள் ஒன்றான ''பெண் கல்வி''த் திட்டத்தை மேற்கொண்டு திரு வேதரத்னம், வேதாரண்யத்தில் ஸ்தாபித்த கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலத்தில் எழுநூறுக்கும் மேற்பட்ட ஏழை மாணவிகள் படித்து வருகிறார்கள். இக் குருகுலத்தின் வெள்ளி விழா ஆண்டாக நடந்து வரும் இந்த வருஷத்தில்தான் சர்தார் வேதரத்தினம் அவர்களின் பத்தாவது நினைவு நாள் விழாவும் நடக்கிறது. அவர்கள் வளர்த்துப் பெருக்கிய பெரும் கல்விக் கூடமான குருகுலத்துக்குப் பொதுமக்களின் ஆதரவு பெருமளவுக்குத் தேவைப்படுகிறது. உதவக் கோருகிறோம்.

முகவரி: நிர்வாகி, கஸ்தூரி பா காந்தி கன்யாகுருகுலம், வேதாரண்யம் அஞ்சல், தஞ்சைமாவட்டம்.

சென்ட்ரல்

பி.வி.ஆர்



''ஸ்டேஷன் மாஸ்டர் என்ற இடத்தில் ஆரம்பிக்கும் வாழ்க்கை ரயில், ஓயாமல், தளராமல் ஓடி, நிதானத்தை இழக்காமல் முன்னேறிக் கடைசியில் ஸ்டேஷன் சூப்பரிண்டெண்டெண்ட் என்ற இடத்தில் நின்று பிரயாணத்தை முடித்துக் கொள்ளுகிறது.''

- ஒருவருடைய அனுபவம்

அத்தியாயம் 4

"மங்கா, மங்கா !''

சமையல் அறையிலிருந்து சரோஜி கத்தினாள்.

''இதோ வரேன்.'' மங்களா அலுத்துக் கொண்டாள். இந்த அம்மா கூப்பிட ஆரம்பித்தால் போய்ச் சேரும் வரையில் நிறுத்தவே மாட்டாள். பாதி வாரிக் கொண்டிருந்த தலையை முடிந்து கொண்டு சமையல் அறையை நோக்கி நடந்தாள்.

மூன்றாவது அறையில் ஒரு பென்சிலைப் பிடித்துக் கொண்டு கல்யாணமும் ரவியும் யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். சிவப்புத் தரையில், ஓர் எருமையின் நீளத்துக்கும் உயரத்துக்கும் யானையைத் தரையில் சாக்கினால் வரைந்து விட்டு, அதன் துதிக்கையின் அழகை ரசித்துக் கொண்டிருந்தாள் சுஜா.

''அக்கா, யானை எப்படி ?''

''ரொம்ப நன்னா இருக்கு... புஸ்தகத்தைப் படிக்காதே. இப்படி வீடெல்லாம் வரைந்து கொண்டிரு'' என்று மங்களா சிடுசிடுத்தாள்.

''இன்று ஞாயிற்றுக்கிழமை. பள்ளிக்கூடம் கிடையாது !'' என்றாள் சுஜா.

''அப்போ மிருகக் காட்சிசாலைக்குப் போய் முதல்லே யானையைப் பார்த்துட்டு வா. படம் எருமை மாடு மாதிரி இருக்கு.''

'' அவனே எருமைதான்.'' கல்யாணம் ஒரு கணம் பென்சிலை மறந்து விட்டுக் கத்தினான்.

''போய்க் குளிடா... மூஞ்சியிலே மூணு நாள் அழுக்குப் படிஞ்சிருக்கு.... டேய் ரவி, போடா, போய்ப் பல்லைத் தேய்... மணி ஏழு அடிச்சாச்சு.....'' மங்களாவுக்கு ஆத்திரம் வந்தது.



''மங்களா!'' மறுபடியும் அம்மாவின் குரல் கேட்டது.

''இதோ வந்துண்டேயிருக்கேனே.''

சமையல் அறையை அடைந்ததும், ''என்ன அம்மா, வேணும்?'' என்று கேட்டாள்.

''உன் அப்பா பூஜையை முடிச்சுண்டு வர்ற நேரம் ஆயிடுத்து. தேங்காயைத் துருவிச் சட்னியை அரை. பொட்டுக் கடலை இல்லே. கடலைப் பருப்பை வறுத்துத் தரேன்.''

''எனக்கு வேலைக்குப் போகணும்.''

''என்கொயரிதானே... காலங்கார்த்தாலே யார் வந்து நிற்கப் போறு ?''

''மிளகாய்ப் பொடி இல்லியா ?''

'' இருக்கோ இல்லியோ... சட்னி அரை. இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. எல்லாம் தின்ன உட்காரும்....''

''மெதுவாச் சமைச்சாப் போருமே? நீயே அரைச்சுக்கோயேன் அம்மா.''



'' என்னடி, எனக்கு என்ன பத்து கையா இருக்கு? ஒரு சட்னி அரைக்க எத்தனை நேரமாகும்? வயசு இருபத்திரண்டு ஆகிறது. வீட்டு வேலையிலே அக்கறை இல்லே. செய்யணும் என்கிற கரிசனம் இல்லே. ஒன் வயசிலே....''

''போதும், போதும்... சட்னியை அரைக்க விடறேன். உன் பல்லவியைப் பாட ஆரம்பிக்காதே. என் வயசிலே நீ என்ன செய்தாய்னு எனக்குத் தெரியும். இடுப்பிலே ஒண்ணும் வயித்திலே ஒண்ணுமாய் விறகடுப்பிலே வெந்து மாமியாருக்கும், மாமனாருக்குமாய்ச் செய்து போட்டாய். எல்லாம் தெரியும்.... தேங்காய் எங்கே ?''

''அப்பப்பா.... இந்தக் காலத்துப் பெண்களுக்கு வாயும் பேச்சும் மட்டும்தான் இருக்கு. வக்கணையாய் நாலு பேருக்குச் சமைச்சுப் போடத் தெரியாது....'' என்று அம்மா முணு முணுத்துக் கொண்டே, இட்லி மாவைச் சிப்பலில் போடலானாள்.

* * *

ஸ்டேஷன் சூப்பிரின்டெண்டெண்ட் கணபதி பூஜையில் ஆழ்ந்திருந்தார். பூஜை என்றால் என்ன, விஷ்ணு சகஸ்ரநாமம்தான். அவருக்கு வேறு எதுவும் தெரியாது. மனத்துக்குச் சந்துஷ்டியும், நிம்மதியும், விஷ்ணு சகஸ்ரநாமம் படித்தால் கிடைத்து விடும் என்று இருபது வருடங்களுக்கு முன்னால் கனக்கம்பட்டி ஸ்டேஷன் மாஸ்டராக இருக்கும்போது யாரோ சொல்லியிருந்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை, அவர் எது தவறினாலும் விஷ்ணுவை ஆயிரம் நாமங்களால் கூப்பிடுவதை நிறுத்தவில்லை. இதனாலேயே தமக்கு ஒருவித நிம்மதி வந்து விட்டது என்று உள்ளூற நம்பினார். வீட்டில் ஆயிரம் தொல்லைகள், சிரமங்கள், கஷ்டங்கள் வந்தாலும், அவையெல்லாம் பெரிய பாரங்களாக அவருக்குத் தோன்றவில்லை; எல்லாம் தோன்றி மறையக் கூடிய எறும்புக் கடி வலிகள் என்று அவர் ஒதுக்கினார். இப்படிப்பட்ட மனப் போக்குக்குக் காரணமே அவர் தினந்தோறும் சொல்லும் விஷ்ணு சகஸ்ரநாமம்தான் என்று நினைத்தார். மூர்த்தி, மோகன் என்ற இரண்டு பிள்ளைகளால் அவருடைய மனசுக்கு வேதனை பிறந்த போதுகூட, வேதனையை

மீறி மனம சமாதானம் அடைய வேண்டும் என்ற உத்வேகம் எழுந்தது. அவர்களை மறப்பதற்குக் கூட இந்த விஷ்ணு சகஸ்ரநாமம் ஒரு பெரும் மருந்தாகக் கிடைத்தது.

மொத்தத்தில் அவருடைய மனத்தில் பூசல் இல்லை; இலேசமில்லை. நாளைக்கு இந்தக் குழந்தைகளின் கதி என்ன என்ற அங்கலாய்ப்பும் பயமும் இல்லை.

ரயில்வேயில் உள்ள அத்தனை பேர்களும் அவரை ஸ்டேஷன் சூப்பரின்டெண்டண்ட் என்று ஒரு மைல் நீளத்துக்கு வார்த்தைகளை இழுத்துக் கூப்பிடவில்லை. 'எஸ். எஸ்.' என்றே குறிப்பிட்டார்கள் ; அழைத்தார்கள்.

நான்கு வருடங்களாக எஸ்.எஸ். ஸாகப் பணி புரியும் அவர் இன்னும் மூன்று ஆண்டுகளில் ஓய்வுபெற்றுவிடுவார். ஐம்பத்தெட்டு வயதுக்குப்பின் அவரை யாரும் மதிக்கப் போவதில்லை. யாராவது போர்ட்டரோ, புக்கிங் ஒளார்க்கோ, டிக்கட் பரிசோதகரோ புன்முறுவலால் விசாரித்தால், அதுவே பெரிய மதிப்புத்தான். அவர் பழுத்துக் கொண்டிருக்கும் ஓர் இலை. மரத்திலிருந்து விழப் போகிறது. மற்றப் பச்சை இலைகளுக்கு விழப் போகிற, விழுகிற இலைகள் மீது என்ன அக்கறை இருக்க முடியும் ?

இந்தக் கணபதி எதிர்காலத்தைப் பற்றி எப்படிக் கவலைப்படாமல் இருந்தாரோ, அதே போல் கடந்த காலத்தைப் பற்றியும் சிந்திக்காமலே இருந்தார். சிந்தனை என்று ஆரம்பித்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. மனமே ஒரு ரண களமாகிவிடும்.



சொந்த ஊர் நங்கவரம். திருச்சியில் செயிண்ட் ஜோசப் கல்லூரியில் முதல் வகுப்பில் ஹானர்ஸ் பாஸ் செய்தவர். பலருடைய வற்புறுத்தலின் பேரிலும், நங்கவரத்துப் பணக்காரர்கள்

உதவியிலும் ஐ. ஸி. எஸ். பரீட்சை எழுத லண்டனுக்குப் போனார். பரீட்சை எல்லாம் நன்றாகத்தான் எழுதினார். நிறைய மார்க்குகளும் வாங்கினார். ஆனால் அவருடைய அதிர்ஷ்டம் அந்த ஆண்டு பன்னிரண்டு பேர்களைத்தான் தேர்ந்தெடுத்தார்கள். அவர் பதின்மூன்றாவது ராங்க். தமது தோல்வியில் அவருடைய மனம் ஒடியவில்லை. பிறருடைய பணம் செலவழிந்ததற்கும், அவர்கள் அவரிடம் எதிர்பார்த்த சாதனை தோல்வியில் முடிந்ததே என்றும்தான் மனம் நொந்தது. ஐ.ஸி.எஸ். பதவி மயிரிழையில் கைக்குக் கிட்டாமல் நழுவியது. அதன்பின் வகிக்கக்கூடிய பதவி, சுமாராகவாவது இருக்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். சென்னை சர்க்காரில் டிப்டி கலெக்டர் வேலைக்காகப் பாடுபட்டார். ஏழு நியமனங்களில் ஒரு நியமனம்தான் ஜாதி அடிப்படையில் அவருடைய ஜாதிக்கு உண்டு. அந்த ஒரு ஸ்தானமும் அவருக்குக் கிடைக்கவில்லை. வேறு யாரோ சிபாரிசில் நியமிக்கப்பட்டார்.

அதன்பின் கணபதி எந்த வேலையானாலும் சரி என்று ஒரு முடிவுக்கு வந்தார். ஸவுத் இந்தியன் ரயில்வேயில் ஸ்டேஷன் மாஸ்டர் பதவி கிடைத்தது. பச்சைக் கொடியும் சிவப்புக் கொடியும் கையில் விளையாட, அவர் வாழ்க்கையை ஆரம்பித்தார். ரிலீவிங் ஸ்டேஷன் மாஸ்டர் வாழ்க்கை முடிந்ததும், சிறு சிறு ஸ்டேஷன்களில் இரண்டு வருஷங்கள், மூன்று வருஷங்கள் என்று காலம் ஓடிற்று. ஐ. ஸி. எஸ்.ஸுக்கு மனைவியாக வாய்க்க இருந்த சங்கரி ஒரு ஸ்டேஷன் மாஸ்டரின் தர்ம பத்தினியாகி, தாம்பத்தியத்தின் கனிகளை முறை தவறாமல் ஈன்று கொண்டே வந்தாள். ரயிலின் ஓட்டத்துக்கு ஓய்வு இருந்ததோ என்னவோ, அவளுடைய தாய்மைச் சுமைக்கு ஓய்வே பிறக்கவில்லை. பதினொரு குழந்தைகள் பிறந்த பிறகுதான், தெய்வம் விழித்துக் கொண்டது.

சென்ட்ரல் ஸ்டேஷனில் பதினொரு பிளாட்பாரங்கள். கணபதிக்குப் பதினொரு குழந்தைகள். பன்னிரண்டாம் பிளாட்பாரம் வராமல் இருக்க வேண்டுமே என்று இரவும் பகலும் வேண்டிக் கொண்டார் கணபதி. சென்ட்ரல் ஸ்டேஷனுக்கும் தம் வாழ்க்கைக்கும், ஒருவித பிணைப்பு, ஒருவித ஒற்றுமை இருப்பதாக அவர் நினைத்தார். இந்த நினைப்பு பிதற்றல், அசம்பாவிதம் என்று சிற்சில சமயங்களில் தோன்றினாலும் பிளாட்பாரங்களின் எண்ணிக்கை ஓர் எச்சரிக்கையாகவே கண்முன் நின்றது.

இப்போது சமீப காலமாக அவர் உள்ளத்தை வாட்டிக் கொண்டிருந்தவள் பெண் மங்களாதான். அவளுக்குக் கலியாணமான பிறகுதான், மூத்த பிள்ளை மூர்த்திக்குப் பெண் எடுக்கவேண்டும் என்று பிடிவாதமாக இருந்த அவர் கடைசியில் சங்கரியின் நச்சரிப்புக்கும், மங்களாவின் பிடிவாதத்துக்கும் தலை சாய்க்கும்படியாயிற்று. பெரிய இடத்திலிருந்து, கைநிறைய சீர்செனத்திகளுடன் மூர்த்திக்கு வரன் வந்தது. மங்களா பி. எஸ்ஸி. பாஸ் செய்துவிட்டு, ரயில்வேயில் குமாஸ்தாவாகச் சேர்ந்தாள். 'இப்போதைக்குக் கலியாணம் வேண்டாம்' என்று அவள் பிடிவாதம் செய்தாள். பிள்ளை மூர்த்தியும் பொறுமை இழந்து கொண்டிருந்தான். கணபதி பார்த்தார். தம் பிடிவாதத்துக்கு அர்த்தமில்லை என்று நினைத்தார். பிள்ளையின் கலியாணத்தை முடித்து, அவனைப் பெண் விட்டார் கையில் ஒப்படைத்தார்.

அது நடந்து இரண்டு வருடங்களாகப் போகின்றன. இரண்டாவது பிள்ளை மோகன், பஞ்சாபுக்குப் போனவன் அமெரிக்காவுக்குச் சென்றாகி விட்டது. அவனைப் பற்றிச் சிந்திப்பதில் அர்த்தமில்லை. கவலைப்பட வேண்டியது மங்களாவின் கலியாணத்தைப் பற்றியே.

மங்களாவுக்கு அப்புறம் சங்கர், விசு, பாபு, ராதா, அனு, கல்யாணம், ரவி, சுஜா. ராதா, அனு, சுஜா இவர்களுடைய கலியாணங்களைப் பற்றி இப்போது விசாரப்பட வேண்டியதில்லை; விசாரப்பட்டும் பயனில்லை. பிள்ளைகள் தலையெடுத்து, குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால், தங்கைகளுடைய கலியாணம் நடக்கும். இல்லாவிட்டால் தெய்வம்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மங்களாவுக்கு இன்றுவரையில் அவர் வரன் பார்க்கப் புறப்படவில்லை. இதற்குக் காரணம் சங்கரிதான். அவள், மங்களாவைத் தன் அண்ணா பிள்ளைக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கிறாள். அந்த அண்ணா மண்ணோடு மண்ணாகிப் போய்ப் பன்னிரண்டு வருடங்கள் ஆகின்றன. அப்போது, அந்தப் பிள்ளைக்கு வயது பதினேழு. எஸ். எஸ். எல். ஸி. தேறிவிட்டு, அப்பாவுடன் சண்டை பிடித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியவன். மூத்தாள் பிள்ளையான அவன், அப்பாவின் மரணத்துக்குக்கூட வரவில்லை. அவன் இப்போது எங்கே இருக்கிறான், என்ன செய்கிறான் என்று யாருக்கும் தெரியாது. இப்படிப்பட்ட அண்ணன் பிள்ளைக்கு

மங்களாவைக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று சங்கரி ஒற்றைக் காலால் நிற்கிறாள். காரணம், அன்று சாகிற சமயத்தில் அவள் வாக்குக் கொடுத்து விட்டாளாம். 'சரி, அந்தப் பிள்ளையைக் கொண்டு வா !' என்றால் சங்கரி விழிக்கிறாள். 'நீங்கள் தேடுங்கள்' என்கிறாள். கணபதி உத்தியோகத்தைப் பார்ப்பதா, மைத்துனன் பிள்ளையை வலை போட்டுத் தேடுவதில் மூழ்குவதா ?

மொத்தத்தில், காலம் ஓடுகிறது. மங்களா வேலையில் சேர்ந்து இரண்டு வருடங்களாகி விட்டன. சங்கரியின் பிடிவாதம் இன்னும் தளரவில்லை.

விஷ்ணு சகஸ்ரநாமம்தான் உதவிக்கு வர வேண்டும்.

* * *

பூஜையிலிருந்து விடுதலை பெற்றுக் கணபதி சமையலறைக்கு வந்த போது மணி ஏழே கால். கல் உரலிலிருந்து சட்னியை வழித்து, ஓர் அலுமினியப் பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருந்தாள் மங்களா.

''உனக்கு டியூட்டி இல்லே ?''

''இருக்கு அப்பா !''

''பின் ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? போ... போ... எஸ்.எஸ்.ஸின் பெண். அதுதான் நினைச்ச போது வர்றான்னு நாலுபேர் சொல்லணுமா?''

''எட்டு மணிக்கு வரேன்னு சொல்லியிருக்கேன்.''

''ஒரு மணி நேரம் லேட்டா ?''

''ஆமாம்.''

''சங்கரி, டிபன் தயாரா ?''

''எல்லாம் தயார், உட்காருங்கோ. சட்னிக்குத் தாளிச்சுக் கொட்டணும்.''

கணபதி சமையலறையிலேயே உட்கார்ந்தார்.

''பலகையைப் போடேண்டி'' என்று அதட்டினாள் சங்கரி.

''துப்புரவாகத்தான் இருக்கு'' என்ற கணபதி, ''மங்கா, நீயும் டிபன் சாப்பிட்டுவிட்டுப் போ'' என்றார்.


'' இந்த ஏடு எடுத்து அவளுக்குப் போடறேன்.... நீங்க முதல்லே சாப்பிட்டுவிட்டு இடத்தைக் காலி பண்ணுங்கோ.''

''ரொம்ப சரி. மாட்டேன்னு டிபன் இல்லேன்னு சொன்னாலும் சொல்விடுவே!'' கணபதி சிரித்தார். மங்களா அதை ஆமோதிப்பது போல் புன்முறுவலித்தாள்.

''மங்கா, உன் சிநேகிதி ரேணுகா வந்தாளா ?''

''இல்லையப்பா.''

''பாம்பே மெயிலுக்குப் போனியே?''



''வரவில்லை. புதன்கிழமை வருவதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறாள். கடைசி நிமிடத்திலேதான் 'கான்சல்' பண்ணியிருக்கிறாள்.''

'' இரண்டு பேரும் வகுப்புத் தோழிகள். நீ ஒரு குமாஸ்தா. ஆனால் அவள்? ஒரு கம்பெனி டைரக்டர்....'' என்றார் கணபதி.

'' இந்திரா காந்தி உங்களைவிடச் சின்னவள். அவள் பிரதம மந்திரி.... இட்லிக்கு எண்ணெயா, நெய்யா ?'' சங்கரி பொரிந்து தள்ளினாள்.

கணபதி சிரித்தார்.

''மங்கா, இன்னிக்கு என்ன அம்மா 'மூடில்' இல்லே போலிருக்கே!''

'' எனக்கு என்ன 'மூடு'க்குக் குறைச்சல் ? ரயிலுக்கு ஒய்ச்சல் ஒழிவு இருக்கோ இல்லியோ, எனக்குத் தினம் தினம் இதே தொழில்தான். என்னடா ஒருத்தி மாடு மாதிரி உழைக்கிறாளே, ஒத்தாசை செய்வோம்னு யாருக்காவது ஒரு எண்ணம் இருக்கா ?''

''அப்பா... இப்போ, புரியறதா ! நான் ஒத்தாசை செய்யறதில்லைன்னு குத்திக் காட்டறாள் அம்மா. என்னை எதுக்கு அப்பா காலேஜிலே படிக்க வைத்தீர்கள்?''

ஓர் இட்லியை விண்டு வாயில் போட்டுக் கொண்டே, கணபதி, '' நானு படிக்க வைச்சேன்? நீயாகவேதான் போய்ச் சேர்ந்தாய்!'' என்றார்.

''கல்லூரியிலே படிச்சால், சமைக்கப் படாதுன்னு யாராவது ஆர்டர் போட்டிருக்கிறார்களா ? என்னை மாதிரி மண்டுகங்கள்தான் அடுப்படியில் வேகணும் என்கிறாயா?''

''அதில்லே சங்கரி, கல்லூரியுடன் நிறுத்தியிருந்தால் சமைக்கலாம். அப்புறம் வேலைக்கும் போகிறாளே. எட்டு மணி நேரம் டியூட்டி, எட்டு மணி நேரம் தூக்கம். குளிக்க, சாப்பிட, டிரஸ் பண்ணிக்க, வெளியே வாசல்லே

போக, இதற்கெல்லாம் அஞ்சாறு மணி நேரம் போறது. எப்படிச் சமைக்க முடியும்? நீயே சொல்லு.''

''நான் ஒண்ணும் சொல்லலே. யார் யார் எப்படி எப்படிப் போகணுமோ, அப்படி அப்படிப் போய்க் கொள்ளட்டும். நான் ஒருத்தி இல்லேன்னு, இந்த வீட்டிலே நாய் நுழையாது. அடுப்படியிலே பூனைதான் தூங்கிக் கொண்டிருக்கும்.''

''நீ இருக்கிறதாலேதான் நாங்கள் எல்லோரும் ஏதோ தைரியமாக இருக்கிறோம். உன் கண்ணைத் தொடைக்கறதுக்குன்னு நான் இரண்டு நாட்கள் சமைக்கலாம். ஆனால் அது போதுமா? உனக்கே திருப்தியாயிருக்காது. 'உன் அப்பாவுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாது, நீ போய் உன் காரியத்தைப் பாரு'ன்னு நீயே என்னை விரட்டுவே.''

''கொஞ்சம் சட்னி, போடு!'' என்றார் கணபதி. பிறகு, ''ஆமாம், ரேணுகா யார்கிட்டே தகவல் அனுப்பினாள்?'' என்று கேட்டார்.

''யாரோ கேதாரமாம். வெஸ்டர்ன் ரயில்வேயில் டிவிஷனல் இன்ஜினீயர். ரிடயரிங் ரூமில் தங்கியிருக்கிறார். அவருடைய கம்பார்ட்மெண்டிலேதான் ரேணுவுக்குப் 'புக்'காகியிருந்தது. புதன்கிழமை வந்துவிட்டுச் சனிக்கிழமையே கல்கத்தாவுக்குப் போகிறாளாம். ஒரு சாக்லெட் பெட்டி கொடுத்து அனுப்பியிருக்கிறாள்.''

''எனக்கு இட்லி போதும்'' என்றார் கணபதி, தட்டுடன் அருகே வந்த சங்கரியிடம்.

''இந்த இரண்டையும் போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் வயிறு உங்களுக்கே தெரியாது. இப்போ போனால் எப்போ வருவீர்களோ? பசின்னு வந்தால் உங்களுக்குத் தலை வேறு சுற்ற ஆரம்பித்து விடும்.'' சங்கரி இட்லியைப் போட்டாள். பிறகு, ''நீயும் உட்காரும்மா!'' என்றாள் மங்களாவைப் பார்த்து.

''பெயர் என்னன்னு சொன்னே? கேதாரமா?''

''ஆமாம்.''

''கிண்டி என்ஜினீயரிங் கல்லூரியிலே படித்து விட்டு, ஐ. ஆர். எஸ்.இ. பரீட்சை எழுதித் தேறியவனாம். ஆமாம்... எனக்கு அவனைத் தெரியாது. ஆனால் அழுது கொண்டே அவனைப் படிக்கவைத்த அவனுடைய மாமாவைத் தெரியும். ஜம்புநாதனுடைய அக்கா பிள்ளை அவன். ஜம்புநாதன்தான் அவனை எடுத்து வளர்த்து ஆளாக்கினார்.''

''எந்த ஜம்புநாதன்?'' என்று கேட்டாள் சங்கரி.

''உனக்குத் தெரியணுமே. நாம பொன்மலையிலே இருந்தபோது பூதலூரிலிருந்து ஒருவர் வருவாரே, அன்னதானம் செய்யப்போறேன், சமாராதனை நடத்தப் போறேன்னு. அவர்தான்.''

''அவரா? அவருடைய மனைவி தர்மு ரொம்ப நல்லவள். இப்போ எங்கே இருக்கா? இரண்டு பெண்கள்கூட உண்டே. பாவம், எப்பப் பார்த்தாலும் புருஷனுடைய போக்கைச் சொல்லிச் சொல்லி அவள் வருத்தப்படுவாள்.''

சங்கரி முடித்தாள். மங்களாவின் மனம் அவள் முன் பின் பார்த்திராத அந்த இரண்டு பெண்களைப் பற்றி நினைக்க ஆரம்பித்தது. கேதாரத்தின் மாமாதான் கேதாரத்தை எடுத்து வளர்த்திருக்கிறார். அதற்குக் கைம்மாறு என்னவாக இருக்கும்? ஒரு வேளை இரு பெண்களுக்கும் ஏற்கனவே கலியாணமாகி விட்டதோ என்னவோ?

''ஜம்புநாதனைக் கிறுக்கன்னும் ஒதுக்கிவிட முடியாது, லட்சியவாதின்னும் சிலை எழுப்பக் கூடாது. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொன்றில் ஆசை. பொதுஜனங்களிடமிருந்து பண வசூல் செய்து அதை நாலு பேருக்குத் தெரியும்படியாகச் செலவு செய்வதில் ஒரு தனி உற்சாகம்.''

''இது என்ன பைத்தியக்காரத்தனமான உற்சாகமோ!'' என்று அலுத்துக்கொண்டாள் சங்கரி.

அதே சமயத்தில் ''அப்பா! அப்பா!'' என்று ஓடிவந்தான் அனு.

''என்னம்மா அனு?'' என்று விசாரித்தார் கணபதி.

''அப்பா, காளி கோவில் பூசாரி சீனன் வந்திருக்கான்'' என்றாள் அனு.

''போர்ட்டர் சீனனு... சங்கரி ஏதாவது வாங்கி வரணும்னு சீனன்கிட்டே சொல்லி அனுப்பு.''

''இன்னிக்கு ஒன்றும் வேண்டாம். கொத்தமல்லிகூட இருக்கு.''

''அனு, சீனனை இருக்கச் சொல்லு. எனக்கு அவனைப் பார்க்கணும்'' என்றாள் மங்களா.

''எதுக்கு?''

''அவன்தான் கேதாரத்தின் சாமான்களை இன்னிக்குத் தூக்கினான்.''

''அதனாலே?''

''கைநிறையக் கூலி கொடுத்தாரா, இல்லே கருமியாட்டம் நடந்துகொண்டாரான்னு தெரியணும்.''

''தெரிஞ்சு என்ன ஆகணும்?'' என்று கேட்டாள் சங்கரி.

''உனக்குத் தெரியாது'' என்றாள், மங்களா.

(தொடரும்)

இவர் பாராட்டுக்குரியவர்

வெள்ளிக் கம்பியென நரைத்திருக்கும் கேசத்தை மறைத்திருக்கும் தொப்பி, கருணைபொங்கும் இரு விழிகள், சதா புன்முறுவலைச் சிந்திக் கொண்டிருக்கும் தடித்த உதடுகள், முழு நிலவு முகத்தின் முக்கால் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் தாடி மீசை, செக்கச் சிவந்த உறுதியான உடல் அமைப்பு, கழுத்திலிருந்து கால்கள் வரை கவசம் போல் அப்பிப் பிடித்துக்கொண்டிருக்கும் கோட்டு — செர்வானி — இத்யாதி அம்சங்களுடன் புதுக் கல்லூரியின் சுற்றுச் சுவருக்குள் எந்நேரமும் வலம் வந்து கொண்டிருக்கும் ஓர் உருவத்தை மூன்று வருடங்களுக்கு முன்பு படித்த எந்த மாணவனும் பார்க்காமல் இருந்திருக்க முடியாது. அவர் ராயப்பேட்டையில் அமைந்திருக்கும் புதுக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஜனாப் அப்துல் வஹாப் புஹாரி சாஹிப் அவர்களே. கௌரவம் பார்க்காமல் மாணவர்களின் தோளின்மேல் கை வைத்து அவர்களது குறைகளைக் கனிவோடு காது கொடுத்துக் கேட்பார். முதல்வராக இருந்ததோடு — வரலாற்றுப் பேராசிரியராகவும், விடுதிக் காப்பாளராகவும் அவர் ஆற்றிய பணிகள் அபரிமித மானவை. அவரது புத்திக் கூர்மையையும், சமாளிக்கும் திறனையும், சகிப்புத் தன்மையையும் எடுத்துக்காட்டப் பல சம்பவங்கள் கல்லூரியில் நடந்துள்ளன.

உதாரணமாக, ஒரு பரபரப்பான சம்பவம் 1965-ல் நான் பி. ஏ. வி. படித்துக் கொண்டிருந்தபோது நடந்தது. 'கல்லூரிப் பொது மேடையில் முதல்வர் உரையாற்றுவார்' என்ற அறிவிப்பைக் கேட்டதும் பெருந் திரளான மாணவர்களும், ஆசிரியர்களும் பொது மேடைக்கருகே கூடிவிட்டனர். திடீரென்று, முதல்வர் ஜனாப் புஹாரி இரு மாணவர்கள் பின் தொடர மேடைக்கு வந்தார். ''ராமசாமி என்ற மாணவரை இவ்விரு மாணவர்களும் இரத்தக் காயம் ஏற்படுமளவுக்கு அடித்திருக்கிறார்கள். ஆகவே, செய்த தவற்றுக்காக இவர்கள் இருவரும் உங்கள் முன்னிலையில் மன்னிப்புக் கேட்பார்கள்'' என்று தம்மருகே நின்ற இருவரையும் சுட்டிக் காட்டிச் சொன்னார். அவர்கள் அவரது வேண்டுகோளுக்கிணங்கத் தலை குனிந்தபடியே சபையில் மன்னிப்புக் கேட்டனர். இத்தனை பெரிய தண்டனையா? அபராதம் விதித்திருக்கலாம்; சஸ்பெண்ட் செய்திருக்கலாம் என்று கருதியவர்களைக் கூட, சிறிது நேரத்தில் சாந்து விட்டார் ஜனாப் புஹாரி. இரு தினங்





களுக்குப் பிறகுதான் தெரிய வந்தது. அவ்விரு மாணவர்களும் ஜனாப் புஹாரி அவர்களின் நெருங்கிய உறவினர் என்ற உண்மை. குற்றம் இழைத்தவர்கள் உறவினர்கள் என்ற போதிலும், அவர்களைச் சபையில் நிறுத்தி மன்னிப்புக் கேட்கச் செய்த ஜனாப் புஹாரியின் பெருந்தன்மையை நினைக்கும்போது குற்றமிழைத்தவன் தன் குலம் தழைக்க வந்தவன் என்றும் பாராது அவனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்று நீதி வழங்கினனே சோழ மன்னன் ஒருவன், அவன் நினைவு தான் என் மனத் திரையில் நிழலாடுகிறது.

அதே வருடத்தில் ஒரு முறை 'சோ' அவர்களின் 'மனம் ஒரு குரங்கு' என்ற நாடகம் கல்லூரி அரங்கில் நடந்து கொண்டிருந்தது. நாடகம் தொடங்கிச் சுமார் பதினைந்து நிமிடங்கள் ஆகியிருக்கும். திடீரெனச் சில மாணவர் விசிலடித்துக் கொண்டு ரகளை செய்ய ஆரம்பித்து விட்டனர். நாடகத்தை இடையில் நிறுத்திய 'சோ' அவர்கள் ஏதோ சொல்லவே, போலீஸ் தலையிட்டுத்தான் ஒடுக்க முடியும் என்று சிலர் கருதுமளவுக்கு அமளி துமளி உச்சகட்டத்தை அடைந்துவிட்டது. தமது வலிவுமிக்க ஐந்து நிமிட உரையால் மாணவர்களை அடக்கி, திரு சோவையும் அமைதிப்படுத்தி மீண்டும் நாடகத்தை நடக்க வைத்ததன் மூலம் கல்லூரிப் பெருமையைக் காப்பாற்றினார்.

சாதாரணப் பள்ளி ஆசிரியராகத் தமது வாழ்வைத் தொடங்கி, பின்னர் விரிவுரையாளராகி, பேராசிரியராகி, புதுக் கல்லூரியில் முதல்வராகி — தற்போழுது பெரம்பூர் ஜமாலியா அரபிக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றும் ஜனாப் புஹாரி ஆங்கிலம், உருது, அரபு ஆகிய மொழிகளில் மிகவும் புலமை வாய்ந்தவர். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவரான அவர், அயல்நாடுகளில் தூதுவராகப்பணியாற்றுவதற்கு மத்திய அரசினரால் அழைக்கப்பட்டார். ஆனல், அதற்கெல்லாம் அவர் ஒப்புக் கொள்ள வில்லை. ஐம்பது ஆண்டு காலம் கல்விச் சேவை செய்தஅந்தப்பெருமகனை ஒரு நடமாடும் பல்கலைக் கழகம் என்று அழைத்தாலும் தகும். -சாலையோன்

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் ஐம்பத்திரண்டு

விடுதலைக்குத் தடை

மணிமேகலைக்கு எப்படி ஆறுதல்கூறுவது என்று குந்தவைப் பிராட்டி யோசித்தாள். அவளுடைய உள்ளம் தாங்க முடியாத துயரத்தினாலும் கவலையினாலும் குழம்பியிருந்தபடியால், யோசனை ஒன்றும் தோன்றவில்லை.

அச்சமயத்தில் அரண்மனை வாசலில் பெரியதொரு கோஷம் எழுந்தது.

''வானதி! அது என்னவென்று பார்! சக்கரவர்த்தியின் மன நிலையையும் உடல் நிலையையும்கூட இந்த ஜனங்கள் மறந்துவிடுகிறார்கள்! இப்படி ஆரவாரம் செய்கிறார்கள்.'' என்றாள்.

வானதி அரண்மனையின் முகப்பில் சென்று எட்டிப் பார்த்துவிட்டு உடனே அவசரமாகத் திரும்பி வந்தாள். மிகுந்த பரபரப்புடன், ''அக்கா! அவர் வந்து கொண்டிருக்கிறார்!'' என்றாள்.

''அவர் என்றால் யார்?'' என்று புன்னகையுடன் கேட்டாள் குந்தவை.

''அவர்தான், அக்கா! உங்கள் தம்பி!''

உடனே குந்தவை, ''சரி; அப்படியானால் நீ இந்தப் பெண்ணைச் சற்று அப்பால் அழைத்துக் கொண்டு போ!'' என்று சொன்னாள்.

வானதி தயங்குவதைப் பார்த்துவிட்டு, ''சீக்கிரம் போ! உன்னைப் பார்க்காமல் அவன் போய்விட மாட்டான். நான் உனக்குச் சொல்லி அனுப்புகிறேன்'' என்றாள் இளைய பிராட்டி குந்தவை.

வானதி மணிமேகலையின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு அப்பால் சென்றதும், பொன்னியின் செல்வன் அந்த இடத்துக்கு வந்தார்.

''தம்பி! இது என்ன? நீ போகுமிடமெல்லாம் ஜனங்கள் கூடிக் கூச்சல் போடுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அவர்களை அரண்மனை வாசலுக்கே அழைத்துக் கொண்டு வந்து விட்டாயே? மனம் புண்ணாகி வேதனையில் ஆழ்ந்திருக்கும் சக்கரவர்த்தியின் காதில் இந்த ஜனங்களின் கூச்சல் விழுந்தால் அவருக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும்?''

''நான் என்ன செய்யட்டும், அக்கா! எனக்கு மட்டும் மன வேதனை இல்லாமலா இருக்கிறது? கரிகாலருடைய வீரத் திருமேனி எரிந்து சாம்பராவதற்குள்ளே இந்த ஜனங்கள் 'அருள்மொழிக்குப் பட்டம்' என்று கூச்சல் போடத் தொடங்கி விட்டார்கள். இந்தக் கூச்சல் எனக்குக் கர்ண கடூரமாக இருக்கிறது. ஒவ்வொரு சமயம் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போய்விடலாமா என்று எண்ணுகிறேன். அப்படிச் செய்தால் குழப்பம் இன்னும் அதிகமாகிவிடுமோ என்றும் பயமாயிருக்கிறது. மதுராந்தகரும் சிற்றரசர்களும் சூழ்ச்சி செய்து என்னையும் கொன்று விட்டார்கள் என்று ஜனங்கள் நம்பினாலும் நம்புவார்கள். அதனால் ஏற்படக்கூடிய விபரீதங்களை நினைத்தால் என் உள்ளம் திடுக்கிட்டு நடுங்குகிறது.....''



''ஆம், ஆம்! அம்மாதிரி ஒருகாலும் செய்து விடாதே! அந்த எண்ணத்தையே விட்டுவிடு! ஜனங்கள் நினைப்பது ஒருபுறம் இருக்கட்டும். சக்கரவர்த்தியின் நெஞ்சு நிச்சயமாகப் பிளந்து போய்விடும். மந்தாகினி தேவியையும், கரிகாலனையும் நினைந்து நினைந்து அவர் துயரப்பட்டுக் கொண்டிருப்பது போதும்!'' என்றாள் இளையபிராட்டி.

''ஆகையினால்தான் நான் ஓடிப் போகத் தயங்குகிறேன். எப்படியாவது ஜனங்களுக்கும் வீரர்களுக்கும் நல்ல வார்த்தை சொல்லி மதுராந்தகருக்குப் பட்டம் கட்ட அவர்களுடைய சம்மதத்தைப் பெறுவதற்குப் பார்க்கிறேன். நான் பேசும்போதெல்லாம் ஜனங்களும் வீரர்களும் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் இப்பால் திரும்பியதும் உடனே பழையபடி கோஷம் போடத் தொடங்கிவிடுகிறார்கள். நான் அவர்களுடைய மனத்தை மாற்றி விட்டதாக நினைத்துக் கொண்டு இப்பால் வருகிறேன். உடனே திருக்கோவலூர்ப் பாட்டனும் கொடும்பாளூர் வேளானும் போய்ப் படை வீரர்களுடைய மனத்தை மாற்றிவிடுகிறார்கள்! அக்கா! அவர்களைப் பற்றி உன்னிடம் சொல்லத்தான் வந்தேன். மலையமானையும் வேளாரையும் நீ அழைத்துப் பேச வேண்டும். நான் எது சொன்னாலும் அவர்கள் காதில் வாங்கிக் கொள்வதில்லை. நீ சொன்னால் ஒரு வேளை கேட்பார்கள்.....''

''நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டேன், தம்பி! அவர்கள் பிடிவாதத்தை மாற்ற முடியவில்லை. வேறு ஏதேனும் உபாயத்தைத்தான் பார்க்க வேண்டும்....''

''அக்கா! வேளாரிடம் நீ ஒரு செய்தியைக் கூறியிருக்க மாட்டாய். அதைச் சொன்னால் அவர் ஒரு வேளை எனக்குப் பட்டம் கட்டுவதில் இவ்வளவு பிடிவாதமாக இருக்க மாட்டார்.''

''அது என்ன, தம்பி!''



''உன் தோழி வானதி செய்திருக்கும் சபதத்தைப் பற்றிக் கூற வேண்டும். அவள் என்னோடு சிங்காதனத்தில் அமருவதில்லை என்று சத்தியம் செய்திருக்கிறாள் அல்லவா? அதைப் பற்றிச் சொன்னால், பெரிய வேளாருக்கு எனக்குப் பட்டம் கட்டுவதில் அவ்வளவு சிரத்தை இல்லாமல் போய் விடும்.''

'' தம்பி ! அதை நான் அவரிடம் சொல்ல வில்லை என்றா நினைத்தாய் ? சொல்லியாகி விட்டது. அதற்கு அவர் என்ன சொல்கிறார், தெரியுமா! 'ஒரு சிறு பெண்ணின் மூடத்தனத்துக்காக ஒரு பெரிய ராஜ்யத்தைப் பாழாக்கச் சொல்கிறீர்களா? வானதி இல்லாவிட்டால், இந்தப் பாரத தேசத்தில் நூறு இளவரசிகள் அருள்மொழிக்கு மாலையிடக் காத்திருக்கிறார்கள். சிங்காதனம் ஏறச் சொன்னாலும் ஏறுவார்கள்; கழுமரத்தில் ஏறச் சொன்னால்கூட ஏறுவார்கள்!' என்று சேநாதிபதி கூறி விட்டு வானதியைக் கோபப் பார்வை பார்த்தார். அந்தப் பெண் நடுநடுங்கிப் போய் விட்டாள்!''

அருள்மொழி வர்மன் புன்னகை புரிந்து, ''நல்ல வேளையாக அப்பொழுது மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிடவில்லையே!'' என்று சொல்லிக்கொண்டே சுற்று முற்றும் பார்த்தார்.

'' வானதியை ஒரு காரியமாக அனுப்பியிருக்கிறேன்'' என்றாள் இளைய பிராட்டி.

'' அக்கா ! நீயும் வானதியும் என் கட்சியில் உறுதியாக இருந்தால் ஒரு மாதிரி சமாளிக்கலாம். நாம் இருவரும் சக்கரவர்த்தியிடம் செல்வோம். சக்கரவர்த்தியின் கண்டிப்பான கண்டனைக்குத்தான் இந்தக் கிழவர்கள் இருவரும் கீழ்ப்படிவார்கள்....''

''அதற்கும் ஓர் இடையூறு இருக்கிறதே, தம்பி ! செம்பியன் மாதேவி குறுக்கே நிற்கிறார்களே ? நாம் சொல்வதற்கு விரோதமாக அவர் பிடிவாதமாகச் சொன்னால், நம் தந்தைதான் என்ன செய்வார்! அவருடைய மனமே பேதலித்துப் போனாலும் போய் விடும். ஆகையால் இது விஷயமாகச் சக்கரவர்த்தியைத் தொந்தரவு செய்யவும் எனக்குப் பயமாயிருக்கிறது.''

''அப்படியானால் நாம் இருவரும் சேர்ந்து செம்பியன் மாதேவியைத்தான் பிரார்த்தனை செய்து கேட்டுக் கொள்ள வேண்டும். அவருடைய மனத்தை மாற்ற முயல வேண்டும். மதுராந்தகருக்குப் பட்டம் கட்டக் கூடாது என்று அவர் பிடிவாதம் பிடிப்பதற்குக் காரணம் நாம் ஊகித்ததுதான். சற்று முன்னால் முதன் மந்திரி அநிருத்தர் வீட்டில் அவரைச் சந்தித்தேன். மதுராந்தகரிடம் இன்றைக்குத்தான் அவர் உண்மையைக் கூறினார். 'நீ என் மகன் அல்ல' என்று சொன்னதும் நம் சித்தப்பாவின் முகத்தை நீ பார்த்திருக்க வேண்டும். களை சொட்டும் அவருடைய அழகிய முகம் கோர ராட்சதனின் முகம் போல் மாறி விட்டது. நல்ல வேளையாக அந்தச் சமயம் நான் போய்ச் சேர்ந்தேன்.....''

''அப்படியா ? அப்புறம் என்ன நடந்தது ?'' என்றாள் குந்தவை.

''பாட்டியின் முன்னால் கைகூப்பி நின்று, 'அம்மா! மதுராந்தகர் தங்கள் வயிற்றில் பிறந்த மகன் அல்ல என்பதை நானும் அறிவேன். அதனால் என்ன? தாங்கள் அருமையாக வளர்த்த புதல்வர் தங்கள் புதல்வரே அல்லவா? ஆகையால் அவர்தான் மகுடம் சூட்டிக் கொள்ள வேண்டும்' என்றேன்....''

''அதற்குப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி என்ன பதில் கூறினார்?''

''அவர் பதில் கூறுவதற்கு முன்னால் திரும்பி வந்து விட்டேன்....''

''தம்பி! மதுராந்தகர் செம்பியன் மாதேவியின் புதல்வர் இல்லாவிட்டாலும், வேறு வகையில் அவருக்கு இந்தச் சோழ சிம்மாதனத்துக்கு உரிமை உண்டு என்று நீ சொல்ல வில்லையா? அவரும் நம் தந்தையின் புதல்வர், உன் தமையன் என்று கூறவில்லையா?''

''சொல்லவில்லை, அக்கா !''

''ஏன், தம்பி! அதனால் நம் தந்தைக்குக் களங்கம் உண்டாகும் என்று அஞ்சினாயா? அல்லது பின்னால் சொல்லிக் கொள்ளலாம் என்று எண்ணினாயா?''

''இல்லை, அக்கா! நீயும் நானும் இத்தனை நாளும் அதைப் பற்றிக் கொண்டிருந்த நம்பிக்கை ஆதாரமற்றது என்று அறிந்தேன். அதனால்தான் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை....''

''அது எப்படி, தம்பி!''

''ஆம், அக்கா! முதன்மந்திரி அநிருத்தருக்கு அந்தச் செய்தியெல்லாம் நன்றாய்த் தெரியும். நம் தந்தை ஈழத் தீவிலிருந்து திரும்பி வந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மதுராந்தகரும் நந்தினியும் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தார்களாம். ஆகையால், அவர்கள் நம் உடன் பிறந்தவர்களாக இருக்க முடியாதல்லவா ?'' என்றார் அருள்மொழி.

குந்தவை சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, ''அருள்மொழி ! இது தெரிந்தும் நீ மதுராந்தகருக்குப்

பட்டத்தைக் கொடுப்பதற்கு விரும்புகிறாயா?'' என்று கேட்டாள்.

''ஆம், அக்கா! எப்படியும் மதுராந்தகர் மந்தாகினி தேவியின் வயிற்றில் பிறந்த புதல்வர். செம்பியன் மாதேவி எடுத்து வளர்த்த புதல்வர். எனக்கோ இராஜ்யம் ஆளுவதில் சிறிதும் ஆசை கிடையாது! உன் தோழி வானதிக்கும் சிங்காதனம் ஏறும் விருப்பம் இல்லை...''

''தம்பி! இராம கதையில் பரதர் தமக்குக் கிடைத்த இராஜ்யத்தை வேண்டாமென்று சொல்லி இராமரை அழைத்துவரப் போனார். குகன் இதை அறிந்ததும் 'ஆயிரம் இராமர் உனக்கு இணையாக மாட்டார்' என்று கூறினாரும். 'ஆயிரம் பரதர்கள் உனக்கு இணையாக மாட்டார்கள்' என்று சோழ நாட்டு மக்கள் சொல்லப் போகிறார்கள்.....''

''பிற்பாடு அவர்கள் எது வேணுமானாலும் சொல்லட்டும். இச் சமயம் என்னை விட்டால் போதும் என்றிருக்கிறது. அக்கா! கடைசியாக, நான் ஒரு யுக்தி கண்டுபிடித்து மனத்துக்குள் வைத்திருக்கிறேன். அதைப் பற்றி உன் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள விரும்புகிறேன்....''

''அது என்ன யுக்தி, தம்பி!''

''குடந்தைக்கு அருகில் பழுவேட்டரையர்கள் படை திரட்டிச் சேர்த்து வருகிறார்கள் என்பது தெரியும் அல்லவா?....''

''ஆமாம்; அவர்களுடன் பல சிற்றரசர்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் தெரியும். ஆனால் அது மிகவும் சிறிய படை என்று கேள்விப்படுகிறேன். நம் பாட்டனாரும் வேளாரும் இங்கே வைத்திருக்கும் படையோடு போனால் மூன்றே முக்கால் நாழிகையில் அந்தப் படையை அழித்து விடுவோம் என்று சொல்கிறார்களே?''

''அப்படி ஒன்றும் நேராமலிருப்பதற்குத்தான் யுக்தி செய்திருக்கிறேன். ஒருவருக்கும் தெரியாமல் நான் மட்டும் ஒரு குதிரை மேல் ஏறிக் கொண்டு போய்ப் பழுவேட்டரையர்களிடம் என்னை ஒப்புக் கொடுத்துவிடப் போகிறேன். அவர்கள் என்னைச் சிறைப்படுத்திவிடுவார்கள். அப்புறம் நம் பாட்டன் மலையமானும் சேநாபதி பெரிய வேளாரும் ஒன்றும் செய்ய முடியாது அல்லவா?''

குந்தவை மூக்கில் விரல் வைத்து அதிசயித்துவிட்டு, ''அற்புதமான யுக்திதான், தம்பி! ஆனால் அதிலும் ஒரு சிறிய அபாயம் இருக்கிறது!'' என்றாள்.

''அது என்ன, அக்கா?''

''நீ பழுவேட்டரையர்கள் திரட்டும் படையை அடைந்ததும், அந்தப் படையில் உள்ள வீரர்கள் என்ன செய்வார்கள், தெரியுமா? 'அருள்மொழி வர்மர் வாழ்க!' 'பொன்னியின் செல்வருக்கே பட்டம்!' என்று கூச்சலிடத் தொடங்குவார்கள். உன்னைச் சிறை வைப்பதற்குப் பதிலாகப் பழுவேட்டரையர்களைப் பிடித்துச் சிறை வைத்தாலும் வைத்து விடுவார்கள்!''

அருள்மொழி வர்மர் சிறிது நேரம் திகைத்துப் போய் நின்றார்.

''ஆமாம்; அந்த அபாயம் ஏற்படலாம் என்று எனக்குத் தெரியாமற் போயிற்று. நல்லவேளையாகத் தாங்கள்



சாம்புகள் சந்தித்தனர்!

கடந்த இரண்டு வருடங்களாக ஜூலை மாதத்தில் பம்பாயிலிருந்து தமிழ் நாட்டுக்கு வருகை தந்த தியாகப் பிரம்மம் இந்த ஆண்டு தமக்குத் துணையாகத் துப்பறியும் சாம்புவையும் அழைத்து வந்தார்!

ஆம், பம்பாய் மாதுங்கா நாடகக் குழுவினர், இந்தத் தடவை தமிழகத்துக்கு வந்தபோது அவர்களுடைய ஏற்கனவே அறிமுகமான 'பக்த தியாகராஜர்' நாடகத்துடன் 'துப்பறியும் சாம்பு' நாடகத்தையும் ரசிகர்களால் பார்க்க முடிந்தது. 'பக்த தியாகராஜா'வைப் பார்த்துப் பக்திப் பரவசமடையும் வாய்ப்பு, மதுரை, கும்பகோணம், தஞ்சாவூர், ரசிகர்களுக்கும், சாம்புவைச் சந்தித்து 'சபாஷ்' என்று பாராட்டும் வாய்ப்பு ஈரோடு, சேலம், கும்பகோணம், பாண்டிச்சேரி, சென்னை ரசிகர்களுக்கும் கிடைத்தன.

சென்னை பார்த்தசாரதி சபை அரங்கில் நடந்த 'துப்பறியும் சாம்பு' நாடகத்துக்குச் சென்னை நாடக வட்டாரத்தில் நன்கு அறிமுகமான 'சாம்பு நடராஜ'ய்யர் தலைமை வகித்தார். நல்ல பொருத்தம்! சாம்புவாக நடித்த ராஜாராம் கன கச்சிதமாக நடித்தார். பிரமாதமான வேஷப் பொருத்தம். 'சாந்தமுலேகா' என்று அமைதியாகப் பாடிக் கொண்டு தியாகராஜராகத் தோன்றும் மாதுங்கா நாடகக் குழு காரியதரிசி எஸ். ஆர். கஸ்தூரி, 'சாம்பு' நாடகத்தில் அட்டகாசமான இன்ஸ்பெக்டர் கோபாலன் பாத்திரத்தைத் தாங்கி இணைந்து நடித்தார். பம்பாயில் ஒரேயடியான வேக வாழ்க்கையில் பழகிப் போயிருப்பதாலோ என்னவோ, இங்கு வந்திருந்த போது அமைதியுடனும் அவசரமில்லாமலும் குழுவினர் நடித்தார்கள். — கோமதி ஸ்வாமிநாதன்

எச்சரித்தீர்கள். இந்தத் தஞ்சைபுரிக் கோட்டைக்குள் மாறுவேடம் பூண்டு வந்ததுபோல் அங்கேயும் மாறுவேடம் புனைந்து போகிறேன்...''

''என்னதான் மாறுவேடம் பூண்டு போனாலும் எத்தனை நேரம் உண்மை வெளிப்படாதிருக்கும், தம்பி? ஒருவருக்குத் தெரிந்தால் போதுமே! ஒரு நாழிகைக்கெல்லாம் எல்லாருக்கும் தெரிந்துவிடும். அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்களும் வந்து கூடிவிடுவார்களே!''

அருள்மொழியின் முகம் சுருங்கிற்று.

''அக்கா! பின்னர் என்னதான் என்னைச் செய்யச் சொல்கிறீர்கள்? இந்த உலகத்தில் எதற்காக நான் பிறந்தேன்? பிறருக்குத் தொல்லை கொடுப்பதற்காகத்தானா? காவேரியில் நான் விழுந்து முழுகியபோதே இறந்து போயிருக்கக் கூடாதா?'' என்றார்.

''தம்பி! யார் கண்டார்கள்? ஜோதிடர்களும் ரேகை சாஸ்திரிகளும் கூறியதெல்லாம் உண்மைதானோ என்னவோ! நீ வேண்டாம் என்று தள்ளினாலும் இராஜ்ய லக்ஷ்மி உன்னை வந்து அடைவாள் போலிருக்கிறது. நீ பிறந்தவேளை அப்படி இருக்கிறது!''

''அக்கா! தாங்களும் நம் பாட்டன் மலையமானோடு சேர்ந்துகொண்டீர்களா? தங்கள் மனமும் மாறிவிட்டதா?''

''பாட்டன் போதனையினால் என் மனம் சலிக்கவில்லை, தம்பி! ஆனால் அண்ணன் கரிகாலனுடைய ஓலையினால் கொஞ்சம் என் மனமும் மாறித்தான் இருக்கிறது. அவன் கண்ட கனவுகளையெல்லாம் நீ காரியத்தில் நிறைவேற்றுவாய் என்று எழுதியிருக்கிறான். அதைப் படித்ததும்....'' என்று கூறியபோது குந்தவையின் கண்களில் கண்ணீர் ததும்பிக் குரலும் தழுதழுத்தது.

பொன்னியின் செல்வன், ஆதித்த கரிகாலனுடைய ஓலையை வாங்கிப் படித்தார். அவருடைய கண்களிலே யிருந்தும் கண்ணீர் பொழிந்தது.

ஓலையை அவர் படித்து முடித்ததும் குந்தவை கூறினாள்: ''தம்பி! நீ என்ன நினைத்துக் கொண்டாலும் சரிதான். என் மனத்தில் உள்ளதைச் சொல்லி விடுகிறேன். மதுராந்தகனும் நந்தினியும் நம் சோழ குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவென்று தெரிந்து கொண்டதில் என் மனம் ஒருவாறு நிம்மதி அடைந்திருக்கிறது. சோழ குலத்தில் பிறக்காத ஒருவனைச் சோழ சிங்காதனம் ஏறச் செய்வதிலும் எனக்கு விருப்பம் இல்லை. செம்பியன் மாதேவியிடமும், மந்தாகினி தேவியிடமும் எனக்கு எவ்வளவு பக்தி இருந்தாலும் அவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க என்னால் முடியவில்லை. மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவதை இனி ஒரு கணமும் என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது...''

''அக்கா! அக்கா! இது என்ன சொல்கிறீர்? செம்பியன் மாதேவி முன்னாலும், அநிருத்தர் முன்னாலும் மதுராந்தகன் முன்னாலும் 'எனக்குப் பட்டம் வேண்டாம்' என்று சொல்லி விட்டு வந்தேன். ஆயிரமாயிரம் போர்வீரர்கள் முன்னாலும் மகாஜனங்களின் முன்னாலும் அவ்விதமே சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இப்போது என் வார்த்தையை மீறச் சொல்கிறீர்களா?'' என்று கேட்டார் அருள்மொழி வர்மர்.

''தம்பி! உனக்கும் எனக்கும் நம் குல தெய்வமான துர்க்கா பரமேசுவரிதான் வழிகாட்ட வேண்டும். உனக்கு என்ன யோசனை சொல்லுவது என்று எனக்கும் தெளிவாகத் தெரியவில்லை. ஆதித்த கரிகாலன் என் வார்த்தையைக் கேட்டிருந்தால் இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டே இராது! அந்த மகா வீரனுக்கு இந்தக் கதியா நேர்ந்திருக்க வேண்டும்?'' என்று குந்தவை புலம்பினாள்.

''இந்த ஓலை தங்களுக்கு எப்படிக் கிடைத்தது அக்கா? யார் கொண்டு வந்தார்கள்? எப்போது தங்கள் கைக்கு வந்தது? ஏன் முன்னாலேயே சொல்லவில்லை?'' என்றார் அருள்மொழி.

''சற்று முன்னாலேதான் எனக்கு வந்தது. சம்புவரையரின் மகள் மணிமேகலை கொண்டு வந்து கொடுத்தாள்.''

''ஆம், ஆம்; மணிமேகலையைப்பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவளிடம் இந்த ஓலை எவ்விதம் வந்தது?''

''அவளே இருக்கிறாள், தம்பி! நீயே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்! அவள் பேச்சை எவ்வளவு தூரம் நம்புவது என்று எனக்கே தெரியவில்லை'' என்றாள் இளையபிராட்டி குந்தவை.

அருள்மொழி வர்மன் உள்ளே வந்தவுடனேயே மணிமேகலையை அவர் முன்னால் நிறுத்தி வந்தியத்தேவனைப் பற்றிப் பிரஸ்தாபிக்கச் சொல்வதென்று இளையபிராட்டி தீர்மானித்திருந்தாள். இத்தனை சம்பாஷணைகளுக்கு மத்தியிலும் அவளுடைய உள் மனம் வந்தியத்தேவர் பாதாளச் சிறையில் இருப்பதுபற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது. அவரைப் பற்றித் தானே பேச்சு எடுக்கக் குந்தவை விரும்பவில்லை. மணிமேகலையை அழைப்பதற்கு ஒரு தக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி யிருந்தாள். அந்தச் சந்தர்ப்பம் இப்போது கிடைத்ததும், வானதியைக் கூவி

அழைத்து, மணிமேகலையை அழைத்து வரும்படி கூறினாள்.

மணிமேகலை வரும்போதே கண்ணீர் ததும்பிய சோக மயமான முகத்துடன் வந்தாள். இதைப் பார்த்த பொன்னியின் செல்வன் அவள் துயரப்படுவதற்குக் காரணம் இருக்கிறது என்று எண்ணினார்.

''தம்பி! இந்தப் பெண்தான் மணிமேகலை. ஓலையை இவள்தான் கொண்டு வந்தாள். இது எப்படி இவளிடம் வந்தது என்று நீயே கேட்டுக்கொள்!''

''சகோதரி! எங்கள் தமையன் கடைசியாக எழுதிய இந்த ஓலையை நீ கொண்டு வந்து பத்திரமாக ஒப்புவித்தாய். இதற்காக உன்னிடம் நாங்கள் என்றைக்கும் நன்றி செலுத்துவோம்...!'' என்று மேலே அருள்மொழி வர்மன் தொடர்வதற்குள்ளே, மணிமேகலை திடீரென்று அவர் முன்னால் விழுந்து வணங்கினாள்.

''இளவரசே! பொன்னியின் செல்வ! தாங்கள் இப்போது சொன்ன வார்த்தை சத்தியமா? என்னிடம் தாங்கள் நன்றி செலுத்துவது உண்மையானால்...''

இவ்வாறு சொல்லி விட்டு மேலே பேச முடியாமல் மணிமேகலை விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

''அக்கா! இது என்ன? இந்தப் பெண் எதற்காக இப்படி விம்மி அழுகிறாள்? ஒருவேளை இவளுடைய வீட்டில் நம் தமையன் இறக்க நேர்ந்ததே என்று வருந்துகிறாளா?''

''இல்லை, தம்பி! இவள் மனத்தில் இருப்பது வேறொரு காரியம். மணிமேகலை! என்னிடம் கூறியதை இளவரசரிடமும் சொல்லு!'' என்று குந்தவைப் பிராட்டி அவளைத் தைரியப்படுத்தினாள்.

''ஐயா! தங்கள் தமையனைக் கொன்ற பாவி நான்தான். என்னைப் பாதாளச் சிறையில் போட்டுவிட்டு அவரை விடுதலை செய்யுங்கள்!'' என்று அழுது கொண்டே கூறினாள் மணிமேகலை.

அருள்மொழி வர்மன் திகைப்புடன் குந்தவையைப் பார்த்து, ''அக்கா! இவள் என்ன சொல்லுகிறாள்? இந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?'' என்று கேட்டார்.

''இவளுக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை, தம்பி! ஆனால் சீக்கிரத்தில் வல்லத்து இளவரசரைப் பாதாளச் சிறையிலிருந்து விடுதலை செய்யாவிட்டால், இவளுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும்!''

''என்ன? என்ன? யார் பாதாளச் சிறையில் இருக்கிறது?'' என்று வியப்புடன் கேட்டார் அருள்மொழி.

''ஈழநாட்டுக்கு நான் ஓலை கொடுத்து அனுப்பிய வாணர்குல வீரரை அடியோடு மறந்து விட்டாயா தம்பி?''

நெடுங் கனவிலிருந்து அப்பொழுது தான் விழித்து எழுந்து இந்த உலக நினைவு வந்தவரைப் போல் அருள்மொழி வர்மன் ஒரு நிமிட நேரம் தோற்றமளித்தார். தஞ்சைக் கோட்டைக்குள் அவர் பிரவேசித்ததிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக நடந்த சம்பவங்கள் அவருடைய கவனத்தை முழுதும் கவர்ந்திருந்தன. கரிகாலருடைய மரணச் செய்தி வந்த பிறகு, சோழ சிங்காதனத்தில் மதுராந்தகரை ஏறச் செய்யும் மார்க்கத்தைப் பற்றிச் சிந்திப்பதிலேயே அவருடைய உள்ளம் முழுவதும் ஈடுபட்டிருந்தது.

வந்தியத்தேவனைப் பற்றி உண்மையிலேயே அவர் மறந்து விட்டிருந்தார்.


இப்போது அவன் பெயரைக் கேட்டதும் ஒரு துள்ளுத் துள்ளி, ''யார்?

அரைப் பணம் கொடுத்து ஆடச் சொல்லி ஒரு பணம் கொடுத்து நிறுத்த வேண்டும்!

மேனாடுகளில் ஜூக் பாக்ஸ் என்ற கருவியைப் பொது இடங்கள் பலவற்றில் காணலாம். காசு போட்டுவிட்டு நாம் விரும்பும் இசைத் தட்டுக்குரிய பொத்தானை அழுத்தினால் அந்தப் பாட்டு ஒலிக்கும்.

ஜப்பானியக் கம்பெனி ஒன்று புதுவிதமான 'ஜூக் பாக்ஸ்' ஒன்றைத் தயாரித்திருக்கிறது.

பானக் கடைகள், தங்குமிடங்கள் இவற்றில் காசு போட்டுப் பாடல் கேட்காமல் அரை மணி நேரத்துக்கு மேல் சோம்பிக் கிடக்கும் நபர்கள் இருந்தால் அந்தப் பெட்டி அலறி அழ ஆரம்பித்துவிடும். உடனே ஏதாவது சில்லறையைப் போட்டால்தான் அழுகை நிற்கும்! - ''தேஜ்''



என்னுடைய அருமை நண்பர் வந்தியத்தேவரா பாதாளச் சிறையில் இருக்கிறார்? எதற்காக? யார் அவரைச் சிறையில் அடைத்தது?'' என்று கேட்டார்.

மணிமேகலை கூறிய விவரங்களைக் குந்தவை அவருக்கு எடுத்துக் கூறினாள்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பொன்னியின் செல்வன், ''அக்கா! என்னைப் போன்ற நன்றி கெட்டவன் யாருமே இருக்க முடியாது. வாணர் குலத்து வீரரைப் பற்றி நான் விசாரிக்காமலே இருந்து விட்டேன். அது என் குற்றம்தான். அவரைப் பாதாளச் சிறையில் அடைக்கத் துணிந்தவர்கள் என்னைவிடப் பெரிய குற்றவாளிகள். நம் தமையனிடம் அவருக்கு எவ்வளவு பக்தி உண்டு என்பதை நான் அறிவேன். கரிகாலரின் மரணத்துக்கு அவரைப் பொறுப்பாளியாக்கத் துணிந்தவர்கள் யார்? இது என்ன மூடத்தனம்? அவரைத் தப்புவிப்பதற்காக இந்தப் பெண் தன் பேரில் குற்றம் சுமத்திக் கொள்வது நமக்கெல்லாம் ஒரு பாடம் கற்பிப்பது போலிருக்கிறது. இந்தப் பெண்ணைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. மற்றக் காரியங்கள் அப்புறம் ஆகட்டும். இப்போதே பாதாளச் சிறைக்குச் சென்று வந்தியத்தேவரை விடுவித்துக் கொண்டு வருகிறேன். சம்புவரையர் மகளுக்கு நீ தேறுதல் கூறு!'' என்று சொல்லி விட்டுத் திரும்பி, விடு விடு வென்று நடந்தார்.

அவர் வாயிற்படியை அடைந்த போது, அங்கே திடீரென்று திருக்கோவலூர் மலையமானும் கொடும்பாளூர் வேளாரும் தோன்றினார்கள்.

அவர்களுடைய தோற்றம் இளவரசரின் மனத்தில் ஒருவித ஐயத்தை உண்டுபண்ணியது.

பெரிய வேளார் தம் கையில் கொண்டு வந்திருந்த வேலை வாசற்படியின் குறுக்கே வைத்து இளவரசரைத் தடுக்கும் பாவனையில் நின்றார். அவருக்குப் பின்னால் மலையமானும் கையில் பிடித்திருந்த கத்தியைக் கீழே ஊன்றிய வண்ணம் இளவரசர் மேலே போவதைத் தடுப்பதற்கு ஆயத்தமாக நின்றார்.

பொன்னியின் செல்வர் பெரும் வியப்புடனும் சிறிது கோபத்துடனும், ''சேநாதிபதி! இது என்ன? என்னைக் கூடச் சிறைப்படுத்தப் போகிறீர்களா?'' என்று கேட்டார்.

''இளவரசே! இப்போது பாதாளச் சிறைக்குப் போகாமல் தங்களைத் தடை செய்கிறோம். அவசியம் நேர்ந்தால் சிறைப்படுத்தவும் செய்வோம்!'' என்றார் பூதி விக்கிரம கேசரி.

அவர் கூறியது உண்மையாகவா, வேடிக்கையாகவா என்று பொன்னியின் செல்வனுக்கு விளங்கவில்லை. ஆனால் வேடிக்கையைப் பொறுத்துக்கொள்ளும் மனோநிலையும் அச்சமயம் அவருக்கு இல்லை. ஆகையால் முன்னைவிடக் கோபமான குரலில், ''எந்த அதிகாரத்தைக் கொண்டு என்னைத் தடை செய்ய முன் வந்தீர்கள்?'' என்றார்.

''தாங்கள் எந்த அதிகாரத்தைக் கொண்டு பாதாளச் சிறையில் உள்ளவனை விடுதலை செய்யப் போகிறீர்கள்?'' என்றார் பெரிய வேளார்.

''சேநாதிபதி! எனக்கு அந்த அதிகாரம் இல்லையா? நான் யார் என்பதை மறந்துவிட்டீர்களா? அல்லது தங்களைத் தாங்களே மறந்து விட்டீர்களா?''


''என்னை நான் மறக்கவும் இல்லை; தாங்கள் யார் என்பதை மறக்கவுமில்லை. நான் தஞ்சைக் கோட்டைக்கு இன்று தளபதி. ஆகையால் பாதாளச் சிறைக்குக் காவலன். தாங்கள் சக்கரவர்த்தியின் திருக் குமாரர்; பொன்னியின் செல்வர். ஆயினும் தங்கள் தமையனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டிப் பாதாளச் சிறையில் வைக்கப்பட்டவனை விடுதலை செய்யத் தங்களுக்கு அதிகாரம் கிடையாது. சக்கரவர்த்திக்குத்தான் அந்த அதிகாரம் உண்டு; அல்லது சக்கரவர்த்தியின் ஸ்தானத்தில் முடிசூட்டிக்கொள்ளப் போகிறவருக்கு அந்த அதிகாரம் உண்டு. தாங்களோ சோழ சிங்காதனத்தில் ஏறப் போவதில்லை என்று பறைசாற்றிக் கொண்டு வருகிறீர்கள். ஆகையால் சக்கரவர்த்தியின் கட்டளையின்றிப் பாதாளச் சிறையிலிருந்து யாரையும் விடுவிக்க முடியாது!'' என்றார் கொடும்பாளூர்ப் பெரிய வேளாராகிய சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி.


''குழந்தாய்! வேளார் கூறியது உண்மையான வார்த்தை. சின்னப் பழுவேட்டரையன் ஓடிப்போனபடியால் பெரிய வேளாரைத் தஞ்சைக் கோட்டைத் தளபதியாகச் சக்கரவர்த்தி நியமித்திருக்கிறார். ஆகையால் பாதாளச் சிறையிலிருந்து யாரையும் விடுவிக்க உனக்கு அதிகாரம் இல்லை!'' என்று மலையமான் ஆமோதித்தார்.

பொன்னியின் செல்வர் அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மௌனமாக நின்றார்.

மணிமேகலையின் விம்மல் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

(தொடரும்)


Enjoy Coke
காலமெதுவாயினும்
கோலாகலம் தரும் கோகா-கோலா!



இருமல்களுக்கு, இந்தியாவில் மிக அதிகமாக விற்பனையாகும் வீட்டு நிவாரணி

தமிழருக்கு ஓர் ஆசியப்பரிசு

ஆசியாவின் சிறந்த பரிசுகளில் ஒன்று, ராமோன் மாக்ஸேஸே பரிசு. 75,000 ரூபாய் பெறுமானமுள்ளது. நடப்பு ஆண்டுக்கான இப்பரிசைப் பெறும் பெருமை வாய்ந்தவர், தமிழகம் தந்த ஒரு தாவர இயல் விஞ்ஞானி. அவர், தற்சமயம் தில்லியில் உள்ள பாரத விவசாய ஆராய்ச்சிக் கூடத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்று, திறம்படச் செயலாற்றி வரும் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்.

ராமோன் மாக்ஸேஸே பரிசு ஆண்டுதோறும் சர்வதேச ஒத்துழைப்பு, அரசாங்க சேவை, பொதுஜன சமூக சேவை இலக்கியமும் பத்திரிகைத் தொழிலும் ஆகிய பிரிவுகளில் சிறந்து விளங்கும் ஆசிய பிரஜைகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

பாரதத்தின் விவசாய உற்பத்தித் திறனை உயர்த்துவதைவிடச் சிறந்த சமூக சேவை இங்கு வேறு என்ன இருக்க முடியும்?

ஸொனோரா — 64 என்ற உயரம் குறைந்த, அதிக விளைச்சல் தரக் கூடிய சிவப்பு நிற மெக்ஸிகன் கோதுமையிலிருந்து கதிரியக்க முறையைக் கையாண்டு சடுதி மாற்றத்தின் மூலம் (Mutation) டாக்டர் சுவாமிநாதனும், அவரது துணை விஞ்ஞானிகளும், ஷர்பதி ஸொனோரா என்ற புது ரகக் கோதுமையை உருவாக்கியுள்ளனர். அம்பர் நிறமுள்ள இப்புது ரகக் கோதுமையில் உள்ள புரதச் சத்து 20 சதவிகிதம் அதிகமாகும். தவிர இதில் லைசின் (Lysine) என்ற உயர்ந்த ரக அமினோ ஆஸிட் (Amino Acid) சாதாரண ரகக் கோதுமையில் உள்ளதைவிட 3 சதவிகிதம் அதிகமாக உள்ளது. இது பாலில் உள்ள புரதச் சத்துக்குச் சமமாகும். இதன் காரணமாகப் போதிய அளவு பால் அருந்த முடியாத ஏழைக் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு இந்தப் புதுரகக் கோதுமை பெரிதும் உதவுகிறது.

டாக்டர் சுவாமிநாதனின் ஆராய்ச்சியின் மூலம் இரண்டுவித மெக்ஸிகன் உருளைக் கிழங்குச் செடிகளை ஒட்ட வைத்து, புதுரக உருளைக் கிழங்கு ஒன்றைத் தோற்றுவித்த முறை, Swaminathan Artificial Stigma Method என்ற பெயருடன் தாவர இயலில் விளங்கி வருகிறது. இதற்கு முன் கையாண்ட முயற்சிகள் யாவும் தோல்வியுற்றதன் காரணமாக, டாக்டர் சுவாமிநாதன் உருவாக்கிய முறை அயல்நாடுகளிலும் தாவர இயல் நிபுணர்களால் கையாளப்பட்டு வருகிறது.

இத்தகைய பெருமை வாய்ந்த டாக்டர் சுவாமிநாதன் நிர்வகித்து வரும் தில்லியின் பாரத விவசாய ஆராய்ச்சிக் கூடம் மிகப் பழமையானது.



ஆசியாவின் சிறந்த பரிசான ராமோன் மாக்ஸேஸே பரிசு பெற்ற டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஹென்ரி பிப்ஸ் என்ற செல்வந்தர், 1905ம் ஆண்டில் மூப்பதாயிரம் பவுன்கள் நன்கொடையாக அளித்து உதவியதை ட்டுத்து, பாட்னாவுக்கு நாறு மைல் தொலைவில் பாரத விவசாய ஆராய்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. பிப்ஸ் என்ற பெயரின் முதல் ஆங்கில எழுத்தான 'P'

“ ஜனார்த்தனன் ”

அமெரிக்காவைக் குறிக்கும் U S A என்ற எழுத்துக்களுடன் சேர்ந்து, PUSA என்ற பெயருடன் அந்த ஆராய்ச்சிக் கழகம் தொடங்கி இன்றைக்கும் அதே செல்லப் பெயருடன் இயங்கி வருகிறது. 1934-ம் ஆண்டில் நேர்ந்த பூகம்பத்தில் பூஸா ஆராய்ச்சிக் கூடத்தின் பிப்ஸ் ஆராய்ச்சி சாலையும், மற்றும் பல கட்டடங்களும் இரண்டாகப் பிளந்து சேதமடையவே, ஆராய்ச்சிக் கூடம் தில்லி நகரில் புதிதாகக் கட்டப்பட்டுத் தற்சமயம் சுமார் 1300 ஏக்கர் நிலப் பகுதியில் அதே பெயரில் இயங்கி, விவசாயத் துறைக்கு அருந்தொண்டாற்றி வருகிறது.

கோவை விவசாயக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற ஸ்வாமிநாதன் ஹாலந்து, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து ஆராய்ச்சிகள் பல புரிந்துள்ளவர்.

பத்மஸ்ரீ உள்பட டாக்டர் சுவாமிநாதனுக்குக் கிடைத்திருக்கும் பரிசுகளும் விருதுகளும் அநேகம். அயல்நாடுகள் பல

விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன. எல்லாவற்றையும் விட அவர் பெரிதும் மதிப்பது, அவர்மீது தங்களுக்குள்ள மரியாதைக்கும் அன்புக்கும் சான்றாகத் தில்லி வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் பிரதமர் இந்திரா காந்தி மூலம் அளித்த பதக்கமாகத்தானே இருக்க முடியும்.

கடந்த 1957ம் ஆண்டு நேர்ந்த விமான வெடிவிபத்து ஒன்றில் இறந்த பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபர் ராமோன் மாக்ஸேஸேயின் பெயரில் அளிக்கப்பட்டு வரும் மாக்ஸேஸே பரிசு ஆண்டுதோறும் அவர் பிறந்த தினமான ஆகஸ்ட் 31ந் தேதியன்று வழங்கப்படுகிறது. ராக்பெல்லர் சகோதரர்கள் நிதியிலிருந்து கிடைத்த முப்பத்தேழரை லட்சம் ரூபாயைக் கொண்டு அளிக்கப்படும் இப்பரிசு பாரதத்தில் ஏற்கனவே சிலருக்குக் கிடைத்திருக்கிறது.

டாக்டர் கலாமிநாதனுக்கு ஆகஸ்ட் 7ந் தேதியன்று மாக்ஸேஸே பரிசு பற்றிய செய்தி கிட்டியது. எதிர்பாராத பொருத்தம்: அன்று அவரது பிறந்த நாள்! வயது நாற்பத்தாறுதான்!



நியூஸிலாந்தைக் கண்டுபிடித்தவர்கள் யார்?

1642ம் ஆண்டில் டச்சுக்காரர்கள் கண்டுபிடிப்பதற்கு முன்பே நியூஸிலாந்துக்குத் தமிழர்கள் சென்றிருக்கிறார்கள் என்று 'ஸ்நாதி ஸிலா' என்ற சோவியத் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. அது கூறுவதாவது:

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழர்கள் கடலில் நீண்ட தூரம் பயணம் செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார்கள்.

நியூஸிலாந்தின் வடகிழக்குப் பகுதியில், கடற்கரையில் கிடைக்கப்பெற்ற உடைந்த கலங்களின் பகுதிகள் தற்போது வெல்லிங்டனில் உள்ள அரசினர் மியூஸியத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு கிடைக்கப் பெற்ற பொருள்களில் ஒன்று பித்தளை மணி. அதில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

உடைந்த கலங்களின் பகுதிகளையும், அவைகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களையும் கொண்டு, அறிஞர்கள் இக்கப்பல் பதினைந்தாம் நூற்றாண்டில் மூழ்கியிருக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளனர்.

தகவல்: ஏ. நடராஜன்   ஆதாரம்: டெக்கான் ஹெரால்ட்

இரவு வேளையில் நிலவு எப்படிப் பூமிக்கு ஒளி தருகிறதோ அதே போல் சந்திர மண்டலத்தில் இரவு நேரத்தில் ஒளி தருவது பூமிதான்! ஆனால் பூமி அளிக்கும் ஒளியானது நமக்குக் கிடைக்கும் நிலா ஒளியை விட ஆறு மடங்கு அதிகமானது. அதாவது இரவு நேரத்தில் இவ்வொளியில் மிகச் சிறிய எழுத்துக் கொண்ட பத்திரிகைகளைக்கூடப் படிக்கலாம்!

- சம்பத்குமாரி



★ ★ ★ ★ ★

கிழிக்கலாம்

ஓர் அதிசயமான திரவத்தைக் கண்டுபிடித்துள்ளனர் மாஸ்கோ பல்கலைக் கழகத்தில். இதில் ஒரு துளியை மிகக் கடினமான உலோகக் கலவையின் மேல் விட்டால், அந்தத் தகட்டை ஒரு காகிதத்தைக் கிழிப்பது போல ஒரு பெண்கூடக் கிழித்து விட முடியும்! வைரங்களால் கூட அறுக்க முடியாத அளவு கடினமான உலோகக் கலவைத் தகடுகளை வெட்டவும் இனி கஷ்டப்பட வேண்டியதில்லை!

சோவியத் நாடு - 'கரிகாலன்'

★ ★ ★ ★ ★

அந்தக் காலத்தில் முதலில் நடிகை ஆகிப் பிறகு நட்சத்திரம் ஆவார்கள். இப்பொழுது முதலிலேயே நட்சத்திரம் ஆகி விடுகிறார்கள். நடிகை ஆவது கிடையாது.

-- மர்லின் டீயட்ரிச்

தகவல்: நாயக்



ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி துறைமுகத்தில் ஒரு முறை ஜப்பானிலிருந்து வெங்காயம் வந்து இறங்கியது. அதைக் கப்பலிலிருந்து இறக்குவதற்கு முன்பு துறைமுகத் தொழிலாளிகள், "இந்த வெங்காய வாசனையைக் கஷ்டப்பட்டுச் சகித்துக் கொண்டு நாங்கள் அவ்வளவு வெங்காயத்தையும் இறக்க வேண்டும். ஆகவே எங்களுக்கு 'வாசனை அலவன்ஸ்' என்று தனியாகப் பணம் கொடுக்க வேண்டும்" என்று கோரினார்கள். அவர்கள் விருப்பப்படியே வாசனை அலவன்ஸ் கொடுக்கப்பட்டது!

ஆதாரம்: "டிட்பிட்ஸ்"; தகவல்: சரோஜா ராமச்சந்திரன்


சிந்தால் வாக்குறுதி...
மேனியெழிலுக்கு முழுப் பராமரிப்பு
புதுமை குன்றாத நறுமணம்
துர்நாற்றத்திலிருந்து சிறந்த பாதுகாப்பு
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது
அற்புத பாக்டீரியாநாசினி ஜி-11 (ஹெக்ஸாக்ளோரோஃபீன்) அடங்கிய ஒரே சோப் சிந்தால். உடலில் துர்நாற்றத்திற்கும் சருமத்தில் களங்கங்களுக்கும் காரணமாக விளங்கும் பாக்டீரியாக்களை ஜி-11 அழித்து விடுகிறது. சிந்தால் உங்கள் மேனியெழிலை அப்பழுக்கின்றி வைத்திருப்பதுடன், உங்களை நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.
CINTHOL

சில மனிதர்கள் சில நினைவுகள்



அமரர் கல்கி

திரு.வி.க. அவர்களின் 'நவசக்தி'ப் பத்திரிகையில் கல்கி அவர்கள் பணியாற்றி வந்த காலம். காந்திஜியின் ஆங்கிலக் கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதும் பொறுப்பு கல்கி அவர்களைச் சேர்ந்திருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் காந்திஜி ஆங்கிலத்தில் 'லார்ட் சிவா' என்று பரம்பொருளைக் குறிக்கும் வகையில் கையாண்டிருந்த பதத்துக்குக் கல்கி அவர்கள் 'இறைவன்' என்று எழுதிக் கொடுத்து விட்டார். சாதாரணமாக 'சிவ பெருமான்' என்றே போட்டிருக்கலாம். கல்கி அவர்கள் இதைக் கவனிக்கவில்லை.

இந்த மொழிபெயர்ப்பைப் படித்த திரு வி. க. வுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. கல்கி அவர்களை அந்தரங்கமாக அழைத்து அவருடைய மதக் கோட்பாடுகளைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தார்.

''உனக்கு எந்த மதத்தில் அதிகப் பற்று?''

''ஒரு மதத்திலும் விசேஷப் பற்றுக் கிடையாது. மதங்களைப் பற்றிய உண்மையை நான் நன்கறியவில்லை.''

''எந்த மதத்தின் பேரிலாவது கோபம் உண்டா?''

''இல்லவே இல்லை! மதம் என்னை என்ன செய்தது?''

''ஒருவேளை உனக்குச் சிவனைப் பிடிக்காதோ?''

''சிவனை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவருடைய நெற்றிக் கண்ணை மட்டும்தான் அவ்வளவாகப் பிடிக்காது. இதையெல்லாம் எதற்குக் கேட்கிறீர்கள்?''



திரு வி. க.

திரு வி. க. அப்பொழுதுதான் 'லார்ட் சிவா' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'இறைவன்' என்று பொதுப்படையாக மொழிபெயர்ப்பு அமைந்திருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

''சிவன் என்பதற்குப் பதிலாக இறைவன் என்று போட்டதினால் சிவனைத் தூக்கித்தானே வைத்திருக்கிறேன். சிவன்தான் இறைவன் என்று ஏற்படுகிறதல்லவா?'' என்று சமாளித்தார் கல்கி. தம் குறுக்கு விசாரணைகளில் கிடைத்த பதில்கள் மூலம் திரு வி. க. மிகத் திருப்தியடைந்தார். அவர் ஒரு சர்வ மத சமரசவாதி. ★

சர்ச்சில் இங்கிலாந்துப் பிரதமராக இருந்த காலம். காமன்ஸ் சபையில் தொழிற் கட்சியைச் சேர்ந்த கெயிட்ஸ்கல், நாட்டின் பொருளாதார நிலை பற்றித் தீவிரமாக எழுந்திருந்து பேச ஆரம்பித்தார். சபை உறுப்பினர்கள் கவனமெல்லாம் அவர்மீது பதிய ஆரம்பித்தது.



சர்ச்சில்

சபை நடவடிக்கைகளில் அக்கறையில்லாதவர் போலச் சாய்ந்து அமர்ந்திருக்கும் சர்ச்சில் இதைக் கவனித்தார். உடனே நிமிர்ந்து உட்கார்ந்தார். அவருடைய இந்தச் செய்கையே சில உறுப்பினர்களது கவனத்தை அவரிடம் திருப்பின. பிறகு அவர் தம் கோட்டுப்பைகளில் ஒவ்வொன்றாகக் கைவிட்டு எதையோ தேட ஆரம்பித்தார். உறுப்பினர்கள் கவனம் கொஞ்சம் கொஞ்சமாக சர்ச்சில் பக்கம் திரும்பியது. கெயிட்ஸ்கலைக் கவனிப்பார் யாருமில்லை. இதனால் உற்சாகமிழந்த கெயிட்ஸ்கலின் குரலில் வேகம் தணிந்தது. தடுமாற்றமும் ஏற்பட்டது. அவர் பேச்சை முடித்து உட்கார்ந்தபோது அவர் பக்கம் யாருமே பார்க்கவில்லை.

''இருமலுக்கான மாத்திரைகளை எங்கோ வைத்துவிட்டுத் தேடினேன்'' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டு சர்ச்சில் வழக்கம்போல் சாய்ந்து உட்கார்ந்தார். கெயிட்ஸ்கல் பேச்சை மற்றவர்கள் ரசிக்காமல் இருக்கப் பிரதமர் சர்ச்சில் செய்த தந்திரம் இது என்று நெருங்கிய சிலருக்கே அன்று தெரியும். ★

ரோஸாலி பாரிஸ் நகரைச் சேர்ந்த ஓர் ஏழைச் சிறுமி. ஓவியம் பயில விரும்பினாள். ஆனால் 'மாடலா'க நிற்பவர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டுமே!

ஒரு குதிரை நிம்மதியாக நின்று கொண்டிருந்தது. அது பணம் கேட்காது. ரோஸாலி அந்தக் குதிரை முன் நின்று தன் முதல் ஓவியத்தைத் தீட்ட ஆரம்பித்தாள்.

நாளடைவில் பெரும் புகழ் பெற்றாள், குதிரைகளை ஓவியங்களில் தீட்டுவதில் ரோஸாலிக்கு இணை யாருமில்லை என்று.

— மேனு

வானத்தில் பெரும் பாறை களை உருட்டி விட்டது போல் இடி அதிர்ந்தது. அதை அடுத்துப் 'பளீர்' என்று மின்னல் கண்ணைக் கூச வைத்தது.

பயங்கரமான மழை கொட்டப் போவதை உணர்ந்தான் சேகர். கோபாலின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினான் 'டூல் ஹவுஸை' நோக்கி. மடக்க முடியாத அந்தக் கால் அவனை எத்தனை வேகமாக ஓட அனுமதித்ததோ அந்த வேகம் முழுவதையும் அவன் பயன்படுத்தினான். அவர்கள் அந்த இடத்தை அடைவதற்குள் 'சோ' என்ற ஓசை தூரத்தில் துல்லியமாகக் கேட்டது. சற்றுத் தொலைவில் மழை அடித்து நொறுக்கிக் கொண்டிருப்பதன் அடையாளம் அது. அதன் வேகம் சில விநாடிகளில் இங்கும் வியாபித்து விடும்.

'டூல் ஹவுஸி'ல் ஒரு தார்பாலின் படுதாவையும் நான்கு மூங்கில் கழிகளையும் எடுத்துக் கொண்டார்கள். அங்கிருந்து வெளியே வந்த போது அந்தத் தார்பாலினையே குடையாகப் பயன்படுத்தும் சூழ்நிலை உருவாகி விட்டிருந்தது. அதைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்தபடி இருவரும் மறுபடியும் புதைகுழியை நோக்கி விரைந்தார்கள்.

சேகரின் யோசனைப்படி மூங்கில்களை இரண்டிரண்டாக ஒன்றோடொன்று முட்டுக் கொடுத்துப் புதை குழியின் பக்கங்களில் சற்றுக் குழி பறித்துப் புதைத்து நிற்க வைத்து அதன் மீது தார்பாலின் படுதாவைப் போர்த்தி, கந்தசாமியின் சடலத்தின் மீதும் குழிக்குள்ளும் மழை நீர் விழாமல் செய்தார்கள். தார்பாலின் மீது அடித்துச் சொரியும் மழை எழுப்பிய ஒலி 'தம்தம்' என்று நகராவைப் போல் முழங்கலாயிற்று.

இதை முடித்தபோது இருவரையும் மழை நன்றாகக் குளிப்பாட்டி விட்டிருந்தது. மழை நீர் புதைகுழிக்குள் பாயாது — மங்களாவின் தகப்பனாருடைய உடல் நனையாது என்று உறுதி செய்துகொண்ட பிறகு சேகரும் கோபாலும் அங்கிருந்து கிளம்பினார்கள். இந்தத் தடவை அவர்கள் இலக்கு பிரதான பங்களாவை நோக்கி. பின் பக்கத்தின் வழியாகத் தான் உள்ளே புக வேண்டும்.

அத்தியாயம் 24

சமையல் அறையில் யாருமில்லை. அந்த வேளையில் யார் இருப்பார்கள்? அதை அடுத்துச் சாப்பாட்டு அறை வழியாக மாடிக்கு ஏறினார்கள். முன்பு ஒரு தடவை வந்திருந்ததால் நிதானம் தவறவில்லை சேகருக்கு. சுழல் படிகள் வழியே மேலே ஏறிச் சென்ற சேகர், குறிப்பாகக் கந்தசாமி படுத்திருந்த அறைக்குள் போனான். தன் நண்பன் தடுமாற்றமில்லாது செயல்படுவதைக் கண்ட கோபாலுக்கு வியப்பான வியப்பு. மின்விசையைத் தட்டினான். படுக்கை அருகே இருந்த பச்சை விளக்கு கனன்றது. கதவைச் சாத்தும்படி சைகை செய்தான் சேகர். கோபால் அதன்படி அறைக் கதவைச் சாத்திக் கொண்டு, அவன் அருகே வந்தான்.



கட்டிலுக்கு அருகே இருந்த மஹோகனி மரத்தினாலான பீரோவைத் திறந்தான் சேகர். அதில் கந்தசாமி அவர்களின் உடைகள் ஒழுங்காக அடுக்கப் பட்டிருந்தன. அவைகள் வெகு நாட்களாக உபயோகிக்கப் படவில்லை என்பதைச் சேகரின் பார்வை எடை போட்டுக் கொண்டிருக்கும்போதே, அவன் கைகள் அந்த உடை அடுக்குகளுக்குப் பின்னால் துழாவின - எதையோ எதிர்பார்த்து. எதிர்பார்த்தது அவன் கைக்குத் தட்டுப்பட்டது. அதை வெளியே எடுத்தான். அது ஒரு மணிக் கயிற்றுச் சுருள். நல்ல உறுதியான முறுக்கேற்றப்பட்ட கயிறு, பந்தாகக் காட்சி யளித்தது அவனது உள்ளங்கையில். அதைப் பிரித்துத் தரையில் உதறினான். முக்கால் அங்குல கனமும், சுமார் பதினைந்தடி நீளமும் கொண்ட கயிறு அது. வெறும் கயிறு? இல்லை. அதன் ஒரு முனையில் ஒரு சுருக்கும் முடிச்சும். —ஏதாவது ஒரு கொக்கியில் அதை மாட்டித் தொங்கவிட வசதியாக.

அந்த அறையின் ஜன்னல்களுக்குக் குறுக்குக் கம்பிகள் இல்லை. கண்ணாடிக் கதவுகள்



அதைத் திறந்தால் மனிதர் தாராளமாக அதன் வழியே நுழைந்து வரலாம். சேகர் அந்தக் கண்ணாடிக் கதவுகளை அகலத் திறந்தான். அதன் வழியாகப் பால்கனியில் குதித்தான். மழை ஓயவில்லை. இடி முழக்கத்தோடு கொட்டிக் கொண்டிருந்தது. ஆனால் சேகர் முதலிலேயே நனைந்திருந்தவன் மறுபடியும் தெப்பலாவதற்குத் தயங்கவில்லை. பால்கனியின் இரும்புக் கிராதிக் கைப்பிடியில் குனிந்து நோட்டமிட்டான். திருப்தியின் அறிகுறியாக அவன் தலை அசைந்தது. ''அச்சா!'' என்று வாய் முனகிற்று. அவன் அங்கே கண்டது ஓர் இரும்புக் கொக்கி, பால்கனிச் சுவரில் பொருத்தப்பட்டிருந்தது.

நண்பனின் மௌன நாடகத்தை இதற்கு மேலும் ரசிக்க முடியாத கோபால், ''என்னப்பா சேகர் இதெல்லாம்?'' என்றான் உள்ளே வந்து மழை நீரை உதறிக்கொண்ட சேகரிடம்.

''இதுவா? நர்ஸ் நிர்மலா இந்த வீட்டிலிருந்து எப்படி யார் கண்ணிலும் படாமல் கடத்திக் கொண்டு போகப்பட்டாள் என்பதை விளக்கிக் கொள்வதற்காக. அவள் மயங்கிக் கிடந்தபோது இந்தக் கயிற்றின் உதவியால்தான் கீழே இறக்கப்பட்டாள்'' என்றான் சேகர்.

''இங்கே இருந்தா? மங்களாவின் அப்பா கந்தசாமி நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்த இந்த அறையிலிருந்தா?'' தாங்க முடியாத வியப்புடன் கேட்டான் கோபால். ''அவரால் எழுந்திருக்கக் கூடமுடியாதே...?''

''உண்மைதான். இதைச் செய்தது கந்தசாமி இல்லை.'' ஒப்புக் கொண்டான் சேகர். பிறகு ''கோபால், இந்த ஏற்பாடு இன்னொரு விஷயத்தையும் நமக்கு விளக்குகிறது. நேற்றிரவு நீ துரத்திச் சென்ற மனிதன் உன் கண் முன்னாலேயே மாயமாக மறைந்ததாக அதிசயித்தாயே, அது எப்படித் தெரியுமா? திராட்சைக்கொடி வீட்டுக்குள் அவன் இருக்கும்போது இந்தக் கயிறு இங்கே இந்தக் கொக்கியில் மாட்டப்பட்டுக் கீழ்வரை தொங்கிக் கொண்டிருந்திருக்கிறது. உன்னால் துரத்தப்பட்டவன், இருளில் ஓடியவன் இந்தக் கயிற்றின் வழியாக மேலே ஏறி, உடனே பால்கனியில் அதை இழுத்துப் போட்டு விட்டான். நல்ல இருட்டு அவனது செய்கைக்குச் சாதகமாக அமைந்தது. ஓடியவன் எப்படிக் காற்றோடு கலந்தான் என்று நாம் வியந்து போனோம். ஆனால் உண்மையில் அவன் இந்தக் கயிற்றின் உதவியால் மேலே ஏறி இந்தப் படுக்கை அறையில் பதுங்கிக்கொண்டிருந்திருக்கிறான்.''

அடுத்த பகுதியில் டெலிபோன் ஒலித்தது. மாடியில் பல அறைகளுக்கு நடுவே உள்ள ஒரு கூடத்திலிருந்துதான் அந்தச் சத்தம் வந்தது. சேகர் அதன் அழைப்புக்குப் பதிலளிக்க அதை நோக்கிப் போகும்போது எதிரில் உள்ள ஓர் அறைக் கதவு திறந்தது. கோகிலா வெளிப்பட்டாள். அவளும் டெலிபோனின் கூப்பாட்டுக்கு விடையளிக்கத்தான் வந்தாள். அவளை முந்திக் கொண்டுவிட்டான் சேகர். அவனை அந்த வேளையில் அங்கு கண்டதினால் வெலவெலத்துப் போய்விட்ட கோகிலா சிலையாகி அப்படியே நின்றாள். தன் அறைக்குத் திரும்ப வேண்டுமென்ற உணர்வற்றவளாக.

''முல்லைவாசல் ஜமீன் பண்ணை... ஹலோ! யார் வேண்டும் உங்களுக்கு?'' சேகர் டெலிபோனில் கேட்டான்.

'' துரைசாமி பேசுகிறேன்... சேகர் தானே?'' டெலிபோனின் செவிப் பகுதியில் குரல் கரகரத்தது. ''இதுவரை எதுவும் நடக்கவில்லை சார். டாக்டர் ரகுநாதனின் வீட்டை விட்டு மோகன் வெளியே வரவேயில்லை. அவன் அங்குதான் தங்கப் போகிறான் போலும். ஒரு வேளை அதற்கு இந்த மழையும் ஒரு காரணமாக இருக்கலாம். இத்துடன் எனக்கு விடுதலை வழங்குவீர்கள் என்று நம்புகிறேன். இரவு முழுவதும் அவனைக் கண்காணிக்கவேண்டுமோ?''

''தேவையில்லை மிஸ்டர் துரைசாமி. இனி மோகனை நீங்கள் அப்படியே விட்டுவிடலாம். ஆனால் ஒன்று, உங்கள் சேவை எப்போதும் தேவைப்படலாம். ஆகவே வேண்டும்போது கிடைக்கும்படியான ஆசாமியாக இருங்கள்.'' சேகர் டெலிபோனை அதன் பீடத்தில் வைத்துவிட்டுத் திரும்பியபோதும், கோகிலா தன்னையே பார்த்துக்கொண்டு நிற்பதைக் கண்டான்.

''இரவின் இந்த அகால வேளையில் மறுபடியும் இம்மாதிரி எங்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன், மிஸ்டர் சேகர்!'' என்றாள் கோகிலா.

''அப்படி யொரு உறுதிமொழியை உங்களுக்குத் தரமுடியாதோ என்று நினைக்கிறேன். அதுமட்டுமல்ல. உங்கள் வாழ்க்கையில் இதுவரை அனுபவித்திராததோர் அதிர்ச்சியை நீங்கள் வரவேற்க வேண்டியிருக்கலாம் என்றும் பயப்படுகிறேன், மிஸஸ் கோகிலா'' என்றான் சேகர்.

''உங்களோடு பேசிக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை'' என்றவள் தன் அறைக்குப் போகத் திரும்பினாள். ஆனால் ஒரே தாவலில் சேகர் அவள் அறை வாசலுக்கும் அவளுக்கும் இடையே போய் நின்று கொண்டவன், ''நாம் சிறிது நேரம் பேசித்தான் ஆக வேண்டும் கோகிலா'' என்ற சேகரை உதாசீனமாக உறுத்துப் பார்த்தவள், அவனை ஒதுக்கிவிட்டு உள்ளே போக முயன்றாள்.

''ஜமீந்தாரிணியை, என் வருங்கால மனைவியின் சின்னம்மாவைப் பலவந்தமாக உட்கார வைப்பதை நான் விரும்பவில்லை. ஆனால் அப்படியொரு நிலைக்கு என்னை நீங்கள் ஆளாக்க மாட்டீர்கள் என்றும் நினைக்கிறேன். உண்மையில் இத்தனை மரியாதைக்கே நீங்கள் அருகதையற்றவர்கள்'' என்றான் சேகர். அவன் குரலில் இதுவரையிலும் இல்லாத கடுமையை உணர்ந்தான் கோபால்.

''இதெல்லாம் என்ன?'' என்றாள் கோகிலா தனக்கே உரித்தான மிடுக்குடன்.

சேகரின் கைத்தடி ஒரு நாற்காலியைச் சுட்டிக் காட்டியது. ''அதிலே போய் உட்காருங்கள்'' என்றான் ஆணையிடும் குரலில்.

கோகிலா மௌனமாக அவன் குறிப்பிட்ட ஆசனத்தில் போய் உட்கார்ந்து அவனையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள். சேகரும் சிலையாகச் சிந்தனை வயப்பட்டிருந்தான்.

சில விநாடிகளேயானாலும் அந்த மௌனம் பயங்கரமாக இருந்தது.

எப்படி ஆரம்பிப்பது, எதைச் சொல்வது, எதைச் சொல்லாமலிருப்பது என்பதை முடிவெடுக்க முடியாததினால் ஏற்பட்ட மௌனம் போலும் அது. ஆனால் அது அதிக நேரம் நீடிக்கவில்லை.

''இத்தனை பெரிய சொத்து உன்னை வந்தடைவதற்காக இந்தத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திய அந்த நபருக்கு நீ தரப் போகும் தொகை எவ்வளவு கோகிலா? தொகை மட்டும்தான் தருவதாக ஒப்பந்தமா அல்லது அந்த நபரின் வாழ்க்கையிலேயே பங்கு கொள்ளும் உத்தேசமும் உண்டா...? இத்தனை விரசமாகக் கேட்பதற்காக நான் வருத்தப்படவில்லை கோகிலா, வருத்தப்பட முடியவும் இல்லை. ஏனென்றால் இந்தச் சொத்தைப் பெறுவதற்காக அத்தனை குரூரமாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது.'' இதுவரை வார்த்தையளவில் கொடுத்து வந்த மரியாதையையும் மாற்றி ஏகவசனத்தில் சேகர் அவளிடம் பேசியதைக் கண்ட கோபாலுக்கு ஒரே திகைப்பாக இருந்தது.

''உன்னுடைய அபத்தமான பேச்சை நான் கேட்கத் தயாராக இல்லை. உன் பேச்சின் தோரணையைப் பார்த்தால் என்னைக் கொலைகாரி என்று வர்ணிப்பது போலல்லவா தொனிக்கிறது?'' என்றாள் கோகிலா.

''உண்மை அதுதானே?''

''எது உண்மை?'' — கோகிலாவின் முகம் வெளுத்துக் கிடந்தது. உதடுகள் சிரமத்துடன் இயங்கின. ''என்ன நீ...!'' தடுமாறினாள்.

''இத்தனை கொலைகளையும் செய்தவள் என்று குற்றம் சாட்டப் போகிறேன் என்று நினைக்கிறாயா? அத்தகைய காரியத்துக்குத் தகுதியுடையவளில்லை நீ. அதுமட்டுமல்ல. இத்தனை பயங்கரமான திட்டங்களை யெல்லாம் பற்றிக்கூட உனக்கு முழு விவரமும் தெரியாது என்பதிலும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உன் ஆரம்பத் திட்டம் இத்தனை கொலைகளில் கொண்டு போய் விடும் என்பதை அறிந்திருப்பாயானால் அதற்கு நீ சம்மதித்தே இருக்க மாட்டாய் என்பதையும் நான் நம்புகிறேன். இந்த நிலையிலும் கூட, இத்தனை கொலைகளுக்கும் உன் ஆரம்பகாலத் திட்டத்துக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்றும் நீ வாதாடத் தயாராக இருக்கிறாய். ஆனால் இத்தனை கொலைகளையும் யார் செய்தது, எதற்காகச் செய்யப்பட்டது என்ற முழு உண்மையும் உனக்கு இப்போது தெரியும். நீ கொலை செய்யாவிட்டாலும் கொலைகளுக்கு உடந்தையாக இருந்திருக்கிறாய்.''

மேஜையின் விளிம்பில் உட்கார்ந்தபடி தன் கைத்தடியை மடியில் உருட்டிக் கொண்டே இத்தனையும் பேசினான் சேகர். கோகிலாவின் முகத்தில் பதிந்திருந்த அவன் பார்வை மட்டும் வேறு பக்கம் திரும்பவேயில்லை.

கோகிலா இரு கண்களையும் மூடியபடி உறைந்துபோன நிலையில் உட்கார்ந்திருந்தாள். அவளது நாடி நரம்புகளெல்லாம் முறுக்கேறிக் கிடந்தன. மிகுந்த சாமர்த்தியத்துடன் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறாள் என்பதை அவளது இறுகிய முகம் சொல்லியது.

''நீ கொலைகாரி இல்லைதான் — சட்டநுணுக்கங்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால். இந்தக் கொலைகளை நீ நேரடியாகச் செய்யவில்லைதான். ஆனால் இத்தனை குரூரங்களையும் நீ நினைத்திருந்தால் ஒரே வார்த்தையில் தடுத்திருக்கலாம். அதைக் கொண்டு பார்க்கும்போது நீ ஒரு முதல்தரமான குற்றவாளியாகக் கருதப்படுகிறாய். ஆரம்பத்திலேயே —ராமுவைக் கொன்ற அப்போதே அந்தச் செயலை நீ தடுத்திருந்தால் அடுத்தடுத்து இத்தனை கொலைகள் நடந்திருக்காது. முதல் கொலைக்குச் சம்மதம் தெரிவித்தாய். அடுத்தடுத்துப் பலகொலைகளுக்கு அது வழி வகுத்து விட்டது. அந்த நோக்கில் உன்னுடைய சம்மதமின்றியே — ஒப்புதல் இன்றியே சில கொலைகள் செய்யப் பட்டிருந்தாலும் நீ கொலைகாரியாகத்தான் கருதப்பட வேண்டும். இரக்கமற்ற வஞ்சனைக்காரியாகக் குற்றவாளிக் கூண்டில் நீ ஏறத்தான் வேண்டும்.''

கோகிலாவிடமிருந்து கேவலும் விம்மலும் அலை அலையாக எழுந்தன. அவளது ஆணவம் மிக்க உடல் அதிர்ந்து கொண்டிருந்தது. மூடிய கண்களின் வழியே கண்ணீர் ஆறாக வடிந்து கொண்டிருந்தது. கீழுதட்டை மேல் வரிசைப் பற்கள் கடித்துத் துண்டாடி விடுமோ என்று ஐயப்படும்படியாக அழுத்திக் கொண்டிருந்தது. அழுகையை விழுங்க முடியவில்லை அவளால்.

''தர்மலிங்கத்தின் உயில் உன் உள்ளத்தை மகிழ்விக்கவில்லை. இத்தனை சொத்தும் தனக்கே சேர வேண்டியது என்று எண்ணினாய். அதுவும் மஞ்சுளாவுக்கு அவ்வளவு பெரும் செல்வம் போவதை அறிந்த பிறகு உன்னால் தாங்க முடியவில்லை. தாத்தாவின் செல்லப் பெண்ணாக இருந்த அவளிடம் உனக்கு வெறுப்பு வளர்ந்தது. வயது வந்த, விவரம் தெரிந்த பெண்ணான மஞ்சுளா சிற்றன்னை என்ற எண்ணத்தில் உன்னிடம் அதிக கடுபாடு காட்டாதது உன் இதயத்தைச் சுட்டது. 'இந்தச் சொத்து — எத்தனை பெரிய ஆஸ்தி! இதை அனுபவிக்க வேண்டியவள் நான் அல்லவா?' என்று எண்ணினாய்; இன்னமும் எண்ணிக் கொண்டிருக்கிறாய். 'இத்தனை பெரிய சொத்துக்கு அதிபதியாவதற்கு மஞ்சுளா அப்படி என்ன செய்து விட்டாள்? அவளுக்கு என்ன தகுதி இருக்கிறது?' என்றெல்லாம் எண்ணமிடலானாய். பரம்பரைச் சொத்துக்குப் பாத்தியதைக்காரி அவள் என்ற வாதத்தை உன் மனம் ஒப்பவில்லை. கந்தசாமியின் கரம் பற்றிய நிலையிலேயே இத்தனை சொத்தும் அல்லது ஒரு பெரும் பகுதி தனக்குக் கிடைக்க வேண்டும் என்று உன் மனம் உரிமை பேசி ஓலமிட்டது. பேராசையின் பிடியிலே சிக்கிய நீ சொத்திலே பெரும் பாகத்தை அடைவதற்காகத் திட்டமிட்டாய். 'அது நியாயம்' என்று உனக்கு நீயே தீர்ப்பும் கூறிக் கொண்டாய். உன்னைப் பொறுத்தவரை சட்டம், ஒழுங்கு, நீதி, நேர்மை எல்லாமே மாற்றியமைக்கப் படக் கூடியதாக இருந்தன. மற்றவர் எதை நியாயம் என்று கருதினார்களோ அது உனக்கு அநியாயமாகப் பட்டது. இரண்டே வார்த்

ஸ்ரீ வெங்கடேச பகவான்
திருத்தேர் & திருவாபரண கைங்கர்ய கமிட்டி

SHRI VENKATESA DEVASTHAN - FANASWADI, BOMBAY-2


வேண்டுகோள்

அன்புடையீர்,

பம்பாய் பனஸ்வாடியில் கோயில் கொண்டிருக்கும் திருவேங்கடமுடையானுக்கு (வேங்கடாசலபதிக்கு) ஒரு திருத்தேர் செய்து சமர்ப்பிக்கவும், சில முக்கியமான திருவாபரணங்கள் செய்து சமர்ப்பிக்கவும் எண்ணங்கொண்டு (தேவஸ்தான நிர்வாகிகள்) அனுமதியுடன் மேற்படி கமிட்டியை ஏற்படுத்தி யிருக்கிறோம். இம் மாபெரும் கைங்கரியத்திற்கு வேண்டிய பொருளுதவி செய்து இதைப் பூர்த்தி செய்வித்து அலர்மேல் மங்கை திருவேங்கடமுடையான் பேரருளுக்குப் பாத்திரர்களாகும்படி (இலக்காக) வேண்டிக் கொள்கிறோம். பொருளுதவி செய்ய விரும்புவோர் 30-9-71 தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

பி. ப. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி
தலைமையாளர் [Chairman]

உருக்கு உற்பத்தி ஓர் அருமையான கலை



புத்தம் புதிய உத்திகள், கருத்துக்கள், பற்பல பரிசோத-னைகளின் விளைவாக, எங்கள் இரும்புக் கனியை வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்ப விதவித மான உருக்கு வகைகளாக உருவாக்கித் தருகிறோம். உதாரணமாக:

பாலங்களுக்கு ஏற்ற உறுதி யான 'ஹை டென்ஸைல்' உருக்கு. கப்பல், ரயில் வாகன, ட்ராலி பஸ் முதலியவற்றுக்கு ஏற்ற எளிதாய் 'வெல்ட்' செய்ய வல்ல துருப்பிடிக்காத உருக்கு.

பாதுகாப்புத் துறைக்கு ஏற்ற தோட்டா துளைக்க இயலாத கவசத் தகடு மற்றும் 'ஹை ஸ்பீட்' உருக்கு.

விமானத்திற்கு அவசிய மான க்ரோம் மாலிப்டினம் உருக்கு.

ரம்பம், ரேஸர் பிளேடு களுக்கு ஏற்ற தரமான 'டூல்' உருக்கு.

அண்மையில், அமெரிக்கா வின் தேவைகளுக்கு ஏற்ப, தனிப்பட்ட முறையில் தயாரிக்-கப்பட்டு, ஏற்றுமதி செய்யப் பட்ட உருக்குப் பாளங்கள்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக, டாடா ஸ்டீலின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்-திப் பரிசோதனைக் கூடங்கள், நம் நாட்டில் தனிப்பட்ட உருக்கை உருவாக்குவதில் முன்னோடிகளாகத் திகழ்-கின்றன.

டாடா ஸ்டீல்

தைகளில் உன்னைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், — நீ ஒரு வியவஸ்தையற்ற முறையற்ற திருடி... பேராசைக்காரி!''

இப்படி அழுத்தம் திருத்தமாக ஆத்திரம் கொப்பளிக்கச் சேகர் பேசிக் கேட்டதே இல்லை கோபால்.

அதே சமயம் கோகிலாவின் அறைக் கதவுக்குப் பின்னாலிருந்து ஓர் அலறல் கேட்டது. ''அக்கா.... நீ.... நீ.... இத்தனை கேவலமானவளா?''

அடுத்த விநாடி வெளுத்த முகமும் விசிக்கும் உதடுமாக வாசற்படியில் வந்து நின்றாள் லலிதா, கோகிலாவின் தங்கை. இத்தனை நேரம் நடந்த சம்பாஷணை அத்தனையையும் அவள் அந்த அறைக் கதவின் பின்னாலிருந்தவாறு ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறாள் என்பதை அவளது நடுங்கும் உடலே சொல்லிக் கொண்டிருந்தது. சேகரே சில நிமிடங்கள் பிரமித்துப் போய்விட்டான்.

''அக்கா... அக்கா... நீயா.... இப்படியும் ஒரு கொடியவள் உண்டா?...'' அதற்கு மேல் பேசமுடியவில்லை அவளால்.

'கோ'வென்று கதறி அழலானாள். கோகிலா. உலர்ந்த குரலில் 'லலிதா' என்று ஏதோ சொல்ல முற்பட்டாள். லலிதாவோ வெறி கொண்டவளாக, ''உன் வாயால் என்னைக் கூப்பிடாதே!'' என்று கத்திக் கொண்டே உள்ளே ஓடிக் கதவைப் படீரென்று சாத்திக் கொண்டாள். கோகிலா உட்கார்ந்திருந்த நாற்காலியின் கைப்பிடிகள் சாதாரண மட்டரகமான மரத்தில் ஆக்கப்பட்டிருக்குமானால் அவை அப்போது பொடிப் பொடியாக உதிர்ந்திருக்கும். அப்படி அவைகளை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தாள் அவள். ''ஐயோ! ஐயோ!'' என்று நெஞ்சு வெடிக்க அவள் வாய் புலம்புவது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''நீ செய்த குற்றங்களுக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டிய வேளை நெருங்கிவிட்டது கோகிலா. உண்மை முழு உருவத்துடன் வெளிப் படுவதற்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டு விட்டது'' என்று கூறியபடியே அந்தக் கூடத்தை விட்டு வெளியேறினான் சேகர். விம்மிக் குமைந்து கொண்டிருந்த கோகிலா தான் அமர்ந்திருந்த ஆசனத்தில் அப்படியே ஒடுங்கிப் போனாள். மூடிய கதவுகளுக்குப் பின்னாலிருந்து லலிதாவின் தேம்பல் ஒலி அந்த நிசப்தமான இரவு வேளையில் துல்லியமாகக் கேட்டது.

''கோகிலாவிடம் நீ கூறியதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன் சேகர்... ஆனால் எனக்குத் தலையும் புரியவில்லை காலும் புரியவில்லை'' என்றான் கோபால். இருவரும் இப்போது மாடிப் படிகளில் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

''என் அநுமானங்கள் சரியாகி வருவதாக எனக்கு ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கிறது.. கோபால். உனக்கு ஏதும் புரியாவிட்டாலும் கோகிலாவுக்கு எல்லாம் விளங்கி யிருக்கும்'' என்றான் சேகர்.

கொல்லைப்பக்கத்துச் சுழல் மாடி வழியாக மேலே ஏறியவர்கள் இப்போது முன் பக்கத்து விசாலமான படிகள் வழியாக இறங்கி

நடுக் கூடத்துக்கு வந்திருந்தார்கள். ஒரு மூலையில் இருந்த டெலிபோனிடம் சென்ற சேகர் டயல் செய்துவிட்டுச் சில விநாடிகள் காத்திருந்தான். மறுபக்கத்திலிருந்து இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் குரல் கேட்டது.

''நான் சேகர் பேசுகிறேன். முல்லைவாசலிலிருந்து. உங்களை இந்த வேளையில் கூப்பிட்டுத் தொல்லை தருவதற்காக மன்னிக்க வேண்டும். ஆனால் இந்தத் தகவலை உங்களுக்குத் தெரிவிக்காதிருப்பதும் நியாயமில்லை. இங்கு இன்னொரு உடலைக் கண்டு பிடித்திருக்கிறேன் இன்ஸ்பெக்டர்...!''

''என்ன?...'' ஏகாம்பரத்தின் குரல் விகாரமாக விநோதமாகக் கிரீச்சிட்டது.

''ஆமாம்... அந்த உடல், பண்ணையின் கல்லறையில் கந்தசாமி அவர்களின் உடலுக்கு அடியில் புதைக்கப் பட்டிருக்கிறது. இப்போதாவது காளியப்பன் குற்றவாளி யில்லை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.''

''அப்படியானால்... நீங்கள் கண்டுபிடித்திருக்கும் உடல் காளியப்பனுடையதா?''

''ஆமாம்...!''

''இதோ கிளம்பி விட்டேன். நீங்கள் அங்கேயே இருங்கள்'' பரபரப்போடு இயங்கினார் இன்ஸ்பெக்டர் என்பதை அந்தக் குரலே சொல்லிற்று.

''இன்ஸ்பெக்டர் ஸார்... நீங்கள் வரும்போது நான் இங்கிருக்க மாட்டேன்'' என்று கூறிய சேகரின் வார்த்தையைக் கேட்க இன்ஸ்பெக்டர் அங்கு இல்லை. சேகர் பேசிக் கொண்டிருக்கும்போதே மறு பக்கத்தில் டெலிபோன் வைக்கப்பட்டதை உணர்ந்தான் சேகர். இதைச் சொல்வதற்காக மறுபடி அவரை அழைக்க விரும்பாத சேகர் போனை வைத்து விட்டுத் திரும்பினான். எதிரிலிருந்த ஒரு கோட் ஸ்டாண்டில் இரண்டு மூன்று மழைக் கோட்டுகள் மாட்டப்பட்டிருந்தன. அதில் ஒன்றை எடுத்துத் தான் மாட்டிக்

கொண்டு மற்றொன்றைக் கோபாலிடம் நீட்டினான் சேகர்.

மழைக் கோட்டுடன் இருவரும் வெளியே வந்தார்கள். மழை இன்னும் பெய்து கொண்டிருந்தது. ''கோபால், நீ இப்போது ஒரு காரியம் செய்ய வேண்டும். பண்ணை சமையலறைக்குப் போ. அங்கு யாரும் இருக்க மாட்டார்கள் இருந்தாலும் பரவாயில்லை. அங்குள்ள, ஸ்டோரேஜிலிருந்து (குளிர் பதனப் பெட்டி) சமைப்பதற்குத் தயாராக உள்ள ஒரு கோழி இறைச்சியை எடுத்துக் கொள். அதை ஒரு பட்டர் பேப்பரினால் சுற்றிக் கொண்டு வா. நான் உனக்காகக் காத்திருக்கிறேன்'' என்றான் சேகர். எதற்கு இதெல்லாம் என்று கேட்க நினைத்தாலும் கோபால் கேட்கவில்லை. சமையல் கட்டை நோக்கி நடந்தான். சில நிமிஷங்களில் கையில் கோழியுள்ள காகிதப் பொட்டலத்துடன் திரும்பி வந்தான் கோபால்.

வேப்ப மரத்துப் பங்களாவுக்குச் செல்லும் பாதையில் சேகரும் கோபாலும் வேகமாக நடக்கலாயினர். பங்களாவின் தலைவாசல் கதவின் வயிற்றுப் பூட்டில் சாவியை நுழைத்துச் சேகர் ஓசைப்படுத்தாமல் திறந்தான். சேகரின் பின்னால், முன்னங் கால்களை மட்டும் ஊன்றியபடி அடிமேல் அடி வைத்து நடந்தான் கோபால். தூங்கும் மஞ்சுளா எழுந்துவிடக் கூடாது என்பதற்காக அத்தனை முன் ஜாக்கிரதையோடு செயல் பட்டார்கள் இருவரும்.

கூடத்துக்கு வந்த சேகர் ஒரு விநாடி ஏதோ யோசித்தவன் அடிமேலடி வைத்து மஞ்சுளாவின் அறைப் பக்கமாக நடந்தான். அவளுக்குத் தெரியாமல் அவள் இல்லாமல் தான் வெளியேற நினைத்திருந்தான். ஆனாலும் அவள் நன்றாகத் தூங்குகிறாளா என்பதைப் பார்த்து ஊர்ஜிதம் செய்து கொள்ள அவள் படுக்கையறைக் கதவைத் திறந்து மெள்ளத் தலையை மட்டும் நுழைத்து எட்டிப் பார்த்தான் உள்ளே. அடுத்த விநாடி அவன் கைகள் அந்த அறைக் கதவைப் படாரென்று அகலத் திறந்தன.

''கோபால், அவளைக் காணோம்! மஞ்சுளா படுக்கையில் இல்லையே!'' என்ற வியப்புக் குரல் சேகரிடமிருந்து வெளிப்பட்டது. பின்னால் வந்த கோபால் காலியான படுக்கையைப் பார்த்துப் பிரமித்துப் போய் நின்றான்.

''அப்படியானால் அவள் — மஞ்சுளா மயங்கிப் போய் விடவில்லை. உன் தூக்க மருந்து சரியாக வேலை செய்யவில்லையா?'' என்று கேட்ட கோபாலைச் சட்டென்று பேசாதிருக்கும்படி உதட்டில் விரலை வைத்துக் காட்டி அடக்கினான் சேகர். அதே சமயம் ஒரு மோட்டார் காரின் ஒலி துல்லியமாகக் கேட்டது. மிக அருகேதான் ரிவர்ஸில் எடுத்துத் திருப்பிக் கொண்டிருந்தார்கள். அதன் ஹெட் லைட் ஒளி ஜன்னல் கதவுக் கண்ணாடிகளில் தாக்கி வழிந்தது. கார் பங்களா வாசலுக்கு வந்து நின்றதும் எஞ்சின் அணைக்கப்பட்டது.

'' நான் கணக்குப் போட்ட நேரத்துக்கு முன்னாலேயே அவள் விழித்துக் கொண்டு விட்டாள்'' என்று கூறியபடியே வாசலுக்கு விரைந்தான் சேகர். கையில் பொட்டலத்துடன் கோபாலும் பின்தொடர்ந்தான்.

இவர்களை எதிர்பார்ப்பவளைப்போல் மஞ்சுளா காருக்குள் உட்கார்ந்திருந்தாள். அவளது கைகள் ஸ்டீயரிங்கை உறுதியாகப் பற்றியபடி இருந்தன. 'ரெயின் கோட்' அணிந்திருந்தாலும் அது பூராவாக நனைந்திருந்தது. அவள் கருள் கேசத்திலும் சுந்தரவதனத்திலும் மழை நீர் வாரி அடிக்கப்பட்டிருந்தது.

சேகர் மௌனமாக அவள் அருகில் போய் அமர்ந்தான்: அவன் பார்வை மட்டும் அவளை எடை போட்டுக் கொண்டிருந்தது. கோபால் பின் சீட்டில் தன்னைத் திணித்துக் கொண்டு அமர்ந்தான்.

மஞ்சுளா தன் மழை முகத்தைத் திருப்பிக் காதலனை நோக்கினாள். அந்தப் பார்வையில் அவன் எல்லாவற்றையும் புரிந்து கொண்டான். ''மஞ்சு, நீ பார்த்தாயா?'' என்று கேட்டான் சேகர்.

''ஆமாம்....'' என்று ஒரே வார்த்தையில் பதில் கூறினாள் மஞ்சுளா.

''நீ அதைப் பார்க்க வேண்டாம் என்று எண்ணினேன்.''

''உங்கள் எண்ணம் எனக்குத் தெரியும் சேகர். இப்போதில்லாவிட்டாலும் எப்போதாவது நான் எல்லா விஷயத்தையும் தெரிந்து கொண்டுதானே ஆக வேண்டும்?''

''இப்போது இந்த நிலையில் நீ அதைத் தெரிந்து கொள்ள வேண்டாம். இதன் தொடர்பான மற்ற விஷயங்களையும் நேரடியாக என்னிடமிருந்து நீ இப்போது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டாம். தயவுசெய்து பங்களாவுக்குள் போய் எங்களுக்காகக் காத்திரு.''

''என்னால் அப்படிச் செய்ய முடியாது சேகர்.....'' அவள் குரலில் உறுதி தொனித்தது.

''சரி, அப்படியானால் நீ காரைச் செலுத்திக் கொண்டு வா. ஆனால் காரை விட்டு எங்களைப் பின் தொடர்ந்து நீ எங்கும் வரக் கூடாது. காரிலேயே இருக்க வேண்டும்.'' நிபந்தனை விதித்தான் சேகர்.

''வேண்டாம், சேகர்.... இத்தனை ஆன பிறகும் எனக்குத் தடை விதிக்காதீர்கள். நான் எல்லாவற்றையும் உங்களோடு சேர்ந்து அநுபவிக்க அனுமதியளியுங்கள்.''

''உனக்கு அது பெரிய அதிர்ச்சியாக இருக்கலாம் மஞ்சு. உன்னால் தாங்கிக் கொள்ள முடியாது.''

''எதையும் தாங்கும் இதயம் எனக்கு எனி தானதாகி விட்டது சேகர், ப்ளீஸ்!'' கெஞ்சினாள் மஞ்சுளா. அவள் கலங்கிய கண்கள் கண்ணீரில் மிதந்தன.

''ம்.... நீ அதிர்ச்சிகளை விரும்புவாயானால் நாம் இப்போது டாக்டர் ரகுநாத்தின் வீட்டுக்குப் போகிறோம்'' என்றான் சேகர்.

''விரும்புகிறேன் சேகர். என் அருமைத் தோழி நிர்மலா, அவள் காதலன் ராமு, அவள் சகோதரன் பாலு, அப்பாவி காளியப்பன் இவர்களின் அவல முடிவை எண்ணிப் பார்க்கும் போது ஏன் என்னால் மட்டும் எதையும் தாங்கிக் கொள்ள முடியாது? முடியும், முடியத்தான் வேண்டும் சேகர்'' என்றபடியே வண்டியைக் கிளப்பினாள் மஞ்சுளா. கொட்டும் மழையைக் கிழித்துக் கொண்டு சீறியபடி கிளம்பியது கார். (தொடரும்)



நிலவைத் தொட்டு நீண்டு வளர்ந்த தென்னைகளில்
வளமான காய்பறித்து நான் வழத்தீர்க்கும் தன்சுவை!
நியூட்ரின்
கோகோனட்
பான்-பான்
nutrine
குழந்தைகளே! பஞ்சொத்த
தேங்காய்த் துருவல்,
பலமூட்டும் ஆடைப்பால்
இவற்றின் பாங்கான சுவைப் புதையல்—
நியூட்ரின் கோகோனட் பான் பான்கள்!
தின்னத்தின்ன
திகட்டாத மிட்டாய்!
nutrine
நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி
பிரைவேட் லிமிடெட், சித்தூர் (ஆ.பி.)



★ தமிழ்நாடு அரசின் 71–72-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது சட்டப் பேரவையிலும், சட்டமன்றத்திலும் நடந்த விவாதங்களுக்கு முதல்வர் அளித்த பதிலைத் 'தமிழரசு' ஆகஸ்ட் முதல் தேதி இதழுடன் 'நமது விளக்கம்' என்ற தலைப்பில் இலவச இணைப்பாக வெளியிட்டுள்ளனர். இந்தப் பிரசுரத்தில் 12ம் பக்கத்தில் வேலை வாய்ப்புகளில் கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் தமிழக அரசு நடந்து கொள்வதை ஒரு படத்தின் மூலம் சித்திரித்துள்ளனர். அந்தப் படத்தில் முதல்வர் 'திறமை அடிப்படையில் வேலை வாய்ப்பு' என்னும் வண்டியை ஓட்டும் டிரைவராகக் காட்சி தருகிறார். அருகே பல்வேறு கட்சிகளைக் குறிப்பதற்குச் சிறிய வீடுகளின் மீது கட்சிச் சின்னங்களைச் சித்திரித்துள்ளனர். ஆனால் சுதந்திரா கட்சிச் சின்னமான நட்சத்திரத்தை ஒரு பெரிய வீட்டின் மீது வரைந்துள்ளனர். சுதந்திரா கட்சி பணக்காரர்களின் கட்சி என்ற தவறான அபிப்பிராயத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்த இம்மாதிரியான வெளியீடுகளில் பிரசாரம் செய்பவர்கள் வேலை வாய்ப்புக்களில் கட்சிக் கண்ணோட்டத்துடன் நடந்து கொள்ள மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

ஈரோடு-2
9–8–71 க. ரவீந்திரன்

நமது நோக்கமான மதுவிலக்கு மிகப் புனிதமானது என்பதைத் திரு கருணாநிதியே ஒப்புக் கொண்டிருக்கிறார். இச்சரியான காரியம் கைகூடுவதற்குச் சரியான ஒரே வழி, நாம் கடைசிவரை அஹிம்சையைக் கடைப்பிடிப்



பதேயாகும். எனவே மதுவிலக்கு இயக்கம் நீதி, அஹிம்சை என்ற இரு தண்டவாளங்களை விட்டு விலகாமல் எவ்வளவு வேகமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு வேகமாகச் செல்லட்டும். தமிழ் மக்களுக்கு இவ்விரு பண்புகளும் இயல்பானதால் இறுதி வெற்றி பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

இம்மதுவிலக்குப் போர் நமக்கு லபிய வந்த பாக்கியமாகும். இதில் இறங்கப்

★ இக்குறியிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

பெறும் யாவரும் இன்பமே அடைவர். அவர்களுக்குப் பொன்னுலக வாசல் திறந்து கிடக்கிறது! வீட்டுக்கு ஒருவர் கிளம்புங்கள்.

வாசுதேவன் பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம் தூது சென்றது போல் இராஜாஜி திரு கருணாநிதியிடம் தூதுபோய் மன்றாடிக் கேட்டும் பயன்படவில்லை. அது மட்டுமல்ல, அந்தக் கோபாலனைத் துரியோதனன் ஏளனமாய்ப் பேசியது போல் முதலமைச்சர் சட்டமன்றத்தில் நம் இராஜகோபாலனை ஏளனமாய்ப் பேசியிருக்கிறார். இதன் பலன் என்ன ஆகும் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

ராஜாஜி நம் மதுவிலக்கு ரதத்துக்குச் சாரத்யம் செய்வார். இது போதும் நம் போரின் வெற்றிக்கு. சரித்திரம் திரும்ப நடக்கிறதென்பதற்கு இணங்க இதிகாசமும் திரும்ப நடக்க ஆரம்பித்து விட்டது.

சேலம் மாநில மதுவிலக்கு மகாநாட்டுக்கு ஏராளமான பிரதிநிதிகள் வருவார்கள். அங்கு அடுத்த போர்த் திட்டம் வகுக்கப்படும். ஒரு நாள் வேலைநிறுத்தம், கடையடைப்பு, பள்ளி மூடுதலோடு துக்க தினம் அனுஷ்டித்தல், ஒத்துழையாமையை மேற்கொள்ளல், சிவில் சட்ட மறுப்பு, போரை அகில இந்தியப் போராக்குதல் போன்ற விஷயங்கள் கவனிக்கப்படும்.

மதுரை-20 ரெ.தெ.பெ. சுப்பிரமணியன்
9–8–71 காந்தி நினைவு நிதி

கல்கி 23–5–71 இதழில் வட்டமேஜைப் பகுதியில் கமலவேணி என்பவர் இந்தியாவில் ஒரு வியாபார ஸ்தாபனம் நடந்துகொண்ட விதத்தையும், மேற்கு ஜெர்மானிய நிறுவனம் ஒன்று நடந்து கொண்ட விதத்தையும் ஒப்பு நோக்கி மனம் நொந்து எழுதியிருந்தார். அதைப் படித்தபோது எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தைத் தங்களுக்கு எழுத வேண்டும் என்று தோன்றியது.



என் நண்பர் ஒருவர் இந்தியா திரும்புமுன்னர் என்னைப் பார்க்க வந்தார். வரும்போது ஒரு சாக்லேட் பெட்டியைக் கொணர்ந்தார், அன்பளிப்பாக. அவர் சென்ற பிறகு பிரித்துப் பார்த்ததில் சாக்லேட் உருகிய நிலையில் இருக்கக் கண்டேன். அதனைத் தயாரிப்பாளருக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள், உடனே வேறு புதிய சாக்லேட் பெட்டி அனுப்பியதுடன் எனக்கு ஆன தபால் செலவையும் திருப்பித் தந்தார்கள். அன்புடன் கடிதமும் எழுதியிருந்தார்கள், வருத்தம் தெரிவித்து.

பாரத நாட்டில் தயாரிப்பாளர்கள், வியாபாரிகள் இவ்விதம் பண்போடு நடந்து கொள்ள வேண்டும்.

செஷயர், இங்கிலாந்து
31–7–71 டி. ஆர். சுப்பிரமணியம்

* காலா (கறுப்பன்): 'என் அம்மாவைவிட நான் கறுப்பு' என்று கன்னத்தில் அறைந்த மாதிரிப் பதில் சொல்லுகின் காலா, தன் சின்னம்மாவைப் பார்த்து. நீதி: தாயற்ற அவனுக்கு அவளே தாய். காலாவைப் பிரிந்து தன்னுல் வாழ முடியாது என்று கூறியவள், தன்னை யார் மணக்க முன் வந்தாலும் சீதனமாக அவனையும் [illegible] அனுப்பவேண்டும் என்று கெஞ்சினாள். "நீதி! உன் அன்புக்கு நான் எப்படி நன்றி சொல்லப் போகிறேன்!"—காலா



"ஹே, காலா!"

பதில் இல்லை.

"காலுவோய்!" கௌசல்யா தேவி வீதி அதிர உச்சஸ்தாயியில் அழைத்தாள்.

"வந்தேன் தீதி!" என்று காலா பதிலளித்தானே தவிர உடனே வரவில்லை. கோலி விளையாட்டில் அத்தனை மும்முரமாக ஈடுபட்டிருந்தான். கூடவே ஜயத்தின் கிறக்கமும் சேர்ந்து கொண்டால் கேட்க வேண்டுமா? வெள்ளி மணிகளென இசை எழுப்பும் கோலிக் குண்டுகள் அரைநிஜாரில் குலுங்கின.

"வாடா சைத்தானே! காலில் சூடு போடுகிறேன், வா!" என்று அன்போடுக அவள் கத்தினபோதுதான் பையனுக்குச் சுய உணர்வு வந்தது. "இதோ, உடனே வந்து விட்டேன்!" என்று பதிலுக்குக் கூறிக் கொண்டே தமக்கைக்கருகே ஓடி வந்தான்.

காலில் சூடு கிடைக்கவில்லை. பதிலுக்கு முதுகிலும் கன்னத்திலும் அறைகள் விழுந்தன. "கூப்பிட்டால் உடனே வர என்னடா உனக்கு? குழந்தை வாய் ஓயாமல் அழுகிறது. அடுப்போ வீணாக எரிகிறது. விறகு என்ன விலை விற்கிறது? அந்த மனுஷன் வருகிறதுக்குள் ரொட்டி தயாராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எலும்பை ஒடித்துவிடுவான். போ... போடா உள்ளே! குழந்தைக்கு விளையாட்டுக் காட்டு!"

முதுகிலும் கன்னத்திலும் 'விண் விண்' ணென்று வலி தெறித்துக் கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரம் அப்படித்தான் வலிக்கும். சுமார் முக்கால் மணி நேரத்தில் தீதி (அக்கா) அவனை அழைத்து உட்கார வைத்துச் சுடச் சுட ரொட்டி சுட்டுத் தட்டில் இடுவாள். 'வயிறு நிறையச் சாப்பிடு' என்பாள். அப்போது எல்லா வலியும் இருந்த இடம் தெரியாமல் பறந்துவிடும்.

காலா உள்ளே சென்று அழும் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டான். அவன் ஸ்பரிசம் பட்டவுடனேயே அது அழுகையை நிறுத்தி விட்டுப் பிஞ்சுக் கைகளால் அவன் கழுத்தை வளைத்துக் கொண்டது. குழந்தை நல்ல நிறம், தன் தாய் தந்தையரைப் போல். அவனுக்குத்தான் நிறம் கொஞ்சம் மட்டம். அதனால்தான் அவனுடைய அன்னை வைத்த "தர்மபால்" என்ற பெயர் இப்போது பள்ளி ரிஜிஸ்தரில் மட்டுமே இடம் பெற்றிருக்கிறது. எல்லோர் நாவிலும் தெறிப்பது "காலா" — கறுப்பன்.

இதனால் அவனுக்கு ஒரு 'காம்ப்ளெக்ஸ்' என்று நினைத்து விடாதீர்கள். "காலா" என்பது தன் உணர்ச்சிகளைக் குத்திக் குதறும் பெயராக அவன் நினைத்ததில்லை; தர்மபால் என்ற அழகான பெயரில் அவன் எந்தவிதமான தனிப் பெருமிதமும் அடையாதது போல். காலா அவன் பெயர். அதோடு விஷயம் தீர்ந்தது அவன் வரையில்.

அவனுக்குப் பன்னிரண்டு வயது நிரம்பி விட்டது. வயதுக்கேற்ற வளர்ச்சி. ஒரு வயதுக் குழந்தையா யிருந்தபோது 'விளையாட' வந்த பெரியம்மையின் சான்றாக முகமெல்லாம் புள்ளிகள்... ஆனால் அவன் அழகற்றவன் இல்லை. உள்ளின் பிரகாசத்தை யெல்லாம் பிரதிபலிக்கும் கண்கள் — [illegible] கண்டவர்கள் யாரும் அவற்றின் கவர்ச்சியை என்றென்றும் மறந்துவிட முடியாது.

பையன் இங்கேதான் — இந்தச் சண்டிகர் நகரத்தில் ஆறுவது படித்து வந்தான். பள்ளிச் சம்பளமான ஒரு ரூபாயை அவன் தீதி — தமக்கை — தன் குடும்பச் செலவிலிருந்து தயங்காமல் கொடுத்து வந்தாள். தன் குழந்தைக்குக் கொடுக்க மாட்டாளா? அதே தயக்கமின்மைதான் இந்தச் செயலிலும். பையன் நன்றாகவே படித்து வந்தான். வகுப்பில் முதல் மூன்று இடங்களுள் ஒன்று கட்டாயம் அவனுடையது. உபாத்தியாயர்கள் எல்லோரும் — வாய் திறந்து நல்லதாக ஒரு வார்த்தை சொல்லி விட்டால் முத்து உதிர்ந்ததாக நினைப்பவர்கள் கூட — அவனைக் கெட்டிக்காரப் பையன் என்று சொல்லத் தயங்கியதில்லை. அவனைப் பற்றிய புகழ்ச்சியில் தீதி மகிழ்ந்து போவாள். "அப்படியா உன்னைப் புகழ்ந்தார்கள்? எங்கே இன்னொரு தடவை சொல்?" என்று கேட்டுக் கேட்டுப் பூரித்துப் போவாள், சான்றோனெனக் கேட்ட தாயைப் போல்...

தாயற்ற அவனுக்கு அவள்தானே தாய்!

அவள் அவனை விடப் பன்னிரண்டு வயது பெரியவள். முன்னோர்கள் 'கர்வால்' என்ற கிராமத்திலிருந்து பிழைப்பைத் தேடி ஸிம்லாவுக்கு வந்தவர்கள். கிராமத்தில் ஏதோ கொஞ்ச நஞ்சம் நிலம் இருந்தது. அதில் முக்கியமாக, எண்ணெய்க்காகக் கடுகு பயிரிட்டு விற்று வந்தார்கள். இந்த வருவாயை நம்பி எத்தனை பேர் வாழ முடியும்? ஓரிருவர் நிலத்தை நம்பியிருக்க, பலர் வேலை தேடி ஸிம்லாவைத் தஞ்சம் அடைந்தார்கள். அவர்களிடம் பரம்பரைச் செல்வமாகச் சில நற்பண்புகள் இருந்தன. திருடுவதில்லை; நம்பிக்கைத் துரோகத்தைக் கனவிலும் நினைத்ததில்லை. 'ஆபீஸ் பையன்' உத்தியோகங்கள் அவர்களுக்குச் சுலபமாகவே கிடைத்தன...

அப்படி வந்தவன்தான் அவன் தந்தை, தியான்சிங். வேலை கிடைத்ததும் கிராமத்திலிருந்து மனைவியையும் மகளையும் அழைத்து வந்தான். காலா ஸிம்லாவில் பிறந்தவன்தான். ஒரு வயதுக் குழந்தையாக இருந்தபோது தாயை இழந்தான்.

மணமாகுமுன் கௌசல்யா தேவி ஸிம்லாவில் தந்தை தியான் சிங்குக்குச் சமைத்துக் கொண்டும், தம்பி காலாவைப் பார்த்துக் கொண்டும் இருந்தாள். பலிராம் என்ற வாலிபனை மணந்து கொண்டு தம்பி சகிதம் சண்டிகர் வந்து இதோ ஏழாண்டுகள் கழிந்து விட்டன. கையில் இரண்டு வயது ஆண் குழந்தை. அந்த ஒரு குழந்தைதான்.

அதாவது, காலாவை அவள் குழந்தையாக நீங்கள் பாவிக்க விரும்பாவிட்டால்...

காலா இருப்பதில் தீதிக்கு ஒரு தைரியம். பலம்... பள்ளி விடுமுறை நாட்களில் அவனிடம் குழந்தையை விட்டு விட்டுச் சினிமாவுக்குக் கூடக் கிளம்பி விடுகிறாள். பப்புவும் — மன்த்ராம் என்று நாமகரணம் செய்யப்பட்டு, "பப்பு" என்று அழைக்கப்படும் அந்த இரண்டு வயதுக் குழந்தை — ஒரு சண்டித்தனம் இல்லாமல் தன் மாமன் கையைப் பிடித்துக் கொண்டு பொம்மையைப் போல [illegible] மடியில் படுத்துக்

கொண்டு **ஆனந்தமாய்த்** தூங்குவான். அவன் வைட்ட இரண்டு உருண்டை அதிகமாகவே உண்பான். காலாவுக்கோ பப்புவின் மீது சாதாரணப் பாசம் மட்டுமில்லை; அவன் துடிக்கத் தான் துடிக்கும் அற்புத அன்பும், "நான் இருக்க அவன் அழுவதா?" என்ற பொறுப்புணர்ச்சியும் கூட இருந்தன.

மற்றபடி, கோதுமை நிறைந்த டின்னோடு அரைக்கும் மிஷினுக்குச் செல்வது, கடையிலிருந்து விறகுகளைச் சுமந்துவருவது, மளிகைச் சாமான் நிறைந்த பைகளை வீட்டுக்குக் கொண்டு வருவது, எல்லாமே காலாவின் பொறுப்புக்கள்தாம்.

பதிலுக்கு நீதி அவன் சட்டை நிஜாரை அக்கறையோடு துவைத்து மடித்து வைப்பாள். தலைக்கு எண்ணெய் இட்டு 'ஸ்டைலா'கச் சீவிவிடுவாள். கால் செருப்பு தேயுமுன் வீட்டுச் செலவில் அங்கே இங்கே மிச்சம் பிடித்துப் புதுச் செருப்பு வாங்கி விடுவாள். அவன் ஒரு வீட்டில் பாத்திரம் தேய்க்க ஒப்புக் கொண்டது, காலாவுக்குப் புத்தகம், துணிமணிகள் வாங்கிக் கொடுக்கத்தான் என்பதை அத்தனை ஸ்பஷ்டமாக அவளோ, அவள் கணவனோ, காலாவோ புரிந்துகொண்டதில்லை.

அவள் கணவன் பலிராமுக்குக் காலாவிடம் எந்த விதமான தனி அன்போ, பாசமோ கிடையாது. ஆனால் வெறுப்பும் துவேஷமும் கூடக் கிடையாது. வீட்டில் ஒரு நாய்க் குட்டி வளர்வதைப் போலத்தான் காலா வளர்ந்து வருவதாக அவன் நினைத்தான். காலாவுக்கும் தனியே உணர்ச்சிகளோ, ஆசாபாசங்களோ இருக்கும் என்று அவன் சிந்தித்துப் பார்த்ததில்லை.

அதற்கு அவனுக்குப் பொழுதும் கிடையாது. சண்டிகர் கல்லூரி ஒன்றில் அவன் "லாபரேட்டரி அட்டெண்டர்." கல்லூரி மாணவர்களுக்குப் 'பிராக்டிகல்' இருக்கும் போது அதற்குத் தேவையான பொருள்களை எடுத்து மேஜைக்கு மேஜை சரியாகப் பொருத்தி வைக்க வேண்டும். இந்த வேலையில் அவன் சமர்த்தன். ஒன்பதாவது வரை தான் படித்திருந்தான் என்றாலும் ஒரு முறை கண்ணால் பார்த்துக் கொண்டதை ஒரு தப்புத் தவறு இல்லாமல் செய்ய வல்லவன் அவன்.

கல்லூரி நேரம் முடிந்ததும் அவன் வேலை முடிந்தது. ஆனால் அவன் உடனே வீட்டுக்கு வராமல் கல்லூரி ஹாஸ்டலில் ஏதாவதோர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு ஏதாவதொரு புத்தகத்தைப் படிப்பதாகப் பாவனை செய்து கொண்டிருப்பான். ஹாஸ்டல் மாணவர்களில் யாராவது வந்து, "பலிராம், சட்டென்று ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கி வா" என்றோ, "இரண்டு பிளேட் சோலே படோரோ!", "நாலு குலோப்ஜாமுன் வாங்கி வா!" என்றோ பணிப்பார்கள். **அவன் இன்முகத்தோடு வாங்கி வருவான்.**

இந்த மாதிரி 'டிரிப்'களில் நாளுக்குச் சுமார் முக்கால் ரூபாய் தேறும். இந்த மேல் வருமானத்தைச் சேர்த்து வைத்து, மகனுக்கு பிஸ்கட்டோ, பொம்மையோ, மனைவிக்கு ஏதாவது பவுடர், ஸ்நோவோ வாங்கித் தர முடியுமே!

மலர்ந்த விழிகளில் ஆவலும் ஏக்கமும் கொப்பளிக்க அருகே நிற்கும் காலாவுக்கும் ஏதாவது வாங்கித் தருவோம் என்று அவனுக்குத் தோன்றாது. பிஸ்கட் பாக்கெட்டைப் பிரித்துக் குழந்தையின் கையில் நாலு பிஸ்கெட்டுகளைத் திணிக்கும்போது அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் காலாவின் கையிலும் இரண்டைக் கொடுக்கலாம் என்று அவனுக்கு உணர்விருக்காது. ஆனால் மறுநாளே இந்தக் குறையைத் நீதி தீர்த்துவிடுவாள். காலாவுக்கு — அவனுக்கு மட்டும் — பலூனோ, பம்பரமோ, சின்னதாக ஒரு பந்தோ, மிட்டாயோ வாங்கித் தந்து அந்தக் கண்களின் ஏக்கம் மறைவதைக் கண்டு களிப்பாள் நீதி.

மேல் வருமானம் கொஞ்சம் அளவுக்கு மீறிக் கிடைத்து விட்டால் பலிராம் தன் குடும்பத்தாரை மறந்துவிட்டுத் தன்னையே பிரதானமாக நினைத்து விடுவான். அதிகத் தாராளமே பவுன் கடை!



"ஹேய்! அழாமல் சமர்த்தாக இருக்கியா? இல்லே; உன் அம்மாவைக் கூப்பிட்டு முத்தம் கொடுக்கச் சொல்லட்டுமா?"

எட்டு மணிக்குள் கணவன் வீடு வந்து சேர்ந்தால் நீதி இன்பமாய் அவனுக்குப் பணிவிடை செய்வாள். சுடச்சுட ரொட்டி சுட்டுப் பரிமாறுவாள். அவனும் சிரிப்பும் ஹாஸ்யமுமாய்ச் சாப்பிடுவான். அவனுடைய தந்தக் கரமும் நீண்ட விரல்களும், அழகு சிந்தும் உடலும், எழில் முகமும் தன்னை எப்படிப் பித்தாக்கி விட்டன என்பதைக் கண்களாலேயே கூறிவிடும் பார்வையோடு அவனைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காகவே மட்டும் ஹாஸ்யமாகப் பேசி, அவள் சிரிக்கத் தானும் சேர்ந்து சிரிப்பான்.

எட்டு மணி வரை அவன் வீடு வரவில்லை என்றால் நீதியைப் பீதி கவ்வும். ரொட்டியைச் சுட்டு வைத்துவிட்டுக் குழந்தையைத் தூங்கப் பண்ணிவிட்டு, "காலா! தூங்குடா நீ!" என்று அவனைப் படுக்க வைத்துப் போர்வையைச் சரியாக இழுத்துப் போர்த்திவிட்டுக் கதவோரம் வந்து உட்கார்ந்து கொள்வாள். பதினொன்றுக்கோ, பன்னிரண்டுக்கோ பலிராம் தள்ளாடிக் கொண்டே வந்து கதவைத் தடதடவென்று இடிப்பான். அவளுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் நேரே போய்ப் படுக்கையில் விழுந்து உடனே தூங்கிப்போவான். இல்லாவிட்டால், "ரொட்டி எங்கே?" என்று உறுமுவான். "ரொட்டி கட்டை மாதிரி இருக்கிறது!" என்று தட்டை எடுத்து அவள் முகத்தின் மீது வீசி எறிவான். "சோம்பேறிக் கழுதை...! காலையில் சுட்ட ரொட்டியையா எனக்குக் கொடுக்கிறாய்?" **என்று அவன்**

கதறக் கதற அடித்து உதைப்பாள். போர் வைக்கு அடியில் படுத்திருக்கும் காலா தூக்கம் கலைந்து இந்தப் பயங்கரத்தைக் கண்டு பயந்து பந்தாய்ச் சுருண்டு நடுங்கிக் கொண் டிருப்பது அவனுக்கும் அவனைப் படைத்த ஆண்டவனுக்குமே தெரியும்....

இரவெல்லாம் தூக்கம் வராமல் வலியில் முனகிக் கொண்டிருக்கும் நிதி காலையில் பத்ர காளியாய் மாறி விடுவாள். "நிஜாரை இப்படி அழுக்காக்கினால் நான் துவைத்துப் போடமுடியுமா?" என்று காலாவை அடித்து நொறுக்குவாள். "பிறந்ததும் தாயைத் தின்றுவிட்டது, சைத்தான்!" என்று கன்னத் தில் அறைவாள். இந்தக் காட்சியைக் கண்டு பயந்து பப்பு வீறிட்டாலும், அதன் முதுகிலும் நாலு விழும்..... இதை மட்டும் காலாவால் தாங்க முடியாது. குறுக்கே பாய்ந்து குழந்தையை வாரி அணைத்துக் கொண்டு, அதன் மீது விழ விருக்கும் அடிகளையும் தன் உடம்பின் மீது வாங்கிக் கொள்வான்.

அக்கம் பக்கத்தில் ஏதாவதொரு கிழவி, "தாயில்லாப் பிள்ளையை இப்படி இரக்கமில் லாமல் அடிக்கிறாயே!" என்று பரிந்து பேசி னால் நிதியின் கோபம் உச்ச நிலையை அடைந்து விடும். "என் தம்பி.... நான் அடிக்கிறேன், அணைக்கிறேன்... என் இஷ்டம். நீ யார் கேட்க?" என்று மறுபடியும் காலாவை அடிக்க ஆரம்பிப்பாள்.

அன்று முழுதும் காலாவின் மனம் துன்பத்தில் துடித்துத் துடித்துத் துவண்டு போகும். "நான் அநாதை.... என்னை நேசிப்பவர்கள் யாருமே இல்லை. நிதிகூட என்னை வெறுக்கிறாள்!" என்று எண்ணும் போதே கண்ணீர் கட்டுக்கடங்காமல் பெருகி யோடும்.

காலா மெள்ள மெள்ளச் சிந்திக்க ஆரம் பித்தான். அவன் இங்கே அநாதைதான்..... தாயில்லாத அநாதை. ஆனால் தந்தை இருக் கும் போதே அநாதையா ?

சுமார் மூன்று வருடங்களுக்கு முன் தன் தந்தையைப் பார்த்திருந்தான். அன்று அவன் பள்ளியிலிருந்து திரும்பிய போது அவர் சமையலறையில் நிதியோடு பேசிக் கொண் டிருந்தார். அவனைக் கண்டதும் சங்கடத் தோடு சிரித்துக் கொண்டே, "அடே, வளர்ந்து விட்டானே !" என்றார். 'ஓர் அந்நிய மனிதன் பேசும் பேச்சாக இருக் கிறதே' என்றுகூட உணரும் முதிர்ச்சி அவனி டம் இல்லை. ஒன்பது வயதுப் பாலகன்தானே அப்போது ! ஒரு பாண்டும், ஷர்ட்டும் வாங்கி வந்திருந்தார் அப்பா. அது மட்டும் அவனுக்கு நன்றாய் நினைவிருந்தது. ஏனென் றால், பாண்ட் அவன் அளவுக்கு மிகப் பெரி தாகவும், ஷர்ட் மிகச் சிறிதாகவும் இருந்தன!

"என் நண்பர்கள் எல்லோரும் தத்தம் பெற்றோர்களோடுதானே இருக்கிறார்கள்!.... நான் மட்டும் ஏன் என் தமக்கையோடு இருக் கிறேன்?" என்று யோசித்துப் பார்த்துக் குழம்பிப் போனான் காலா. அம்மா இல்லை... சரி... அப்பா இருக்கிறாரே! அவருடன் அவன் ஸிம்லாவில் இருக்க வேண்டியவனல்லவா?

ஒரு நாள் நிதி புத்தாடை உடுத்தி இன்ப மாய்ச் சிரித்துக் கொண்டிருந்த தருணமாகப் பார்த்துக் காலா கேட்டான்: "நிதி ! நான் ஏன் உன்னுடன் இருக்கிறேன்?"

"அப்படியென்றால்?" அவள் குழப்பத் தோடு கேட்டாள்.

" அப்பாவிடம்தானே பிள்ளை இருக்க வேண்டும் ?"

அவள் உடனே பதில் சொல்லவில்லை..... பின், "அம்மா இல்லையே! உனக்கு யார் ரொட்டி சுட்டுத் தருவார்கள்?" என்றாள்.

"அப்பாவுக்கு யார் சுட்டுத் தருகிறார்கள்?"

அவன் அப்படி மடக்குவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. தலையைத் தாழ்த்திக் கொண்டு, "அவர் மனைவி.... நம் சிற் றன்னை....!" என்றாள்.

" அவளே எனக்கும் சுட்டுத் தரமாட் டாளா ?"

"தராவிட்டால் ? உன்னை அவள் அடித் துத் துன்புறுத்தினால் ?"

"நீகூடத்தான் அடிக்கிறாய்!"

அவள் அதிர்ந்து அவனைப் பார்த்தாள். பின் அவன் தலை மயிரை வருடியவாறு, "நான் அடிக்கிறேன்.... உண்மைதான்.... ஆனால் நீ என் குழந்தை மாதிரி !" என்றாள்.

அவன் மனம் சமாதானமடையவில்லை. ஏதேதோ ஏக்கங்கள், குறைகள்.... அவன் தன் தந்தையிடம் போய் விட்டால், பின் கஷ்டமே இருக்காது.... ஸிம்லாவிலேயே படிக்கலாம். அதுதான் முறையும்கூட....

ஸிம்லா! இயற்கை அழகு மலிந்து கிடக்கும் இடமாமே! அதைக் காண முடிந்தால் ?

தன் விருப்பம் மிக மிக விரைவில், மிகமிகப் பரிதாபகரமாக நிறைவேறப் போகிறது என்று அவன் அப்போது நினைக்கவில்லை.

பள்ளியில் அன்றுதான் கடைசிப் பரீட்சை. காலை ஒரு வேளைதான்.... மத்தியானத்துக்கு மேல் விடுமுறை ஆரம்பம்.

சாதாரணத்தைவிடக்கூட நன்றாக விடை யளித்துவிட்டான் காலா. மத்தியானம் கட்டுக்கடங்காத உற்சாகம். அவன் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த ஒரு பணக்காரச் சிறுவன் — (அந்தப் பள்ளியில் இது ஒரு விசேஷம். ஏழை, பணக்காரர்கள் எல்லாரும் கலந்து காட்சி தருவார்கள்) — கிரிக்கெட் பந்தும் மட்டையும் கொண்டு வந்திருந்தான். "விளையாட வருகிறாயா?" என்று காலாவை அழைத்தான். காலாவும் உடனே ஒப்புக் கொண்டான். ஆறே தடவை பந்து வீச்சில் அச்சிறுவனை அவுட் ஆக்கிவிட்டு, தான் மட்டையோடு பாட்டிங் ஆரம்பித்தான் காலா. ரன்கள் மளமளவென்று ஏறின. இருபத்தைந்து, ஐம்பது... அந்தச் சிறுவனின் கோபமும் ஏறிக் கொண்டே போயிற்று. காலாவின் காலில் ஒரு தடவை பந்து பட்ட போது அவன் "அவுட்" என்று அலறினான். "என் கால் விக்கெட்டுக்கு ஓரடி இடது பக்கம் இருந்தது!" என்றான் காலா.

"பொய் சொல்லாதே !"


"நானா பொய் சொல்கிறேன்?"

"ஆமாம்! ஒரு வீட்டில் எச்சில் பாத்திரம் தேய்ப்பவளின் தம்பிதானேடா நீ! பின்னே அந்தப் பிச்சைக்காரப் புத்திதானே வரும்?"

" என்ன சொன்னாய்?" காலா கோபா வேசமாய் அந்தச் சிறுவன் மீது பாய்ந்தான்.



திருச்சி தென்னூரைச் சேர்ந்தவரும் ஓய்வுபெற்ற வருமான வரி இலாகா சூபர்வைசருமான **ஸ்ரீ D. M. நாராயணசாமி ஐயர்** ஜூலை 11ந் தேதி இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்தார். எழுபத்துமூன்று வயதான திரு நாராயணசாமி ஐயரின் மறைவால் வருந்தும் அவரது மனைவிக்கும் புதல்வர்கள், புதல்விகளுக்கும், உறவினர்களுக்கும் இந்தத் துயரம் ஈடுசெய்ய இயலாததாகும்.



வீட்டையே ஏன் பாங்காக வைத்திருக்கிறீர்கள்? யுகோபாங்கில் பணத்தைப்போடுவது அதிக பாதுகாப்புடையது, லாபகரமானது!

யுகோபாங்க் டிபாஸிட் கணக்கில் நீங்கள் போடும் பணத்திற்கு வட்டி கிடைக்கிறது. விவசாயம் சிறு தொழில்கள், ஏற்றுமதி இவற்றை அபிவிருத்தி செய்ய அது உதவுகிறது. அது இந்தியாவின் பொருளாதார, வேலை வாய்ப்பு பிரச்னைகளுக்குத் தீர்வு காண மிக இன்றியமையாதது.

யுகோபாங்க் மூலம் உங்கள் பணத்தை புழங்கவிட்டு வளம் பெருகுவதற்கு உதவுங்கள்.

யுனைடட் கமர்ஷியல் பாங்க்

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

அடிகளும் குத்துகளும் பரிமாறப்பட்டன. நிலத்தில் விழுந்து புரண்ட போதும் குரோதம் தணியவில்லை. பிச்சைக்கார புத்தியாமே! எச்சில் பாத்திரம் தேய்ப்பவளாமே நிதி! ஆத்திரம் பொங்கக் காலா அந்தச் சிறுவனை நோக்கி முஷ்டியால் ஒரு குத்து விட்டான். கண்ணுக்கு அருகே அந்தக் குத்து விழுந்த வேகத்தில் அவன், "ஐயோ!" என்று வீறிட்டான். மறுகணம் நிலைவிழந்து தரையில் விழுந்தான்....

உடனேயே கூட்டம் கூடிவிட்டது. தலைமை ஆசிரியர் வந்தார். டெலிபோன் டயலைச் சுழற்றினார்.... இங்குமங்குமாய் எத்தனையோ குரல்கள். பையன் ஆஸ்பத்திரிக்கு டாக்ஸி மூலம் எடுத்துச் செல்லப்பட்டான். காலாவைப் பள்ளி ஆபீஸுக்கு அழைத்துச் சென்றார்கள். குவியச் சொல்லிப் பிரம்பினால் இருபது தடவைகள் விளாசித் தீர்த்தார்கள். பின், கையில் டிரான்ஸ்பர் சர்டிபிகேட் கொடுத்து, "ரௌடிப் பையனுக்கு இங்கு இடமில்லை!" என்றவாறே வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.....

தன் பன்னிரண்டு வயது அனுபவங்களில் காலா என்றுமே அப்படிப் பீதி அடைந்ததில்லை.... ரௌடிப் பையன். வேறொரு சிறுவனைக் குத்திவிட்டு மூர்ச்சை அடையச் செய்தவன். அந்தச் சிறுவனோ பணக்காரன். நினைவு பெற்று எழுந்ததும் தன் தகப்பனிடம் காலாவைப் பற்றி என்னென்ன சொல்வானோ? இனி எந்தப் பள்ளிக் கதவும் அவனுக்காகத் திறக்காது. எத்தனை பெருமையோடு, ஆழ்ந்த ஆத்ம திருப்தியோடு அவன் படித்து வந்தான்! கல்வி இனி கை நழுவிப் போன பொக்கிஷம்....

உடம்பில் வலி தாங்க முடியவில்லை. இப்படி அவன் அவமானப்பட்டதில்லை. நிதியும்தான் அடிப்பாள். ஆனால் இப்படி ஒரே இடம் வீங்கிப் போகும்படி அடிக்க மாட்டாள். ஐம்பது சிறுவர்கள் ஜன்னல் வழியாகக் கண்டு களிக்கும்படி அடிக்க மாட்டாள்.

சோர்ந்து, துவண்டு காலா வீட்டை அடைந்தான். வாசலில் நிதி நின்றிருந்தாள், இடுப்பில் பப்புவோடு. அவனைக் கண்டதும் குழந்தையிடம், "அதோ, காலா மாமா வந்து விட்டான் பார்!" என்றாள்.

அவள் குரலிலிருந்த கனிவைச் செவியுற்றவன் ஒடிந்து போனான். "நிதி! நிதி!" என்று கதறியபடி ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதான்.

"என்ன காலா? என்ன ஆயிற்று?.... சொல்லடா, என் ராஜா! என் செல்லமே! என்னடா ஆயிற்று?" அவள் பதறப் பதற அழுது கொண்டேயிருந்தாள்....

அன்று மாலைக்குள் பமிராமுக்கு விஷயம் தெரிந்துவிடும் என்று நிதி நினைக்கவில்லை.

வீட்டிற்கு வந்தவன் கோபாவேசமாக வந்தான். எதிர்கொண்டு அழைத்த மனைவியைப் பார்த்து, "உன் அருப்புத் தம்பி என்ன செய்தான் தெரியுமா உனக்கு?" என்று கர்ஜித்தான்.

"தெரியும்!" எரிமலை போல தம்பையைத் தாள் [illegible] ... "ஆனால் அவனை



கை கொடுக்கும் சாதனம்

இயற்கைக் கையைப் போலவே இயங்கக் கூடிய செயற்கைக் கை கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.

ஃபிலடெல்பியா டெம்பிள் பல்கலைக்கழகத்து மருத்துவப் பள்ளி ஆராய்ச்சியாளர்கள் மின் சாதனவிசையால் இயங்கும் கை ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள்.

மின்சாதனக் கைக்கு "டெம்பிள் ஆர்ம்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். கை வெட்டி எடுக்கப்பட்ட ஒருவருடைய தோளின் துண்டித்த பகுதியுடன் இந்த மின்சாதனக் கையைப் பொருத்துகிறார்கள். நிக்கல்-காட்மியம் மின்கலம் இந்தக் கைக்குத் தேவையான விசையை வழங்குகிறது. மின்கலத்தை இடுப்பு பெல்டுடன் இணைத்துக்கொள்ள வேண்டும்.

கை இழந்தவர்கள் இந்த அதிசயச் செயற்கைக் கையை நிஜக் கை மாதிரியே பயன்படுத்தலாம்.

நீட்டிய கையில் ஒரு புத்தகத்தை வைத்தால் அதிகப் பளுவை உணர்வு கருவி உணர்ந்து அதிக விசையைத் தருமாறு மின்கலத்துக்குக் கட்டளையிடும்.

1951ம் ஆண்டு "ஸயன்ஸ் ஜர்னல்" என்ற ஆங்கில மாத இதழில் கீழ்க்கண்டவாறு செய்தி வந்திருந்தது. "உலோகத்தில் செய்யப்பட்ட இந்தக் கை, ஒரு முட்டையைத் தூக்கினாலும் சரி, ஆயிரம் ராத்தல் பளுவைத் தூக்கினாலும் சரி, இரண்டையும் ஒரேமாதிரி மிகவும் சுலபமாகச் செய்கிறது."

இந்தப் புதிய செயற்கைக் கையைப் பொருத்திக் கொண்டு எழுதவும் முடியும். முன்பு வழக்கமாகச் செய்யப்பட்டு வந்த செயற்கைக் கையினால் எழுத முடியாது.

ஆதாரம்: காரனெட் - தகவல்: விஜயம்

★ ★ ★ ★ ★ ★ ★ ★

விளக்கெண்ணெய் வேண்டும்

லிபேரியா லெனோஸ் நாட்டுக் குழந்தைகளுக்கு விளக்கெண்ணெய் என்றால் ரொம்பப் பிரியமாம். அம்மாவுக்குத் தெரியாமல்கூட அதை எடுத்துக் குடித்துவிடுமாம்!

-விக்கெண்ட் - 'கென்னி



குழந்தை. வேண்டுமென்று செய்ய வில்லை. சண்டையில்.....''

''போதும், நிறுத்து! உன் தம்பிக்கு நீ பரிந்து பேச வேண் டாம். வாசலில் ஆளை நிறுத்தி வைத்து என்னைக் கண்டதும் கையைப் பிடித்து அழைத்து வரச் செய்தார் ஹெட்மாஸ்டர். உன் தம்பியால் தம் பள்ளிக்கூடத்தின் நல்ல பெயரே கெட்டு விட்டதாம். அந்தப் பையனுக்கு நினைவு வந்து கூட ஆஸ்பத்திரியிலேயே இருக்க வேண்டும் என்று சொல்லி விட் டார்களாம். எனக்கு ஏற்பட்ட அவமானத்தில், என் சொந்தப் பிள்ளையாயிருந்தால், கத்தியால் வெட்டிப் போட்டிருப்பேன், ஆட்டை வெட்டுகிற மாதிரி....''

''ஐயோ! குழந்தையைப் பற்றி அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள்!''

''குழந்தை! ஹூம்! கறுப்புக் குரங்கு! இனி அவன் இந்த வீட்டில் இருக்க முடியாது. நாளைக்குப் பஸ் ஏற்றி விடுகிறேன். தன் தகப்பனிடம் போய்த் தொலையட்டும்!''

''வேண்டாம், வேண்டாம்!'' அவள் தன் கணவனின் கையைப் பற்றிக் கொண்டு மன்றாடினாள். ''தாயில்லாப் பிள்ளை ..... மாற்றாந் தாயிடம் விரட்டாதீர்கள்!''

அவனுடைய கரங்களை உதறினான். ''நாளைக் காலை பஸ்ஸில் அவன் போகிறான். நினைவிருக்கட்டும்!'' என்றவன் அவள் பதிலுக்காகக் காத்திராமல் வீட்டை விட்டு வெளியே கிளம்பி விட்டான்.

விமலாவுக்கு! தந்தைக்கருகில்! இதற்குத் தானே காலா ஆசைப்பட்டான்! ஆனால் நெஞ்சில் இன்பமில்லை. நிதியை விட்டுப்





பிரிய வேண்டும் என்று நினைத்த போதே துயரம் பீறிட்டது.

அவள் கண்ணீர் வழிந்தோட, ரொட்டி கட்டுத் தந்தபோது அவனாலும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. போய்ப் படுத்துக் கொண்டான். நிதியைப் பற்றி நினைத்து நினைத்து அவன் வெகுநேரம் அழுது கொண்டேயிருந்தான்.

பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தபோது பலிராம் அவனோடு ஒரு வார்த்தைகூடப் பேச வில்லை. நாயைப் போல் காலாதான் பின்னால் நடந்து வந்தான். கையில் தன் உடைமைகள் கொண்ட 'ஸூட்கேஸின்' சுமை. நெஞ்சில் துயரச் சுமை. வயிற்றுக்குச் சுமையாய் நிதி ரொட்டியும் உருளைக்கிழங்குக் கறியும், மேலே பருப்புஞ் சாதமும் சமைத்து, "சாப்பிடு, காலா.... வயிறு நிறையட்டும்!" என்று வற்புறுத்திச் சாப்பிட வைத்திருந்தாள். சட்டைப் பைக்குள் இரண்டு ரூபாய்த் தாளைத் திணித்து, "ஏதாவது வாங்கிக் கொள்" என்று சொல்லி, அவன் தலைமயிரை வருடி, முகத்தைக் கைகளில் ஏந்தி, "என் காலா!" "என் குழந்தை!" என்று குரல் ஒடிய விம்மித் துடித்தாளே!

பஸ் ஸ்டாண்டில் ஒரு டிக்கெட் வாங்கினான் பலிராம். அதைக் காலாவின் கையில் கொடுத்து, "ஏறு!" என்றவன் சற்றுத் தள்ளி ஒரு மர நிழலில் போய் நின்று கொண்டு ஒரு பீடியைப் பற்ற வைத்துக் குடித்து முடித்தான். பின், ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் அவன் அருகே வந்து, "உன் அப்பாவுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறேன். பஸ் ஸ்டாண்டுக்கு வருவார். இந்தா, வழியில் ஒரு 'சாய்' குடி!" என்று ஐம்பது பைசா நாணயமொன்றை நீட்டினான்.

"வேண்டாம்!" என்று சொல்லக்கூட நா எழவில்லை. மௌனமாக அதைப் பெற்றுக் கொண்ட காலா, சட்டென்று, "போய்விட்டு வருகிறேன்!" என்றான். கண்கள் நிறைந்தன.

"உம்...." பலிராம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். "நீ மட்டும் ஒழுங்காக இருந் திருந்தால்?..." என்ற வாக்கியத்தைத் தொடங்கியவன் முடிக்கத் தெரியாமல் நிறுத்தி விட்டான். அவன் குரலிலும் இயல்பான அழுத்தம் இல்லை.

பஸ் உறுமிவிட்டுப் புறப்பட்டது. "நானா பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கிறேன்? நானா? சிம்லாவுக்கா?" நம்பவே முடியவில்லை. அப்பாவைக் கண்டால் அடையாளம் புரிந்து கொள்வோமோ என்றுகூடச் சந்தேகமாயிருந்தது. அவருக்குச் சிறு மீசை இருந்ததாக நினைவு. தலையில் பாதிக்கு மேல் நரை மயிர் இருந்தது மட்டும் நன்றாக ஞாபகத்தில் பதிந்திருந்தது. அப்பா அவனைப் போல் கறுப்பு இல்லை. நிதியைப் போல் வெளுப்பு...அம்மா தான் கறுப்பாம்...அவனைப் பெற்ற ஓராண்டில் கண்களை மூடினாளே, அம்மா, அவள்....

"தாத்கா" வரையில் ரஸ்தாவில் அதிக வளைவு நெளிவுகள் இல்லை.... பஸ் தாங்காவில் நின்றதும் பிரயாணிகளில் அநேகம் பேர் இறங்கி மக்கைடமை நோக்கி விரைந்தனர். அவன் இறங்கவில்லை. நிதி கொடுத்திருந்த ரொட்டியும் சாதமும் வயிற்றில் கனமாய் வீற்றிருந்தன. நல்ல வெய்யில் வேளை, அதுவும் மே மாதம். இருந்தும் தாகம்கூடத் தெரியவில்லை.

பஸ் மறுபடியும் புறப்பட்டது. மெள்ள மெள்ள, மலை மேல் ஏறலாயிற்று.... காலா வெளியே பார்த்தான். ஒரு பக்கம் ஓங்கி நின்ற மலைத் தொடர்கள்.... ஒவ்வோர் இடத்தில் ரஸ்தாவுக்குக் குடை பிடித்தாற்போல் வெளியே நீட்டிக் கொண்டிருந்த கரிய பாறைகள். "பஸ்ஸின் மேல் பாகத்தை இவை குத்திக் கிழித்து விட்டால்?" என்றுகூட அவன் அஞ்சினான். மறு பக்கம் பாதாளம்... கீழே, கீழே, கீழுலகுக்கே சென்று விடுமோ என்று தோன்றும் பாதாளம். செடியும் புதருமாய்த் தென்பட்டுப் பின் ஓரே மையிருட்டில் கலந்து விடும் பாதாளம். அதையே பார்த்துக் கொண்டிருந்ததில் தலை சுற்றியது. காலா கண்களை மூடிக் கொண்டான். அந்த மையிருட்டு கண்ணுக்குள் புகுந்து விட்டது போல் உணர்வாயிற்று.

சிறிது நேரத்துக்குப் பிறகு காலா கண்களைத் திறந்தான். சட்டென்று கூசும் வெளிச்சம். இரண்டு மூன்று தடவை இமைகளை மூடி மூடித் திறந்தவன் மேலே நிமிர்ந்து பார்த்தான். வானம் நிர்மலமான நீல நிறத்தில் — தூய்மையே நீல நிறம் தரித்ததோ என்று நினைக்கும்படி — விரிந்திருந்தது.

பஸ் முனகியவாறு மெள்ள மெள்ள ஏறிக் கொண்டிருந்தது. பிரயாணிகளுக்குள் மௌனம். சிலர் ஆனந்தமாய் உறங்கிப் போனார்கள். சிலர் புஸ்தகங்களிலோ பத்திரிகைகளிலோ மூழ்கிப் போனார்கள். மூன்று பெண்மணிகள் பிஸ்கெட் மாதிரி எதையோ எடுத்துத் தின்று கொண்டு யந்திர வேகத்தில் ஸ்வெட்டர் பின்னியவாறு இருந்தார்கள். காலா கண்களை மூடி மூடித் திறந்தான். நேற்றிரவை அழுதவாறே கழித்திருந்ததாலும், பிரம்படியால் உடம்பு இன்னும் வலித்துக் கொண்டிருந்ததாலும், கண்களிலும் உடல் முழுதும் தாங்க முடியாத வலி.... தூக்கம் வரவில்லை. "ஒருவேளை நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது பஸ் ஸிம்லாவை அடைந்து, எல்லோரும் இறங்கி விட்டால்? அப்பா நான் வரவில்லை என்று நினைத்துக் கொண்டு திரும்பிப் போய் விட்டால்?" இந்த எண்ணம் நித்திரையை விரட்டி அடித்து விட்டது. கண்களில் அனல் துண்டுகளைத் தாங்கியவாறு, மலையைப் பார்ப்பதும், வானத்தைப் பார்ப்பதும், பாதாளத்தைப் பார்ப்பதும், கண்களை மூடிக் கொள்வதுமாய் இருந்தான்.....

மனத்தில் பொறுமையின்மை. இன்னும் எத்தனை நேரம் இந்தப் பிரயாணம்? மெள்ள மெள்ள வயிற்றில் ஒரு வெறுமை... ஒரு கோப்பை சூடாகத் தேநீரும் ஒரு பன்னும் கிடைத்தால்....?

கடைசியாக, ஸிம்லா பஸ் ஸ்டாண்டை அடைந்து உறுமிப் பெருமூச்செறிந்துவிட்டு நின்றது பஸ். காலா இறங்கினான். கால்கள் மரத்துக் கிடந்தன. முதலடி தரையில் வைத்தபோது மூட்டு துவண்டது. விழப் போனவன் ஸூட்கேஸை ஊன்றிச் சமாளித்துக் கொண்டான்.

தன்னைச் சுற்றிப் பார்வையை ஓடவிட்டான் காலா. ஒரே ஜன நெரிசல்... அசுத்தமும் நாற்றமும் குடலைப் பிடுங்கின. முரட்டு ஜோடு அணிந்த கூலிகள் இங்குமங்குமாய் நடமாடிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் இத்தனை ஜனங்களா! அநாதைபோல் நின்று கொண்டிருந்தவனுக்குச் சட்டென்று அழுகை பீறிட்டது. அப்பா எங்கே? அப்பா ஏன் வரவில்லை? "ஸிம்லா ஸிம்லா என்று ஏங்கினேனே! இந்த அசுத்தம், நாற்றம்... இந்தத் தனிமை.... பஸ்களின் உறுமல், பெருமூச்சு, ஹாரன் இவைதானா ஸிம்லா?"

அப்பா எங்கே? அப்பா வராவிட்டால்? புது ஊரில் ஒரு தெரிந்த முகம் இல்லாமல் அவன் என்ன செய்வான்? எங்கே போவான்?

"நிதி! நிதி!" என்று அவன் உயிரே கதறிற்று.

நின்று நின்று கால்கள் துவண்டு போயின. ஒரு பெஞ்சின் மேல், ஒரு மூலையாக, ஒடுங்கி உட்கார்ந்தான். அடி வயிற்றில் பீதி கவ்விய போது பசிகூடத் தெரியவில்லை.

தெய்வமே! தெய்வமே! இப்படி என்னை அநாதையாய்....

"தர்மபால்?" தயங்கி அழைக்கும் குரல்.

அவன் திரும்பினான். அப்பா! அவன் முகம் புன்னகை மயமாகி விட்டது....மாநிற முகத்தில் வெள்ளைப் பற்கள் பளீரென்று பிரகாசித்தன.... எத்தனை அழகாக அழைத்தார் அப்பா, "காலா" என்று சொல்லாமல்.

"பிதாஜி!" மேலே பேச்சு எழவில்லை.

தியான்சிங்கின் முகத்தில் ஏனோ மலர்ச்சி இல்லை. மகனைப் பார்க்கும் போது அன்பும் ஆதரவும் கண்களில் நர்த்தனமாட வேண்டாமா? ஏதோ குற்றவாளியைப் போல் காலாவைப் பார்க்காமல் அவனுடைய ஸூட்கேஸைப் பார்த்தான்.

"உன் பெட்டியா?"

"ஆமாம், பிதாஜி!" அவன் குனிந்து அதைக் கையில் எடுத்துக் கொண்டான். இனி வீட்டுக்குப் போக வேண்டியதுதானே!

"வா, என்னோடு!" தியான்சிங் டீக் கடையை நோக்கி நடந்தான். இரண்டு கோப்பைத் தேநீரும் ஒரு பிளேட் 'சமோசாவும்' கேட்டு வாங்கி, ஒரு ரூபாய்த் தாளை நீட்டிச் சில்லறையைப் பெற்றுப் பாண்டில் போட்டுக் கொண்டவன், 'சமோசாவையும்' ஒரு கோப்பை தேநீரையும் மகனிடம் கொடுத்துவிட்டு, இரண்டாவது கோப்பைத் தேநீரை உறிஞ்சி உறிஞ்சிப் பருகலானான். முகத்தில் ஏதோ சிந்தனை....

காலாவுக்கு இப்போது கவலை நீங்கிவிட்ட நிம்மதியில், அகோரப் பசி... சமோசாவை நாலே வாயில் மென்று விழுங்கிவிட்டுத் தேநீரை ருசித்துப் பருகினான். ஆயிற்று. இனி வீட்டுக்குத்தான்...

"தர்மபால்....."

"ஜீ?"

"ம்.... நீ... நீ இங்கேயே காத்துக் கொண்டிரு. எனக்குக் கொஞ்சம் அவசர


சென்னை
சித்ரா
மகாராணி
மேகலா
நூர்ஜஹான் மற்றும்
தென்னாடெங்கும்...
நடிகர்திலகம்
சிவாஜி கணேசன் அளிக்கும்
ஸ்ரீ புவனேஸ்வரி மூவீஸ்
மூன்று
தெய்வங்கள்
டைரக்ஷன்: தாதாமிராஸி • தயாரிப்பு: K.R. சீனிவாசன்
ELEGANT

வேலை இருக்கிறது..... இரண்டு மணிக்குள் வந்து விடுகிறேன்......''

''வீட்டுக்கே போய் விடலாமே, பிதாஜி!''

சட்டென்று இயான்சிங் குரலை உயர்த்தி, ''எதிர்த்துப்பேசாதே! சொல்வதைக் கேள்!'' என்று கூறி விட்டு மகனின் பதிலுக்காகக் காத்திராமல் நடையைக் கட்டினான்.

கண நேரம் ஸ்தம்பித்து நின்றான் காலா. அப்பாவுக்கு அப்படித் திடீரென்று கோபம் வரும்படி அவன் என்ன சொல்லி விட்டான்? புரியவில்லை. ''பாவம்.... ஏதோ கவலைபோல் இருக்கிறது!'' என்று நினைத்துக் கொண்டு பெஞ்சில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு நாலாபுறமும் சுவாரசியத்தோடு பார்க்கலானான். ஏனோ தெரியவில்லை, பஸ் ஸ்டாண்டு இப்போது அத்தனை அசுத்தமாகத் தோன்றவில்லை. பஸ்கள் கிளம்புவதும், நிற்பதுமாக எத்தனை கலகலப்பு!

கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அலுப்புத் தட்டிற்று. ஸூட்கேஸைத் திறந்து ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு படிக்கலானான். மெள்ள மெள்ள மாலைப் பொழுது மங்கலாயிற்று... பஸ் ஸ்டாண்ட் கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தான். ஏழு கால்! ஏழு காலுக்கா இத்தனை வெளிச்சம்! என்ன அதிசயம்?

''சரி, கிளம்பு வீட்டுக்கு!''

அப்பா வந்து விட்டார்! அவன் அவசரம் அவசரமாகப் புத்தகத்தை ஸூட்கேஸில் வைத்துப் பூட்டினான். அதற்குள் நடக்கத் தொடங்கிவிட்ட தந்தையைப் பின்தொடர்ந்தான்.

பஸ் ஸ்டாண்டைக் கடந்தாயிற்று. எங்கு பார்த்தாலும், ஏறி இறங்கும் மலைப் பாதைகள். சண்டிகரில் அவன் எத்தனையோ நடந்திருக்கிறான். ஆனால் இப்படி மூச்சு வாங்கினதில்லை. ஏற்றத்தில் அநாயாசமாக நடக்கும் தந்தையைக் கண்டு பொறாமையாய்க்கூட இருந்தது. இறக்கத்திலோ நிதானமாக நடக்க முடியவில்லை. பின்பக்கத்திலிருந்து யாரோ தள்ளிவிட்ட மாதிரி உணர்வாயிற்று. ஓடத் துடிக்கும் கால்களை இழுத்து நிறுத்துவதே பகீரதப் பிரயத்தனமாக இருந்தது.

ஸூட்கேஸ் இத்தனை கனமா?

அரை மணி நேரம் நடந்தபின் ஒரு சின்னஞ் சிறு வீட்டின் முன்னால் இயான்சிங் நின்றான். திரும்பி மகனைப் பார்த்துவிட்டுக் கதவைத் தட்டினான். காலடி. கதவை நெருங்கும் ஒலி... கதவு திறக்கப்பட்டது. ....

சுமார் இருபத்தெட்டு வயது மதிக்கத் தக்க ஒரு பேரழகி அங்கு நின்று கொண்டிருந்தாள். ரத்தச் சிவப்பில் பைஜாமா, குர்தா, துப்பட்டா.... பின்னலிட்ட கேசம். பால் வெளுப்பில் மேனி.

இயான்சிங்கைக் கண்டவள், அவனுக்குப் பின்னால் நிற்கும் காலாவை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சிடுசிடுத்த முகத்தோடு, ''என்ன?'' என்று மறுபடியும் இயான்சிங்கையே பார்த்தாள்.

''திகம்பர் நாளைக் காலைதான் ஸிம்லா திரும்புகிறான். தன் 'லாஹப்போடு' எங்கோ வெளியூர் போயிருக்கிறானாம். அதனால், நாளைக் காலை வரை தர்மபால் இங்கு இருந்து தான் ஆகவேண்டியிருக்கிறது!'' என்றான் இயான்சிங். ஏதோ குற்றத்துக்கு மன்னிப்புக் கோருபவனைப் போல் அவன் குரலே குழைந்தது.

அப்பெண் மீண்டும் காலாவைப் பார்த்தாள். அந்தக் கரிய நிறத்தையும் புள்ளிகள் மண்டிக் கிடக்கும் முகத்தையும் பார்த்தாள். பார்வையில் ஏளனம் கொப்பளித்தது. வாய் திறந்து எதுவும் சொல்லாமல் ஒயிலாக நடந்து உள்ளே சென்றாள். மகனைப் பார்த்துச் சுருக்கமாக, ''வா!'' என்று சொல்லிவிட்டு இயான்சிங் அவளைப் பின்தொடர்ந்தான். தயங்கித் தயங்கி வீட்டுக்குள் அடி வைத்தான் காலா... அப்பா. சின்னம்மா... தந்தை, தாயின் ஸ்தானத்தில் இருப்பவள். ஆனால் இருவருமே தன்னை நிறைந்த மனத்தோடு வரவேற்கவில்லை என்பதை மட்டும் உடனே புரிந்து கொள்ள முடிந்தது. ''திகம்பர் நாளைக் காலை ஸிம்லா திரும்புகிறான்....'' யார் திகம்பர்?



''என் வீட்டுக்காரர் எனக்கு எட்டுப் பவுனில் சங்கிலி பண்ணிப் போடப் போறார்!''

''அவர் முகத்தைப் பார்த்தாலே தெரியறதே. உன் நச்சரிப்புத் தாங்கலேன்னு!''

''நான் வாயைத் திறக்கவேயில்லே; நேத்துவந்த திருடன்தான் ஏமாற்றத்தைத் தாங்கமுடியாமல் அடுத்த முறை அவன் வரும்போது பன் கழுத்தில் எட்டுப் பவுனில் சங்கிலியிருக்கலேன்னு தொலைச்சுப்புடுவேன்னு அவரை மிரட்டிட்டுப் போயிருக்கான்!''

''உங்கள் பிள்ளையைச் சாப்பிட வரச் சொல்லுங்கள்!'' என்று அந்தச் சுந்தரி சொன்னதைச் செவியுற்ற இயான்சிங் ''அதோ, தண்ணீர்.... கையைக் கழுவிக் கொண்டு உடனே வா.... வேலையை முடித்துவிட்டுச் சின்னம்மா ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்!'' என்று பிள்ளையை அவசரப்படுத்தினான்.

தந்தையையும் மகனையும் அருகருகே உட்கார வைத்தாள் அவள்..... இரு தட்டுகளிலும் ரொட்டிகள் விழுந்தன. ஒரு மூலையில் தோல் உரித்த வெங்காயமும், ஒரு பச்சை மிளகாயும் இடப்பட்டன...

''பருப்பு, கறி, ஒன்றுமில்லை?''

அவள் பாம்பெனச் சீறினாள். ''எனக்கு மத்தியானத்திலிருந்து தலைவலி, முதுகு வலி, கால் வலி... உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ரொட்டி சுட்டு வைத்தேன்..... மகனோடு கொஞ்சிக் குலாவி ஊரெல்லாம் சுற்றிக் காட்டிவிட்டு வந்திருப்பவர்களுக்கு என் கஷ்டம் எங்கே புரியும்?''

நியான்சிங் மௌனமானான்.

வறண்ட ரொட்டி. கடித்துக் கொள்ள மிளகாய், வெங்காயம். நீதி இப்படிச் செய்ததே இல்லை. கறியோ, பருப்போ இல்லாவிட்டால் கடன் வாங்கியாவது கடையிலிருந்து "கோலா" வாங்கி வந்து கொடுப்பாள். அந்த நினைவு எழுந்தபோது ரொட்டித் துண்டு தொண்டையில் சிக்கிக் கொண்டது.

சட்டென்று அந்தப் பெண், "உங்கள் பிள்ளை அசாத்தியக் கறுப்பு. இவனுடைய அம்மாவும் இந்த நிறம்தானோ?" என்று, குரலில் ஏளனம் வழிய ஒவ்வொரு வார்த்தையாக அழுத்திக் கேட்டாள். நியான்சிங் அதிர்ந்து நிமிர்ந்தான். பேச்சு எழவில்லை.



ஆம்ஸ்டர்டாமில் காதரின் என்னும் பதினைந்து வயதுப் பெண், அவ்வூரிலேயே நல்ல ஆரோக்கியமான, அழகான பெண் என்று தேர்ந்தெடுக்கப்பட்டாள். இச்செய்தியைக் கேட்டதும் அவள் மயங்கி விழுந்தாள், எதிர்பாராத சந்தோஷத்தில்! மயக்கம் தெளிந்தவுடன், "நான் மயக்க மடைந்ததனால் மேற்படி ஆரோக்கியமான பெண் என்னும் பட்டத்தை இழந்துவிடுவேனா?" என்றாள் கவலையுடன். "இழக்கமாட்டாய்" என்ற பதிலைக் கேட்டு மீண்டும் மயக்கமடைந்தாள் அப்பெண்!

ராம்ஸர் --- கரிகாலன்

"இல்லை.... என் அம்மாவைவிட நான் கறுப்பு!" காலாவின் பதிலிலும் அதே ஸ்பஷ்டம், அழுத்தம்....

"ஒரு வயதுக் குழந்தையில் உன்னைப் போட்டுவிட்டு அல்பாயுசில் போய்ச் சேர்ந்தவளைப் பற்றி உனக்கு அத்தனை நன்றாக நினைவிருக்கிறதாக்கும்!" அவனுடைய குத்தல் பேச்சில் கோபத்தின் எதிரொலி... இப்படிக் கன்னத்தில் அறைந்த மாதிரி பதில் சொல்லி விட்டானே, இந்தக் கறுப்புப் பையன்!

"என் அம்மாவை எனக்கு நினைவில்லை. ஆனால் அவளைத் நீதி வர்ணித்திருக்கிறாள்!"

அவன் பதில் சொல்லவில்லை. அடுத்த ரொட்டியை அவன் தட்டில் பொத்தென்று அவள் போட்ட விதத்திலிருந்து அவளுடைய அதிருப்தியைப் புரிந்து கொண்டான் காலா.

கீழே விரித்துக் கொள்ள ஒரு 'தரி' அழுக்கானம். ஓர் அழுக்குத் தலையணை. போர்த்திக் கொள்ள ஒரு பழுப்பு நிறத் துணி. இவற்றைக் கொண்டு வந்து மகனிடம் கொடுத்து விட்டுத் நியான்சிங் போய் விட்டான்.

காலா படுத்துக் கொண்டான். உடல் குளிரில் நடுங்கிற்று. மே மாதத்தில், கோடையில் — இப்படிக் குளிர் வாட்டினால் டிஸம்பரி மாதம் பனி பெய்யும்போது எப்படி இருக்கும்? குளிரில் தூக்கம் வரவில்லை... போர்வை இன்னும் கனமாயிருந்தால்.....?

சட்டென்று தன் ஸூட்கேஸுக்குள் நீதி வைத்திருந்த ஸ்வெட்டரின் நினைவு வந்தது. எழுந்து, அதை எடுத்து அணிந்து கொண்ட போது அவள் அன்பையே ஸ்பரிசித்து விட்டது போல் வெதுவெதுப்பாக இருந்தது. மறுபடியும் படுத்துக் கொண்டவன் உடனே உறங்கிப் போனான்.

மறு நாள் அவன் துயிலெழுந்து, முகம் கழுவி வந்ததும் அவனுடைய சிற்றன்னை கேட்டாள்... "உனக்குச் சமைக்க வருமா?"

"வராது!"

"பன்னிரண்டு வயது வரை வளர்த்தவள் நீதி ஒரு ரொட்டி சுடக்கூடக் கற்றுத் தரவில்லை?"

"இல்லை...."

"அத்தனை செல்லமாக வளர்த்தவள் ஏன் பின்னே உன்னை இங்கே அனுப்பித் தொலைத்தாள், எல்லோருடைய நிம்மதியையும் கெடுத்துக் கொண்டு?"

எதிர்பாராத அடி விழுந்தவனைப் போல் காலா கூசினான். பள்ளிக்கூடத்திலிருந்து டி. ஸி. கொடுத்து அனுப்பி விட்டார்களே! இனி படிப்பு? அப்பாவோ அவனை எங்கோ வேலைக்கு அனுப்பிவிடத் திட்டம் போட்டிருக்கிறார்.... திகம்பர்..... யார் அந்தத் திகம்பர்?

கூடவே திருப்தி தரும் ஓர் எண்ண ஓட்டம். அவனைப் பள்ளியிலிருந்து வெளியே அனுப்பிவிட்ட விஷயத்தை அப்பா இவளிடம் சொல்லவில்லையோ.....

நல்லவேளையாக அப்போது நியான்சிங் அங்கு வந்தான். மனைவியைப் பார்த்து, "இவனுக்குக் கொஞ்சம் சாய் போட்டுக் கொடு. நேற்றைய ரொட்டி இருந்தால் இரண்டு கொடு. திகம்பர் எட்டு மணிக்கு வருகிறான். இவனை அழைத்துப் போய் அவனிடம் விட்டு விட்டு நான் ஆபீஸ் போக வேண்டும்.....

"பிதாஜி, திகம்பர் யார்?"

நியான்சிங் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தான். பின், தன்னைத் தானே சுதாரித்துக் கொண்டு, "ஓ.... உனக்கு நினைவிருக்க நியாயமில்லை. திகம்பர் சிங் உன் சித்தப்பா... என் தம்பி... பெரிய மனிதர் வீட்டில் சமைக்கிறான். பெரிய குவார்ட்டர்ஸில் இருக்கிறான். அங்கே இட நெருக்கம் இருக்காது... அதுவுமில்லாமல் அவன் பிரம்மசாரி. அதனால்...." என்னவோ சொல்ல வந்தவன் உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமானான்.

"ஏன், சொல்ல வந்ததை முடிக்கிறது தானே?" இடுப்பில் கையை வைத்துக் கொண்டு கோபம்பொங்கக் கணவனைப் பார்த்தாள் காலாவின் மாற்றுத் தாய். "நான் தான் பொல்லாதவள்..... இல்லையா?..... உங்கள் தம்பி பிரம்மச்சாரி. அதனால் உங்கள் பிள்ளையைப் படுத்தமாட்டான். நான் கடித்துத் தின்று விடுவேன். அப்படித்தானே?" அவள் தன் நகைகளை மூடி முடித் திறந்தாள். நீர்வீழ்ச்சி கொட்டியது. "நேற்றைய

ரொட்டியை இவனுக்குக் கொடுக்கச் சொல்லி விட்டு, நானேக்கே, 'ஏன் என் பிள்ளைக்குப் பழைய ரொட்டியைக் கொடுத்தாய்?' என்று கேட்பீர்கள். அக்கம்பக்கத்தில் உள்ள வேலை யற்றவர்கள், 'தாயில்லாப் பிள்ளைக்கு இவள் பழைய ரொட்டி கொடுத்தாள். இவள் பேய்!' என்று ஏசுவார்கள். எனக்குத் தெரி யாதா உங்கள் கெட்ட எண்ணம்? வாப்பா, காலா மகராஜ்! நெய் வார்த்துப் பரோட்டா சுட்டுத் தருகிறேன் வா!'' அவள் அழுத வாறே சமையல் அறைக்குச் சென்றாள்.

இந்த உணர்ச்சிப் பிரவாகம் காலாவுக்குச் சரியாய்ப் புரிய வில்லை. ஆனால் நெய்ப் பரோட்டா வாய்க்கு ருசியாயிருந்தது. தேநீரும் இனிப்பாயிருந்தது. தந்தையின் இல்லறப் பிரச்னைகளைப் பற்றி அவன் கவலைப் படவில்லை.

மீண்டும் ஸூட்கேஸைச் சுமந்து கொண்டு தந்தையைப் பின்தொடர்ந்து நடக்கலானான் காலா. அவர்கள் வீதியில் அடி வைத்ததும் ஆத்திரம் தீரக் கதவை அறைந்து மூடினாள் அவன் சின்னம்மா.....

ஏற்றங்கள், இறக்கங்கள். ஆனால் இன்று நேற்று மாதிரி மூச்சு வாங்கவில்லை. இறக் கத்தில் நடப்பதும் அத்தனை கஷ்டமாக இல்லை..... ஓரிடத்தில் ரஸ்தா ஏற்ற இறக்க மின்றிச் சம பூமியாய் இருந்தது. சுமார் இருபதடி தூரத்துக்கு. அங்கே காலா மிருது வாக, ''பிதாஜி!'' என்று அழைத்தான்.

''என்ன?'' தியான்சிங் திரும்பி மகனைப் பார்த்தான். முகத்தில், முக்கியமாகக் கண் களில், கரை காணாத சோர்வு....

''என்னை ஏதாவது பள்ளியில் சேர்த்து விடுகிறீர்களா?''

''திகம்பரிடம் நீ ஒரு மாதம் ஒழுங்காக இரு..... அப்புறம் பார்க்கலாம்!''

அதற்கு மேல் எதையும் கேட்கத் தோன்ற வில்லை. ''ஒழுங்காக இரு!'' என்ற வார்த் தைகள் சாட்டையால் அடித்தமாதிரி நோகச் செய்தன.

சுமார் அரை மணி நேரம் நடந்தபின் வரிசையாய், வசதியான கட்டடங்கள் தென் பட்டன. அவற்றின்பின்னால் வரிசையாய் வேலைக்கார வீடுகள்.... தியான்சிங் தயக்கமின்றி ஒரு 'குவார்ட் டரு'க்கெதிரே நின்று, ''திகம்பர்!'' என்று அழைத்தான்.

''வாருங்கள் பாயிஜி! (அண்ணா)''

பார்வைக்கு ஏறத்தாழத் தியான்சிங்கைப் போன்றே இருந்த திகம்பர் சிங் முறுவ லோடு வெளியே வந்தான். தலை மயிர் நரைத்திருக்க வில்லை. உடல் வாகும் இன் னும் சற்று மெலிதாக இருந் தது. உயரமும் அதிகம். காலாவின் மீது அவன் பார்வை பதிந்தது. ''உன் மகன் காலா இல்லை? ஐந்து வயதில் பார்த்தது..... இப் போது.... உம்... பன்னிரண்டு வயது இருக் குமே!'' என்றவன் ஸ்நேக பாவத்தோடு சிரித்தான்.

''உன்னோடு கொஞ்சம் பேச வேண்டும்... உள்ளே வா... தர்மபால், இங்கேயே இரு!'' என்று கூறிவிட்டுத் தம்பியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே சென்று மறைந்தான் தியான்சிங்.

சிற்றப்பன் திகம்பர் சிங்.... நல்ல சிரித்த முகம். ''காலா!'' என்று அவனை அழைத்த விதத்திலும்கூட ஒரு பரிவு இருந்ததே!

சுமார் பத்து நிமிடங்களுக்குப் பிறகு இருவ ரும் வெளியே வந்தார்கள். தியான்சிங்கின் முகத்தில் இத்தனை நேரமாக இல்லாத ஏதோ நிம்மதி..... திகம்பர் முறுவலோடு சிறுவ னிடம் வந்து, ''என்னோடுதான் இருக்கப் போகிறாயாமே? எனக்கு ரொம்ப சந்தோஷம். உள்ளே வா. உன்னை நான் காலா என்றே கூப்பிடலாமா, இல்லை தர்மபால் என்று அழைப்பதைத்தான் நீ விரும்புவாயா?'' என்றான்.

இதே கேள்வியைத் தன் மாற்றாந் தாய் கேட்டிருந்தால், அவன், ''தர்மபால் என்று கூப்பிடுங்கள்'' என்று சொல்லியிருப்பான். இப்போதோ, ஏனென்று தனக்கே புரியாமல் ''காலா என்றே கூப்பிடுங்கள்!'' என்றான்.

''சரி! நான் கிளம்பட்டுமா? சமர்த்தாய் இரு, தர்மபால்! சாசாஜியை(சித்தப்பாவை)ப் படுத்தி வைக்காமல் ஒழுங்காய் இரு!'' என் றான் தியான் சிங்.

''நீங்கள் கவலைப்படாதீர்கள், பாயிஜி! காலா கூட இருப்பதில் எனக்குத் துணை கிடைத்த மாதிரி!'' திகம்பர் சிறுவனை ஆதர வோடு அணைத்துக் கொண்டு அண்ணனுக்கு விடை தந்தான். துன்பம் மயமான நடை யோடு விரைந்து செல்லும் தமையனையே பார்த்துக் கொண்டு நின்றவன், தன்னையும் அறியாமல், ''பாவம்!'' என்று முனகிக் கொண்டான்.


''உனக்குக் காலா என்ற பெயரை யார் தந்தது தெரியுமா? உன் தாய்தான். அன்பு மயமாய் அந்தச் செல்லப் பெயரைத் தந்தாள். உன் முகம் அவள் முகம். உன்னைப் பார்த்தவுடன் எனக்கு அவள் நினைவுதான் வருகிறது.''

''அம்மா எப்படி இருப் பாள், சாசாஜி?''

''சண்டி தேவியைப் போல் கம்பீரமாக அழகாக இருப்பாள், உன் தாய். அவளைக் கண்டால் பூஜிக்க வேண்டும் போல் இருக்கும். குரலை உயர்த்திப் பேச மாட் டாள். நான் சிறுவனாய் இருந்தபோது — அதாவது நீ இருக்கும் வயதில் — அவள் தாயைப் போல் ரொட்டி சுட்டுத் தர ஆசை தீரச் சாப்பிட்டிருக்கிறேன். உன் னைப் பார்த்ததில் அந்தத் தாயைப் பார்ப்பது போல் ஒரு பிரமை...''



''டைப்பிஸ்ட் வேலைக்கு மனுச் செய்பவர்கள் ஐந்தரை அடிக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்று விளம்பரம் செய்திருந் தீர்களே...''



பல்புகள் மாற்றுவதால் ஏற்படும் அதிகப்படி செலவை நிறுத்துங்கள். பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்திப் பாருங்கள்.

[illegible]

[illegible]

பிலிப்ஸ்

சாய்ந்த எழுத்துக்கள்


"அச்சு எழுத்துக்கள் கண்ணை உறுத்தும்படி நெட்டுக் குத்தாக இராமல் வலது பக்கம் கொஞ்சம் சாய்ந்தே இருக்க வேண்டும்" என்று ரசிகமணி டி. கே. சி. அவர்கள் சொன்ன போது எங்களுக்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று முதலில் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

தம்முடைய காரியதரிசியிடம் சொல்லி இரண்டு புத்தகங்களைக் கொண்டு வரச் சொல்லி அதிலிருந்தே எழுத்துக்களைக் காட்டி விளக்கிச் சொன்னார்கள் எங்களுக்கு.

முதலில் ஒரு புத்தகத்தைக் காட்டி, இதிலுள்ள எழுத்துக்களுக்கும் இன்னொரு புத்தகத்தைக் காட்டி இதிலுள்ள எழுத்துக்களுக்கும் உங்களுக்கு ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா என்று கேட்டார்கள்.

உண்மையில் எங்களுக்கு வித்தியாசம் தெரியவில்லைதான். ஆனால் நுட்பமாக இல்லாமல் மேலெழுந்தவாரியாகப் பார்த்த போது (இரண்டும் தமிழ் புத்தகங்கள்தான்) ஒரு புத்தகத்தில் உள்ள எழுத்துக்கள் பார்க்கத் திருப்தியாக இருந்தன. அவ்வளவுதான் எங்களுக்குத் தெரிந்ததெல்லாம்.

டி.கே.சி. அவர்கள் சுட்டிக்காட்டியபடி கவனித்துப் பார்த்ததில் குறிப்பிட்ட அந்த அச்செழுத்துக்கள் யாவுமே சற்று வலது பக்கம் சாய்ந்தே இருந்ததைக் கண்டு கொண்டோம்.



இப்பொழுது எங்களுக்கு ஒரு விஷயம் தெரிந்ததுபோல் தோன்றிற்று. தமிழ் எழுத்துக்களில் இருக்கும் - மேல் கீழ் - நேர்க் கோடுகள் நட்டமாக (செங்குத்தாக) இராமல் சற்றே சாய்ந்திருந்ததால் பார்க்க நன்றாக இருப்பதுபோல் தோன்றியது.

ஒரு சந்தேகம். "ஏன் வலது பக்கமாகத்தான் சாய்ந்து இருக்க வேண்டுமா; இடது பக்கமாகச் சாய்ந்து இருந்தால் என்ன?"

இந்தக் கேள்விக்கு ரசிகமணி அவர்கள் பதில் சொன்னார்கள். "நாம் வலது பக்கமாகத்தான் படித்துக் கொண்டு செல்கிறோம். நமது கண்கள் எழுத்தைத் 'தடவி'க்கொண்டு வேகமாகச் செல்ல அவை வலது பக்கமாகச் சாய்ந்து இருப்பதானது கண்களுக்கு இதமாக இருக்கும். இந்த அமைப்பின் அழகு தமிழ் எழுத்துக்களுக்கே உரியது."

கி. ராஜநாராயணன்

சித்தப்பாவின் பேச்சு காளாவுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

* * *

காலை ஆறு மணிக்கு எழுந்து முகம் கழுவிக் கொண்டு பால்காரன் வீட்டுக்குப் போக வேண்டும். அங்கு மூன்று வீடுகளுக்கென்று அளந்து தரப்படும் பாலை அம்மூன்று வீடுகளிலும் சேர்த்துவிட வேண்டும், ஏழு மணிக்குள். இதே 'புரோகிராம்' மாலை நேரங்களிலும். இதற்குக் கூலி, காலை கால் லிட்டர் பால், மாலை கால் லிட்டர் பால்!

இந்தப் பால் 'சப்ளை' வேலை காளாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. இகம்பர் இந்த வேலையைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோது அவன் வெகு உற்சாகமாக ஒப்புக் கொண்டான். சித்தப்பாவுக்குச் சகாயமாக ஏதாவது செய்யமாட்டோமா என்று துடித்த துடிப்புக்கு இந்தச் சிறு வேலை மருந்தாய் இதமளித்தது. காலையில் எழுந்து, காளாவுக்கென்று ரொட்டி சுட்டு, பருப்போ கறியோ செய்து வைத்து விட்டு வேலைக்குக் கிளம்பினால், இரவு ஒன்பதுக்கு மேல்தான் வீடு திரும்புவான் இகம்பர். அதற்குப் பிறகு மறுபடியும் சிறுவனுக்காகச் சமையல் வேலை. இகம்பர் செய்யும் மாதச் சம்பளம் நாற்பது ரூபாய்தான், சாப்பாடு சமைக்கும் வீட்டில். இந்த வருமானத்தில் தினம் கால் ரூபாய் பையனிடம் கொடுத்து விடுவான், மத்தியான 'நாஷ்தா'வுக்கு. காளா இப்படிப் பால் சப்ளை செய்தால், கூலியாகக் கிடைக்கும் பாலைக் காய்ச்சிப் பசி வேளையில் பையன் பருகலாமே என்ற எண்ணம் இகம்பருக்கு. தனக்குக் கூலியாகக் கிடைக்கும் பாலில் சித்தப்பா காலையில் வேலைக்குப் போகுமுன் ஒரு கோப்பை தேநீர் பருகலாமே என்ற எண்ணம் காளாவுக்கு.

மற்றபடி நாள் முழுதும் வேலை இல்லை. காலையில் ஏழரை மணிக்குப் பால் சப்ளை முடிந்து வீட்டுக்கு வந்து தேநீர் தயாரிப்பதற்கும் இகம்பர் வேலைக்குக் கிளம்புவதற்கும் அநேகமாகச் சரியாயிருக்கும். சற்று நேரம் ஆசை தீரப் படிப்பான் காளா. கணக்குப் புத்தகத்தை வைத்துக் கொண்டு இருபது கணக்குகள் போடுவான். பின், குளித்துவிட்டு வந்தால் வயிறு குடையும். ரொட்டியை நிதானமாகக் கடித்துச் சாப்பிடுவான். அதன் பிறகு, வீட்டைப் பூட்டிச் சாவியைச் சித்தப்பாவிடம் கொடுத்துவிட்டு, கால் போன போக்கில் நடப்பான்.

அப்படி நடக்கும்போது வாழ்க்கையின் வெவ்வேறு படிகளிலிருக்கும் மனிதர்களைப் பார்த்தான் காளா. உதட்டிலும் கன்னத்திலும் சாயமும், கண்களுக்கு மையும் 'மாஸ்கரா'வும், தலையை விடப் பெரிய போலி மயிர்க் கொண்டையும், தழையத் தழையக் கட்டிய தழிப்ஸ்டர் புடவையுமான 'பாஷன்' சுந்தரிகள், அவர்களுடன் கோட்டும், பாண்டும், டையும் பளபளக்கும் ஜோடுமாக நடக்கும் 'ஸாஹப்புகள்'. ஆபீஸில் பியூன்களாகவும், இல்லங்களில் சமையல்காரர்களாகவோ, 'பட்லரா'கவோ பணி புரிபவர்கள். முகமே வேறாயிருக்கும் 'திபெத்' நாட்டினர்கள்..... உடையலங்காரத்தில் மற்றப் பிரதேசத்துப் பெண்களினின்று வித்தியாசப்பட்ட ஹிமாசல் பிரதேசத்துக் குடிமக்கள். இந்தப் பெண்கள் தலை மயிரைச் சுற்றி வண்ண வண்ண மலர்கள் அச்சிட்ட துணியைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். தலைப் பின்னல் அத்துணிக்குக் கீழ் எட்டிப் பார்க்கும் காட்சி புதுமையாயிருந்தது. பைஜாமாவுக்கு மேல், ஏறக்குறைய கணுக்கால் வரையில் தொங்கும் 'கோட்'... காலில் முரட்டு ஜோடு... அவர்களுடைய நிறத்திலும் ஒரு தனிச் சிறப்பு.... சிவப்பு கலந்த நிறம், ஆனால் ரோஜா நிறமல்ல... அசாத்திய

வெளுப்போடு சிவப்பைச் சேர்த்துக் குழைத்த ஆண்டவன், எங்கே அந்த நிறத்தின் மீது கண் பட்டுவிடுமோ என்று அஞ்சி, ஒரே ஒரு சொட்டுக் கறுப்பைச் சேர்த்துக் கலந்துவிட்டது போன்றதொரு நிறம்.

ஆனால் காலாவைக் கவர்ந்ததோ சிம்லாவின் இயற்கை அழகு.... பிரமிக்க வைக்கும் அதன் கம்பீரம், அற்புதம்.

ஒன்றுக்கொன்று மாறுபாடே இல்லாத மலை ரோடுகள். ஓங்கி வளர்ந்த பைன் மரங்கள் வானத்தைத் தொட்டு அணைத்து இன்பத்தின் கிறக்கத்தில் சற்றே ஆடும்.... வானத்திலோ, ஓட்டப் பந்தயத்தில் பங்கு பெறுபவர்கள் போல் மேகக் கூட்டங்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டு ஓடும்.



"பஞ்சை உதிர்த்து வானமெல்லாம் தூவி விட்டானோ ஆண்டவன்?" என்று நினைக்கத் தோன்றும்! காட்டு மல்லிகையின் நறுமணம் ரோஜாவின் கண் கவர் வண்ண ஜாலம்.... ரோஜாவில்தான் இத்தனை வண்ணங்களா! ரத்தச் சிவப்பு, நீ நாக்கின் செம்மை, வெளிர் மஞ்சள். நல்ல ஆழ்ந்த மஞ்சள், இளஞ் சிவப்பு, தூய வெள்ளை, ஆரஞ்சில் சிவப்பு ரேகைகள், மஞ்சளில் வெள்ளைக் கோடுகள்..நடக்கநடக்க நடப்பதையே ஒரு போதையாய் உணர்வான் காலா. இயற்கையின் மடியில் இத்தனை நிம்மதியா, சுகமா! மேடுகளில் தடதட வென்று ஓடக் கால்கள் துடிக்கும்; ஓடுவான். அந்தக் களைப்பில் மூச்சு வாங்க அப்படியே பொத்தென்று உட்காருவான். சரிவில் சறுக்கு மரத்தில் விளையாடுவது போல் சறுக்கி விரைந்து உன்மத்தம்அடைவான்.

அரை நிஜாரின் பின் பக்கம் நைந்து போனாலும் போகட்டும்!

நடந்து செல்லும் போது பைன் மரத்தின் நறுமணம் கண்ணுக்குப் புலப்படாத ஏதோ தாய்க் கரம் போல் அவனை அணைக்கும். சட்டென்று நிற்பான். சுற்றிப் பார்ப்பான். மரங்களில் பறவைகள் கீச்சிட்டு, "சௌக்கியமா?" என்று விசாரிக்கும். "ராம், ராம், பறவைகளே! சுகம்தானா?" என்று வாய் விட்டுப் பதிலுக்குக் குசலப் பிரச்னம் செய்வான். அதள பாதாளத்தை எட்டிப் பார்ப்பான். "இதில் குதித்து விட்டால்?" என்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் தோன்றும். ஆனால் அந்த எண்ணத்தில் பயமோ அச்சமோ தோன்றாது.

எதிர்பாராமல், பத்தே நிமிடங்களில், நிர்மலமாய் இருந்த வானத்தை மேகத் திரை மறைத்துக் கொள்ளும். உலகெங்கும் கருமை படரும். காலா ஏதாவது கட்டட நிழலில் ஒதுங்குவான். கோலிக் குண்டுகள் அளவில் பனிக் கட்டிகள் செய்து பூமியை வெள்ளைப் போர்வையால் அலங்கரித்து விடும். பின், பதினைந்து நிமிடங்கள் நல்ல மழை... அரை மணிக்குள் வானம் மறுபடியும் நிர்மலமாய், சாதுவாய், "நானா மழையைக் கொட்டினேன்?" என்று கேட்பது போல், காட்சி தரும்....

இயற்கையின் அந்த எழில் தரிசனத்தில் மனம் நிறைய நிறைய, தன் எண்ணங்கள் எல்லாமே நினைவு தெரிந்த நாளாய்த் தனக்கு அன்னமிட்டு அணைத்து அன்பு சொரிந்த தமக்கையையே வட்டமிடுவதைக் காலா உணர்ந்தான். "நிதி! நான் இல்லாமல் நீ என்ன செய்கிறாய்? கடையிலிருந்து சாமானை நீயே முதுகு வலிக்க, கை துவண்டு போக, தூக்கி வருகிறாயா? அடுப்பு விறகைக் கூடவா சுமக்கிறாய்? அடுப்பில் நீ ரொட்டி சுடும்பொழுது பப்பு அழுதால் எப்படிச் சமாளிக்கிறாய்? நான் வந்த பிறகு நீ ஒரு சினிமா கூடப் பார்க்கவில்லையா? நிதி! நிதி! என் நிஜார் நைந்து போய் விட்டது. நீ வேர்க்கடலை அல்வா கிளறிக் கொடுப்பாயே! அதை நினைத்தால்... நினைத்தால்... என் நிதி! நிதி! உன்னை நான் எப்போது பார்ப்பேன்? எப்போது, 'காலுவோய்!' என்று நீ என்னை அழைப்பாய்?"

ஒரு நாள் இரவு ஒன்பது மணிக்குக் காலா தன் சிற்றப்பாவிடம் கேட்டான். "சாசாஜி! அப்பா இருக்கும் போது என்னை ஏன் நிதி வளர்த்தாள்?"

சிகம்பர் அவன் முகத்தைக் கண நேரம் ஆராய்ந்து பார்த்தான். பின் உணர்ச்சியற்ற குரலில் பேசலானான். "உனக்கு ஒரு வயது தான் போது. உனக்கும் உன் அன்னைக்கும் பெரியம்மை வந்தது. அவள் உயிரை எடுத்துக் கொண்டு, அந்தத் துயரத்தை உன் முகத்தில் வடுக்களாக விட்டு விட்டுச் சென்றது. அப்போது உன் சகோதரிக்குப் பதின்மூன்று வயது. அப்போதே அவளுக்கு வயதுக்கு மீறிய பொறுப்பு.... உன்னை அவள்தான் வளர்த்தாள், நாலு வருட காலம்... சாதம்

ஊட்டி, தட்டித் தூங்கப் பண்ணி, குளிப்பாட்டி, உடை மாற்றி.....''

'' சரி....''

''உன் தந்தை வேறொரு பெண்ணை மணக்க விரும்பினான். ஆனால் பதினேழு வயதில் மகளும், ஐந்து வயதில் மகனும் இருந்தார்களே! இவர்களுக்கு ஒரு வழி செய்யாமல் மணக்க முடியாதே! மகளை யாவது மணமுடித்து அனுப்பி விடலாம். மகனை என்ன செய்வது? இதை மனத்தில் வைத்து அவன் குழம்பிக் கொண்டிருந்தான்....''

''உம்....''

''அப்போதுதான் உன் நீதி தன் விருப்பத்தை வெளியிட்டாள்.... நாலு வருட காலம் உன்னை வளர்த்தவளின் பாசம்தான் எத்தகையது ! உன்னைப் பிரிந்து தன்னால் உயிர் வாழ முடியாது என்று கூறினாள். அவளை யார் மணக்க முன் வந்தாலும், சீதனமாக உன்னையும் அவளோடு அனுப்பிவிட வேண்டும் என்று கெஞ்சினாள். உன்னை வேண்டாம் என்பவன் எத்தனை அழகனாக, தனவந்தனாக இருந்தாலும், அவனைத் தான் மணக்க முடியாது என்று உறுதியோடு கூறினாள்....''

காலாவின் கண்கள் நிறைந்தன. ''நீதி ! நீதி ! உன் அன்புக்கு நான் எப்படி நன்றி சொல்லப் போகிறேன்!''

''பலிராம் அவளை மணக்க விரும்பினான். உன்னையும் அன்போடு தன் இல்லத்துக்குள் வரவேற்றான். உன் தகப்பனின் பிரச்னையும் தீர்ந்தது. மகளுக்கு மணம் முடித்து, அவளையும் உன்னையும் அனுப்பிவிட்டு, தான் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். சண்டி தேவியைப் போன்ற உன் தாயார் இருந்த இடத்தில் இந்த அப்ஸரஸ்... ஹூம் !''

சற்று நேர மௌனத்துக்குப் பிறகு கிம்பர் தொடர்ந்தான். ''அதன் பிறகு அவன் ராஜ்யம்தான். உன்னையும் உன் சகோதரியையும் உங்கள் தந்தையிடமிருந்து பிரித்தே வைத்தான் அவன். உன் நீதி இந்த நிலையை உணர்ந்திருக்க வேண்டும். ஒரு நாள்கூட உன்னை உன் சிற்றன்னையின் கொடுமைக்கு ஆளாக்காமல்தான் இருந்தாள், இதுவரை. ஆனால்.... நீயோ பள்ளியில் இப்படிக் குத்துச் சண்டை போட்டுவிட்டு.....''

''சித்தப்பா...! நான் அந்தப் பையனை வேண்டுமென்று குத்தவில்லை. நீதியை எச்சில் பாத்திரம் தேய்ப்பவள் என்று பரிகசித்தான்..... கோபத்தில்....''

''பரிகசிக்கட்டுமே! அதற்காகக் கோபத்தில் மிருகமாகலாமா, காலா? உன் ஆத்திரத்தின் மூலம் உன் நீதியின் அன்பு உலகத்தையே துறந்து வரவேண்டியதாகிவிட்டதே!''

காலா ஸிம்லா வந்து ஒரு மாதம் கழிந்து விட்டது.



'' நம்ம கல்யாணத்துக்கு முகூர்த்த நாள் பார்க்கச் சொன்னேனே ?''

'' 2071-ம் வருஷப் பஞ்சாங்கம் மார்க்கெட்டில் எங்கும் கிடைக்கலியே, சந்திரா !''

அப்பா சொல்லி விருந்தாரே, ஒரு மாத காலம் ஒழுங்காக இருந்தால் பள்ளியில் சேர்க்கிறேன் என்று ! அப்பா இங்கே வருவாரா ? வந்து ஏதாவது ஏற்பாடு செய்து கொடுப்பாரா ?

அன்று காலா சாப்பாடு ஆனதும் என்றும் போல் வீட்டைப் பூட்டிச் சாவியைக் கிம்பரிடம் கொடுத்து விட்டுக் கிளம்பினான். ''இன்று புதிதாக ஏதாவதொரு ரோட்டில் நடக்க வேண்டும்!'' என்று தீர்மானித்துக் கொண்டவன், சற்றுத் தூரம் சென்றதும் கரடுமுரடான மண் ரஸ்தா ஒன்றைக் கண்டு, அதில் நடக்கலானான்.... ஏற்றம், ஏற்றம், தீராத ஏற்றம். வழியில் விழி பதித்து ஏறிக் கொண்டிருந்தானே தவிர மனம் படிப்பைப் பற்றியே எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. ஆயிற்று.... இன்னும் ஒரு வாரத்தில், சண்டிகர் பள்ளிகள் திறந்துவிடும்... ஏழாவது வகுப்பில் புகுந்துவிட வேண்டியவன், இதோ, இங்கு, இப்படி மலைப் பாதையில் ஏறிக் கொண்டு, ''நான் மறுபடியும் பள்ளி வாசலை மிதிப்பேனா?'' என்று ஏங்கிக்கொண்டிருக்கிறான்.

சட்டென்று கால் செருப்பு அறுந்தது. அவன் தடுமாறி விழுந்தான். விழுந்த வேகத்தில் செருப்பு பாதத்தினின்று கழன்று சரிந்து சென்று பாதாளத்தில் விழுந்து மறைந்து விட்டது.

காலா சமாளித்துக் கொண்டு எழுந்தான். ஒரு கால் செருப்பு. இதனால் என்ன உபயோகம்? காலை உதறி அந்த இரண்டாவது செருப்பையும் பாதாளத்துக்குள் பறக்க விட்டு விட்டு மேலே நடந்தான்.

சாரடு முரடான மண் ரஸ்தா. கற்களும் முட்களும் மண்டிக் கிடந்தன. காலா வெகு ஜாக்கிரதையாகப் பத்தடி நடந்தான். அதற்குள் கற்கள் மூன்று தடவை பாதத்தைப் பதம் பார்த்து விட்டன. முடியாது. மேலே நடப்பது முடியாத காரியம். காலா வந்த வழியே திரும்பி நடக்கலானான். கல்லும் முள்ளும் இப்படியா மண்டிக் கிடக்கும்? காற்றில் சட்டென்று ஒரு தண்மை. நின்று வானத்தை நிமிர்ந்து பார்த்தான். கருமேகத் திரள்கள்! வானம் கிழியப் போகிறது. நீர் கொட்டப் போகிறது. பார்த்துப் பார்த்து நடப்பதற்கு இது நேரமில்லை. இப்போது அணிந்திருப்பது தான் உருப்படியான நிஜார். இது நனைந்து விட்டால்....?

காலா ஓடத் தொடங்கினான். குத்தும் கற்களைப் பொருட்படுத்தாமல் ஓடினான். அதோ சித்தப்பா வேலை செய்யும் வீடு... இன்னும் பதினைந்து அடிதான்....

வானம் கர்ஜித்தது. இடியோசை தடாலென்று வெடித்து உலகெங்கும் எதிரொலித்

தது. சுரீரென்று பாதத்தில் வலி. ஒரு கணம் தாங்கக்கூட முடியவில்லை. குனிந்து பார்த்தான் காலா. கண்ணாடி கிழித்து இடது பாதத்திலிருந்து இரத்தம் பெருகியோடிக் கொண்டிருந்தது.

அந்தப் பாதத்தைப் பிடித்துக் கொண்டு வலது காலால் குதித்துக் குதித்து அவன் வீட்டை அடைவதற்கும் வானம் தண்ணீரைக் கொட்டுவதற்கும் சரியாயிருந்தது.

சித்தப்பாவிடம் சாவியைக் கேட்க எண்ணியவன் தயங்கினான். இந்த ரத்தத்தை அவர் பார்த்தால் துடித்து விடுவார். வராந்தாவில் ஓர் ஓரமாக அமர்ந்து கொண்டான் காலா. கைவிரலினால் காயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு, 'ட்ரெயின் பைப்' வழியே குழாய் ஜலம் போல் கொட்டிக் கொண்டிருந்த மழை நீரில் ரத்தம் நிற்கும் வரை காலை நீட்டினான். ரத்தம் நிற்கவே நிற்காதோ என்றுகூடத் தோன்றியது. இல்லை, ரத்தம் நின்று விட்டது. மழை நிற்கும் வரையும் காத்திருந்துவிட்டு, சாவியைக் கேட்டு வாங்கிக் கொண்டு, இடது காலைக் கீழே வைக்காமலேயே வலது காலால் ஹாப்பிங் செய்து கொண்டே வீட்டை அடைந்தான்.

சித்தப்பா ஜன்னலோரமாய்ச் சில கந்தல் துணிகளை வைத்திருந்த நினைவு வரவே, அதில் நீளமாய் ஒன்றைக் கிழித்துக் காயத்தைச் சுற்றிக் கொண்டு, அப்படியே சோர்ந்து உட்கார்ந்தான்.

வெளியில் வானம் நிர்மலமாயிருந்தது... கதிரவனின் ரேகை வெது வெதுப்பைத் தந்த போது, இயற்கை அன்னை குளித்து விட்டுப் புத்தாடை அணிந்து இதமான வெயிலில் குளிர் காய்ந்து களிக்கலானாள்.

ஏனோ தெரியவில்லை. காலாவுக்குத் துக்கம் துக்கமாக வந்தது. தன் துயரத்தின் காரணம் கூட விளங்காத நிலையில், அவன் முகத்தை மூடிக் கொண்டு உடல் குலுங்க அழுதான்.

காலா எழுந்தான். பால்காரன் வீட்டுக்குப் போக வேண்டுமே !

காலை கீழே ஊன்றவே முடியவில்லை. கண்ணாடி கிழித்த பாதத்தில் வெட்டுக் காயத்தின் வலி. மறு பாதத்தில் கற்கள் குத்தின. வலி... கூடவே வயிற்றில் அகோரப் பசி... பால் சப்ளை முடிந்தால் கால் கிலோ பால் கிடைக்குமே குடிக்க !

ஒவ்வோர் அடி வைக்கும் போதும் அவனுக்குச் சித்திரவதை.....

காலா சோர்ந்து வீடு திரும்பிய போது என்றுமில்லாமல் திகம்பர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான். முகத்தில் என்ன மகிழ்ச்சி ! பையனின் காலில் ரத்தக் கறை படிந்த கட்டைக் கண்டவன் திடுக்கிட்டு, ''என்ன காலா? செருப்பு எங்கே? காலில் என்ன?'' என்று பதறிப் போய்க் கேட்டான்.

நடந்ததைச் சுருங்கச் சொன்னான் காலா. கண்களிலிருந்து பாயத் துடித்த கண்ணீருக்கு அணை கட்டுவதற்குள் எப்படித் திண்டாடிப் போய் விட்டான் !

''அடடா ! நான் நல்ல செய்தி சொல்லி உன்னை உற்சாகப்படுத்தலாம் என்று பார்த்தால் இப்படிக் காலை வெட்டிக் கொண்டு வந்து நிற்கிறாயே!''

'' நல்ல செய்தியா ?''

''ஆமாம் ! காலா, உன் அப்பா இப்போது தான் வந்து விட்டுப் போனார். பவிராம் கடிதம் போட்டிருக்கிறான். உன் பள்ளி தலைமை ஆசிரியர் அவனைக் கூப்பிட்டு, நீ வகுப்பில் முதலாவதாகத் தேறியிருப்பதாகவும், நீ குத்துவிட்ட பணக்காரப் பையன் தவறு உன் மீது இல்லை, சண்டையில் எதிர்பாராமல் தனக்கு அடிபட்டு விட்டது என்று சொன்னதாகவும், அதனால் உன்னை மறுபடியும் பள்ளியில் சேர்த்துக் கொள்வதாகவும் கூறினாராம். உன் சகோதரி நீ கிளம்பிய நாளிலிருந்து சரியாகச் சாப்பிடுவதில்லையாம். 'என் குழந்தை, என் குழந்தை!' என்று புலம்புகிறாளாம். அதனால் உன்னை நானே பஸ்ஸில் அனுப்பி விடும்படி பவிராம் எழுதியிருக்கிறான். அண்ணா இதையெல்லாம் சொல்லி விட்டு, உன்னை நாளைக் காலை எட்டு மணிக்குத் தயாராயிருக்கச் சொன்னார்....'' திகம்பரின் குரல் மிருதுவாயிற்று. '' சந்தோஷம்தானே, காலா ?''

அச்சிறுவனால் பதில் கூற முடியவில்லை. தன் தோளை வளைத்த சித்தப்பாவின் கரங்களைப் பற்றிக் கொண்டு உணர்ச்சியெல்லாம்



விதையின் சிறப்பு

பூஜ்யர் வினோர் இளமையிலே பாதிரியானவர். பிரிட்டனுக்கு வந்த பூஜ்யர் வினோருக்குத் தொழிலாளரை வேலைக்கு அமர்த்தியோ அல்லது மாடுகளைப் பயன்படுத்தியோ நிலத்தை உழப் பண வசதி இல்லை. அவர் பன்னிரண்டு கலைமான்களைப் பழக்கப்படுத்தி உழச் செய்தார். ஆழ உழுத பிறகு விதை விதைக்க வேண்டிய தருணம் வந்தது. அவரது மடாலயத்தில் உள்ள சன்யாசிகள் ஒரு கோதுமை மணிகூட இல்லாமல் சாப்பிட்டுத் தீர்த்து விட்டனர்.

பூஜ்யர் வினோர் தம் மாதா கோவிலில் மனமுருகிப் பிரார்த்தனை புரிந்தார். அவரது பிரார்த்தனைக்குத் தெய்வம் மனமிரங்கி விட்டது போல் தோன்றியது. ராபின் ரெட்பிரஸ்ட் பறவை பறந்து வந்து மாதா கோவிலிலுள்ள சிலுவையின் மீது அமர்ந்தது. அதன் அலகிலே ஒரு கோதுமைக் கதிர் காட்சியளித்தது. அந்தப் பறவை பறந்து வந்து பூஜ்யர் வினோர் அருகே அந்தக் கோதுமைப் பயிரைப் போட்டுவிட்டுச் சென்றது.

பூஜ்யர் வினோர் பிரார்த்தனையின் பலனைக் கண்டு மகிழ்ந்தார்.

அது முதல் பட்டினி கிடந்தாவது, அரை வயிறு உண்டாவது தானிய மணிகளை எதிர்காலத்தில் விதைக்கப் பாதுகாக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் விவசாயிகள் புரிந்து கொண்டார்கள். 'ராபின் ரெட்பிரஸ்ட் கொடுத்த விதை' என்பது ஒரு பொன்மொழியாகப் பிரிட்டனில் வழங்கி வருகிறது.

சிறிய அளவில் தொடங்கும் காரியமானாலும் பெரிய அளவில் சுபிட்சத்தைத் தேடித் தரும் என்பது இதன் உட்பொருள்.

(பிரிட்டிஷ் நாடோடிக் கதை) -- பி.எஸ்.எம்.

நீராக்கிக் கண் வழியே கொட்டத்தான் முடிந்தது......

மறு நாள் காலை அரைமணி முன்னதாகவே வேலைக்குப் புறப்பட்டு விட்டான் திகம்பர். புறப்படுமுன், "போய்விட்டு வா, காலா....உன் சகோதரியை விசாரித்தேன் என்று சொல்!" என்று கூறி, அச்சிறுவனைப் பெரிய மனிதனைப் போல் பாவித்துக் கை குலுக்கினான். காலா குனிந்து அவன் காலைத் தொட்டுவிட்டு எழுந்த போது ஒரு முறுவலை ஆசீர்வாதமாகத் தந்தான் திகம்பர்.

தியான்சிங் வந்தான்.

"தயாரா தர்மபால்?"

"தயார், பிதாஜி!"

வெறும் காலில் வலி தெறிக்க ஸூட்கேஸைச் சுமந்தவாறு நடந்தான் காலா. ஆனால் இதயத்தில் வலியின் நிழல்கூட இல்லை.

டிக்கெட் வாங்கி மகனைப் பஸ்ஸில் ஏற்றி விட்டான் தியான் சிங். முகமெல்லாம் மகிழ்ச்சி! ஓர் ஐந்து ரூபாய்த் தாளை நீட்டி, "உன் சகோதரியிடம் கொடுத்துவிடு!" என்றான். பின் ஒரு சிறு பிஸ்கட் பொட்டலத்தைக் கொடுத்து "நீயும் குழந்தை மஸ்தராமும் சாப்பிடுங்கள்!" என்றான்.

இதோ, டிரைவர் வந்து ஆசனத்தில் உட்கார்ந்து விட்டான். பஸ் புறப்படப் போகிறது.

"போய்விட்டு வருகிறேன் பிதாஜி!"

"போய் வா, என் மகனே!"

சட்டென்று பின்னும் யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது. காலா திரும்பிப் பார்த்தான்.—சித்தப்பா!

திகம்பர் மூச்சு இரைக்க ஓடி வந்து, கையிலிருந்த அட்டைப் பெட்டியைக் காலாவிடம் கொடுத்தான்.

"இதென்ன சாசாஜி?"

"செருப்பு... உனக்கு!"

பஸ் நகரத் தொடங்கி விட்டது.

"மிக்க வந்தனம் சாசாஜி!... ஆனால் எதற்கு...?"

"நீ என்னோடு ஒரு மாதம் இருந்தாயே, அதற்கு என் நன்றி..." என்ற வார்த்தைகள் அவன் செவிகளை எட்டியபோது பஸ் பத்தடி நகர்ந்து விட்டது. காலா கையை ஆட்டி விடை கோரினான். சகோதரர்கள் இருவரும் தத்தம் கைகளை உயர்த்தி அவனுக்கு விடை



"என்னப்பா சர்வர், சாம்பாரில் வளையல் மாதிரி ஏதோ இருக்கே?"

"அது வளையல் இல்லே சார். வடைக்கு ஓட்டை. வேகாமப் போச்சு, அவ்வளவுதான்!"

பனித்த காட்சியைக் கண்ணீர்த் திரை மறைத்து விட்டது.

இப்போது காலாவை உங்களால் அடையாளமே கண்டுகொள்ள முடியாது. அவன் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறான், ஸ்காலர்ஷிப்பில்.

பப்புவுக்கு எட்டாவது வயது. பள்ளிக்குச் செல்கிறான். காலாவின் பழைய பள்ளிதான்.

நிதி இப்போதெல்லாம் காலாவை அடிப்பதில்லை. வளர்ந்து விட்டானே! ஆனால் தன் குழந்தையைத் திட்டுவது போலத்தான் கோபம் வந்தால் அவனைத் திட்டுகிறான், வாய்க்கு வந்தபடி. அவனைக் குனியச் சொல்லித் தலையில் 'ணங்' என்று குட்டி விட்டுத் தன் மணிக்கட்டிலும் வலி பொறுக்க மாட்டாமல் கூசுகிறாள். அவனோ தலையைத் தேய்த்து விட்டுக் கொண்டு பற்கள் தெரியச் சிரிக்கிறான்.

பனிராம் கள்ளுக்கடை விஜயத்துக்குப் பிறகு வீடு வந்தால் காலாதான் அவனுக்கு ரொட்டி எடுத்துப் போடுகிறான். "எங்கே உன் நிதி?" என்று உறுமுபவனிடம் நிதானமாக, "உடம்பு சரியில்லே அவளுக்கு! படுத்துக்கொண்டிருக்கிறாள்!" என்கிறான். திட்டுக்களையும் அடிகளையும் தன் இதயத்திலும் உடம்பிலும் வாங்கிக் கொள்வதிலும் கூட ஏதோ இன்பம் இருப்பதாக எண்ணுகிறான்.

மாலை வேலைகளில் பப்புவுக்குப் பாடம் கற்பித்துவிட்டு, அவனை மடிமேல் அமர்த்திக் கொண்டு காலா சொல்வது நம் செவிகள் வரை எட்டுகிறது.

"நான் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுப் பெரிய அதிகாரியாவேன்... நாற்காலியில் உட்காருவேன். எனக்குக் கீழ் வேலை பார்ப்பவர்களின் கஷ்டங்களைத் தீர்த்து வைப்பேன். உன்னை டாக்டருக்குப் படிக்க வைப்பேன் பப்பு... நீ நன்றாய்ப் படிக்க வேண்டும். ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் பார்க்காமல் எல்லோருக்கும் ஒரே விதமாய்ச் சிகிச்சை செய்ய வேண்டும். செய்வாயா? கட்டாயம் செய்வாய்... அப்போது உன் அம்மா சந்தோஷப்படுவாள் தெரியுமா? உன் அம்மா ரொம்ப நல்லவள் பப்பு! ஆண்டவன் எத்தனை கருணை மிக்கவன்! உலகம் எத்தனை அழகானது பார்!"

எதிர்காலத்தின் கனவுகளெல்லாம் அவன் கண்களில் பிரகாசிக்கின்றன. அந்தத் தரிசனத்தில் நாம் மனம் லயித்து விடுகிறோம்.

அந்தக் கணம் உலகம் அழகு மயமாய்த்தான் நம் கண்களுக்குப் புலனாகிறது!




செல்வி: மஞ்சுளா   செல்வன்: ராமமூர்த்தி

தஞ்சை ஜில்லா திருவாளப்புத்தூர் காபி ஏஜண்ட் திரு டி. கோவிந்தசாமி அவர்கள் புதல்வர் செல்வன் ஜி. ராமமூர்த்திக்கும், செல்வி மஞ்சுளாவுக்கும்,

திரு கோவிந்தசாமி அவர்களின் புதல்வர் செல்வன் ஜி. வெங்கடாசலபதிக்கும், செல்வி வசந்தாவுக்கும் சம்பந்தில் திருவாளப்புத்தூரில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. மேற்படி மணவிழாவுக்கு பிரமுகர்களும், நண்பர்களும், உறவினர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

வாழ்க மணமக்கள்



செல்வன்: வெங்கடாசலபதி   செல்வி: வசந்தா

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

யோசியுங்கள்

முதலில் இந்தக்
குழந்தையை நன்றாக
வளர்க்க வேண்டாமா?



சத்துமிக்க பால், ஊட்டம் தரும் உணவு, நல்ல உடை, விளையாட பொம்மைகள், புத்தகங்கள்... இவையனைத்தும் உங்கள் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும். அதுதானே உங்கள் ஆசை! கஷ்டமோ, நஷ்டமோ இவையனைத்தையும் உங்கள் குழந்தைக்கு அளிக்கத்தான் போகிறீர்கள். ஆனால், இன்னொரு குழந்தை உடனே பிறந்தால் இது முடியுமா? அடுத்த குழந்தை உடனே பிறப்பதைத் தவிர்க்கத்தானே விரும்புவீர்கள்!

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை. அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ரப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3



இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை

நிரோத் உபயோகியுங்கள்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத்.

பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள். [illegible]



யாருக்குச் சலுகை?

கே. விஜயலக்ஷ்மி

"அம்மா! இந்தப் புகைப்படம் நன்றாக இருக்கிறதா, பாரேன்...." என்று கூறி ஒரு பாஸ்போர்ட் அளவுள்ள புகைப் படத்தைத் தன் அம்மாவிடம் நீட்டினான் குமார்.

அதை வாங்கிப் பார்த்த புஷ்பா, "நன்றாக இருக்கிறது, குமார். ஆனால் எதற்காகப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"மேல் படிப்புக்கு 'ஸ்காலர்ஷிப்' புக்கு மனு செய்து கொள்ளப் போகிறேன், அம்மா!" என்றான்.

திகைத்துப் போனாள் புஷ்பா ஒரு கணம்.

"அப்பாவிடம் கேட்டாயா?"

"இல்லையம்மா!"

"அப்பாவிடமும் கேட்கவில்லை. என்னிடமும் கேட்கவில்லை. பின்னே யாரைக் கேட்டுக் கொண்டு 'ஸ்காலர்ஷிப்'புக்கு மனுச் செய்து கொள்வது என்று நிர்மானித்தாய் குமார்!" கொஞ்சம் கடுமையான குரலிலேயே வினவினாள் புஷ்பா.

"நானாகத்தான் முடிவு செய்தேன் அம்மா. கிடைத்தால் நல்லதுதானே?" தன் செயலுக்குத் தானே சமாதானம் சொல்கிற பாவத்துடன் சிரித்தான் குமார்.

"உனக்கு எதற்கு ஸ்காலர்ஷிப்! யாராவது ஏழை — எளியவர்களுக்குக் கிடைத்துவிட்டுப் போகட்டும்!"

"அரசினரின் கருத்துப்படி நாம் பின் தங்கிய வகுப்பினர் அம்மா."

"இருக்கலாம். ஆனால் உன் படிப்புக்குச் செலவு செய்யக்கூடிய நிலைமையில் உன் தகப்பனார் இருக்கிறார்!"

வாய் திறவாமல் சிறிது நேரம் அங்கே நின்று விட்டு மெள்ள அவ்விடத்தை விட்டு வெளியேறினான் குமார்.

'இத்தனை சுயநலம் இவனுக்கு எங்கிருந்து வந்தது?'

கையிலிருந்த பூச்சரத்தில் பாதியைச் சுவாமி படத்துக்குப் போட்டுவிட்டு மீதியைத் தன் தலையில் வைத்துக் கொண்டு கண்ணாடி அருகில் வந்தாள். கண்ணாடிக்கு இரு பக்கங்களிலும் மாட்டியிருந்த இரு பெண் மணிகளின் படத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். ஒன்று அவள் தாய் தங்கத்தினுடையது. இன்னொன்று அவள் மாமியார் சாரதாவினுடையது. அவள் பார்வை கடைசியில் தன் தாயின் படத்தில் நிலைத்தது.

"அம்மா! உன் பேரன் சொன்னதையெல்லாம் கேட்டாயா? உன் பேரனுக்கு இப்படியொரு எண்ணம் ஏற்படலாமா?" வாய்விட்டே அரற்றினாள் புஷ்பா.

"என்ன, புஷ்பா! நீயே பேசிக் கொள்கிறாய்?" என்று கேட்டவாறே வந்தாள் சாரதா.

"ஒன்றுமில்லை, அத்தை! நமக்கெல்லாம் பிடித்தமில்லாத ஒரு காரியத்தைச் செய்யத் தீர்மானித்திருக்கிறான் உங்கள் பேரன்!" என்றாள் புஷ்பா அங்கலாய்ப்பாக, குறையாக.

"என்ன அது?"

குமார் சொன்னதை அப்படியே தன் மாமியாரிடம் ஒப்புவித்தாள் புஷ்பா.

"இவ்வளவுதானே, புஷ்பா! என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன். அவனை அவன் போக்கிலேயே விட்டு விடுவதுதான் நல்லது. ஒருவனுக்கு உயர்ந்த குணமாகட்டும், தாழ்ந்த குணமாகட்டும், அது அவனுக்கு இயல்பாகவே அமைந்திருக்க வேண்டும். எதையுமே நாம் ஒருவரிடம் வற்புறுத்தித் திணிக்க முடியாது. குமார் ஒன்றும் அறியாத பிள்ளை யில்லையே..." நிதானம் தவறாமல் பேசினாள் சாரதா.

சாரதா ஒரு பிரபல பாடகி. ஆரம்ப காலத்தில் அவளுடைய இன்றையப் புகழுக்கும் பெருமைக்கும் காரணமான இசைத் திறனை அவள் அடைய உதவியது ஓர் அதிசயமான விஷயம்.

அந்நாட்களில் சாரதாவின் தாய் அபராஞ்சி ஒருவர் வீட்டில் சமையற்காரியாக இருந்தாள். தாயின் உதவிக்காக அந்த வீட்டுக்குத் தினமும் போய் வருவாள் சாரதா. அதன் மூலம்தான் அவளுக்கு அந்த வீட்டுக்காரர்களின் பெண் தங்கத்தின் தோழமை கிடைத்தது. அது நாளடைவில் வளர்ந்து செழித்து நட்புக்கே ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தது.

தங்கத்தின் அன்னை தங்கத்துக்கு வாய்ப் பாட்டுக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தாள். பாடகர் தினமும் வீட்டுக்கு வந்து தங்கத்துக்குப் பாட்டுப் பயிற்சி செய்து வைக்கத் தொடங்கினார். ஆனால் தங்கத்துக்குப் பாட்டு என்றாலே வேப்பங் காயாகக் கசந்தது. சங்கீதம் கற்றுக் கொள்வதில் தனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை என்று அம்மாவிடம் சொல்லிப் பார்த்தாள். அம்மாவோ தன் பெண் எல்லாம் தெரிந்த சகலகலா வல்லியாகத் திகழ வேண்டும் என்று ஆசைப்

பட்டாள். அதனால் அவன் பெண்ணின் விருப்பத்தைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை.

தங்கம் பாட்டுக் கற்றுக் கொள்ளும்போது சாரதா பக்கத்தில் போய் நிற்பாள். இதைக் கண்ட தங்கத்தின் தாய்க்கு எங்கே சாரதாவுக்குப் பாட்டு வந்து விடுமோ என்று பொறாமை தோன்றியது. எனவே, மறு நாளே பாட்டு வாத்தியாரிடம், "நீங்கள் எங்கள் வீட்டுக்கு வரவேண்டாம். தங்கம் உங்கள் வீட்டுக்கே வந்து கற்றுக் கொள்வாள்" என்று கூறி விட்டாள்.

அதுவே தங்கத்துக்குக் கொண்டாட்டமாகி விட்டது. பாட்டு வாத்தியார் வீட்டுக்குப் போகிறேன் என்று அம்மாவிடம் சொல்லி விட்டு நேராகச் சாரதாவின் வீட்டுக்குப் போவாள். சாரதாவைப் பாட்டு வாத்தியாரின் வீட்டுக்கு அனுப்பி விட்டு அவள் சாரதாவின் வீட்டில் உட்கார்ந்து ஏதேனும் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

முதலில் தங்கத்தின் இந்த ஏற்பாட்டுக்குப் பாட்டு வாத்தியாரும் சாரதாவும் சம்மதிக்கவில்லை.

"நீங்கள் மறுத்தால் என் அம்மா வேறு ஒரு பாடகரை அமர்த்தாமல் இருக்கமாட்டாள்! எதற்கு வருகிற லக்ஷ்மியை நீங்கள் வேண்டாம் என்று உதற வேண்டும்? சாரதாவும் வருகிற பாட்டை ஏன் விட வேண்டும்?" என்று கேட்டுத் தங்கம்தான் அவர்களை வற்புறுத்தித் தன் விருப்பத்துக்கு இணங்க வைத்தாள்.

இரண்டு வருட காலம் இந்த நாடகம் நடந்தது. சாரதாவும் நன்றாகப் பாடத் தொடங்கி விட்டாள். பாட்டு வாத்தியாரும் அவளைத் தம் தம்பிக்கே மணம் முடித்துக் கொண்டு விட்டார். அதற்கு இரண்டு வருடங்களுக்குப் பிறகுதான் தங்கத்துக்குக் கல்யாணம் நடந்தது. அதன் பிறகு தோழிகள் இருவரும் பிரிந்து இருவேறு திசைகளுக்குச் சென்று விட்டார்கள். இதற்குள் சாரதா ஓர் ஆண் மகவுக்குத் தாயாகி யிருந்தாள். அந்த நல்ல செய்தியைத் தெரிவிக்கச் சாரதாவுக்குத் தங்கத்தின் விலாசம் கிடைக்கவில்லை.

ஒரு நாள் சாரதாவின் மகன் குமார் தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டான், தன் அலுவலகத்தில் டைப்பிஸ்டாக இருக்கும் ஒரு பெண்ணை மணக்க விரும்புவதாக.

"எனக்குத் தடை இல்லை. இருந்தாலும் ஒரு நாளைக்கு அவளை நம் வீட்டுக்கு அழைத்து வா, பார்க்கலாம்" என்றாள் சாரதா.

மறு நாளே குமார் புஷ்பாவை அழைத்துக் கொண்டு வந்து நின்றான்.

சாரதா தன் எதிரில் எழில் வடிவமாக நின்று கொண்டிருந்த புஷ்பாவைக் காலோடு தலை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தாள். "நீ... நீ... தங்கத்தின் பெண்ணா...? தங்கமேவா ?" என்று உற்சாகமாக வினவினாள்.

"நான்... நான் தங்கத்தின் மகள். என் பெயர் புஷ்பா. உங்களை எனக்குத் தெரியும். ஆனால் என்னை... என்னை உங்களுக்குத் தெரியாது என்று எண்ணினேன்..." புஷ்பா மலர்ச் செண்டாகச் சாரதாவின் கால்களில் சரிந்து விழுந்தாள்.

அவளை அப்படியே அள்ளி எடுத்துக் கொண்டாள் சாரதா.

ஆருயிர்த் தோழி தங்கத்தின் மகள் புஷ்பா சாரதாவுக்கு மருமகளாக வந்து இன்றைக்கு இருபது வருஷங்களாகி விட்டன. குமார் பழைய நினைவுகளைக் கிளறி விட்டான்.

"நியாயமாக ஓர் ஏழைப் பையனுக்குக் கிடைத்திருக்க வேண்டிய சலுகையைக் குமார் பயன்படுத்திக் கொள்ளப் போகிறான். நீங்களும் அதைக் கேட்டுக் கொண்டு சும்மாவிருக்கிறீர்களே, அத்தை?"

சாரதாவின் இதழ்களில் புன்முறுவல் இழைந்தது.

"அம்மா! கல்லூரிக்குப் பீஸ் கட்ட வேண்டும். பணம் தருகிறாயா?" என்று கேட்டுக் கொண்டே புஷ்பாவின் அருகில் வந்தான் குமார்.

"என்னிடம் விளையாடுகிறாயா குமார்? உனக்குத்தான் ஸ்காலர்ஷிப் கிடைத்திருக்குமே! எதற்காகப் பீஸ் கேட்கிறாய்?" என்று கோபமாகக் கேட்டவள், "உனக்காகச் செலவு செய்யக் கூடியதைக் கொண்டு ஓர் ஏழை மாணவனுக்குக் கட்டச் சொல்லப் போகிறேன். அப்போதுதான் எனக்குத் திருப்தியாக இருக்கும்..." என்றாள்.

"அதற்காகத்தானே அம்மா, கேட்கிறேன்" என்றவன் உதடுகளைக் கடித்துக் கொண்டு, "உண்மையைச் சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டாயே, அம்மா?" என்று கேட்டான்.

"என்ன விஷயம், சொல்லு."

"என் நண்பன் சீனுவை உனக்குத் தெரியும்....."

"ஆரம்பப் பள்ளியிலிருந்து உன் கூடவே படித்துக் கொண்டு வருகிறானே... அவனைத் தானே சொல்கிறாய் ?"

"ஆமாம். அவனேதான்."

"தெரியுமே! அவன் உன்னைவிட நன்றாகப் படிப்பானே!"

"அவனுக்குத் தொடர்ந்து எம். எஸ்ஸி. படிக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் அவன் குடும்பம் அன்றாடம் சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகிறது. அவனுக்கு அப்பா கிடையாது. மூன்று தங்கைகள். விதவைத் தாய். தாத்தா பாட்டி வேறு... ஆனால் அவன் முற்போக்கு வகுப்பில் பிறந்து பெரும் குற்றம் இழைத்து விட்டானே! அதனால் அவனுக்கு உதவித் தொகை கொடுக்க மறுத்து விட்டார்கள். எனக்கு உதவித் தொகை தருவதற்கு இணங்கி விட்டார்கள். அதனால்...." மேலே சொல்லாமல் நிறுத்தினான் குமார்.

"புரிகிறது, குமார். உனக்கு ஸ்காலர்ஷிப் வாங்கிக் கொண்டு விட்டாய். உனக்காக நாங்கள் செலவழிக்கவிருக்கும் ரூபாயை உன் நண்பன் சீனுவுக்காகச் செலவு செய்யும்படி கூறுகிறாய். அப்படித்தானே?"

புஷ்பாவின் முகத்தில் பெருமிதம் பொங்கி வழிந்தது. அன்பு கனிய மகனைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.


"என்ன இருந்தாலும் தங்கத்தின் பேரனாயிற்றே! அந்த வாசனை போகுமா?" என்று கேட்டுக் கொண்டே வந்து கை சொடுக்கித் திருஷ்டி கழித்தாள் சாரதா.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam




AIY. .85-M.167 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



WHEN YOU THINK OF ECONOMY WITH QUALITY... THINK HOW MUCH MORE COVERAGE YOU GET FROM



APC-103

Spartan *Acrylic*

PLASTIC EMULSION PAINT

You have to think of the combined aspect of economy with quality when you think of painting.

For the best you can get in both economy and quality, get Spartan Acrylic Plastic Emulsion Paint. A little goes a long way and lasts a long time on the surface, protecting and pleasing areas which would otherwise remain lifeless and dull.

For a refreshing variety of colours too, Spartan has the most to offer in varying shades and hues.

ADDISONS PAINTS & CHEMICALS LTD.
Sembiam, Madras-11